காவேரி

SEPTEMBER-52 நந்தன - புரட்டாசி

நீங்கள் இன்று உங்கள் பற்களை **மக்ளீன்** செய்தீர்களா?

“... சிறு வயதிலேயே மகளீன்ஸ் பற்பசை யை நான் உபயோ கிக்கத் தொடங்கினேன். எனது பல் டாக்டரிடம் சென்ற தடவை நான் போன போது என் பற்கள் சிறந்து விளங்குவதை அவர் பெரிதும் பாராட்டினார்”

ஆமாம். அவள் தனது பற்பசையை நன்கு தேர்ந்தெடுத்திருக்கிருள் என்பதை நீங்கள் காணலாம். அவள் புன்னகையின் மூலம் தனது பளபளப்பான பற்களைக்காட்டிப் பெருமைப்பட்டுக்கொள்கிருள். மக்ளீன் பெராக்ஸைட் பற்பசை பற்களை வெண்மையாக்குவதுடன் விடவில்லை. ஈறுகளுக்கு வலுவும் ஆரோக்கியமும் அளித்து சுவாசத்தை இனிதாக்குகிறது. இன்றே மக்ளீன் உபயோகிக்கும் பழக்கத்தை ஆரம்பியுங்கள். மக்ளீன் பொராக்ஸைட் பற்பசையை இன்று முதல் தினமும் இருமுறை உபயோகியுங்கள்.

இப்போது பெரிய அளவிலும் சிக்கனமான மாபெரும் அளவிலும் கிடைக்கிறது.

பற்களை அதிக வெண்மை யாக்குகிறது

வர்த்தக விவரங்களுக்கு :
ஜே. எல். மார்ஸன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்,
தபால் பெட்டி 6527 பம்பாய், தபால் பெட்டி 387 கல்கத்தா, தபால் பெட்டி 1370 மதருஸ்.

MTY-12 TAM.

சரித்திர இந்தியா

அம்ருத்ஸாரின் தங்கமயமான கோவில்

அமிருதசரஸ் நகரில் மிகவும் கவர்ச்சியளிக்கவல்ல காட்சி அங்குள்ள பிரஸித்திபெற்ற பொற்கோயில் தான். இந்நூற்ருண்டு ஆரம்பத்தில் ரஞ்சித்சிங்கினுல் கட்டப்பெற்றது இது. அழகுக் கலையின் இருப்பிடமாக விளங்குவதுடன், சீக்கிய மதத்தின் இருதயம் போல் விளங்குவதால் இக்கோயில் இரட்டிப்பு முக்யத்துவம் வாய்ந்தது. சீக்கியர்களின் இருதய பூர்வமான அபிமானத்திற்குப் பாத்திரமான மற்ருெரு கலைப் பொக்கிஷம்—

மேன்மையான புத்தம் புதிய—

ப்ருக் பாண்ட் டீ.





ப்ருக் பாண்ட் தேயிலை

இந்திய தேயிலைகளுள் சிறந்தது

இந்தியாவிற் சிறந்த பாக்கெட்டுகளில் கிடைக்கும்.



பரம்படித்தல்.

ஈரமுள்ள உங்கள் நெல் வயல்களில் பெர்குஸனுடன்
இணைக்கப்பட்ட

மல்டிபர்பஸ் ரோடாவேடரினல்

செய்யுங்கள்

வறண்ட நிலத்திலும் அது இயங்குவதால் ஒரே தடவை உபயோகத்தில் விதை நிலமும் தயாராகிறது

பொதுவாக விவசாயத்திற்கேற்ற சாதனம் ● ஓரமாகவுள்ள நிலங்களையும் விவசாயத்திற்குக் கொண்டுவருவதால் படுகை நிலங்களுக்கு மிகவும் ஏற்றது ● வேலிப்புதர் அழித்தல் ● மரம் நடுதல் ● பழத்தோட்டம் வைத்தல் ● நெல் விவசாயம் ● கரும்பு பயிர் செய்தல் ● நிலம் தூர்த்தல் முதலியன

FERGUSON SYSTEM

கமாணி எஞ்சினீயரிங்கார்ப்போரேஷன் லிட்.

கமாணி சேம்பர்ஸ், பலார்டுஎஸ்டேட், பம்பாய்

F.52. 9(B) T

டீலர்கள் :

காமனி இன்ஜினீயரிங் கார்ப்பரேஷன் லிட்., சாகர்மான்ஷன், ஜோன்ஸ் தெரு, பிராட்வே, மதராஸ்–1,
ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (தென் இந்தியா) லிட்., கோயம்பத்தூர்.
வெப்ஸ் பார்ம் மெகானிஸேஷன், 30, மகாத்மா காந்தி ரோடு, பெங்களூர் & மைசூர்.

ஸ்டாக்கிஸ்ட்கள்.

காமினேனி பார்மிங் கார்ப்பரேஷன், வராஹபட்டினம் & குடிவாடா. S. பாப்பண்ண செட்டி, ஹோஸ்பேட், சுந்தரம் ஸன்ஸ், 67 பிரிட்ஜ் ஸ்டேஷன் ரோடு தல்லாகுளம் P. O. மதுரை: பார்மிங் மெஷினரி & சர்வீஸஸ், பெஸன்ட் ரோட், பக்கிங்ஹாம்பேட் போஸ்ட், விஜயவாடா: கள்ளிக்கோட்டை, உதகமண்டலம், திருவனந்தபுரம் எலக்டிரிக் டைஸல் எக்குப்மெண்ட் கம்பெனி, அல்லபி; A. கோபாலகிருஷ்ணன் கோட்டாரம் கல்பட்டா வெய்நாடு.

பொருள் அடக்கம்

நந்தன மலர் 12 | புரட்டாசி இதழ் 2

சதங்கையொலி 13
தி. ப. பத்மநாபன்

லக்ஷ்ய புருஷன் (புதிய தொடர்கதை)... 16
கே. சுந்தரம்மாள்

ராஷ்டிரபதி பவனம் (பழைய வைஸ்ராய் லாட்ஜ்)... ...21
கே. ஸ்ரீ.

ஜோசியம் பலித்தது!... 25
ஜய்லன்

மணப் பெண் 33
கோமதி சுப்ரமணியன்

ஐயோ பல்லி! 41
நா. கி. நாகராசன்

உல்லாசப் பிச்சை 44
ஸ்ரீ.

சங்கீத ரஸிகர்கள்! 46
R. P. மல்லாரி

லக்ஷ்மீ... 53
கிருஷ்ணன் பாலா

அழியாக் காதல் 60
வேலு. வில்லவன்

டில்லித் தபால் 66
கே. ஸ்ரீநிவாஸன்

மறைந்த மாயம் 72
ஏ. எஸ். ராகவன்

குழந்தையும் நாதமும்... 78
ஸ்ரீ.

புத்தக விமர்சனம் 79

குறிப்பு:
'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

ARMSTRONG
THE BETTER BICYCLE

ஆம்ஸ்டிராங்
சிறந்த பைஸைகிள்

சிறந்த பைஸைகிளாகிய **ஆம்ஸ்டிராங்** ஒன்று உங்களிடம் இருந்தால் போதும்; வேலை நிமித்த மாகவோ வேடிக்கையாகவோ எவ்வித தொந்தரவும் இன்றி நீங்கள் ராஜபாட்டைபோலச் சவாரி செய்யலாம். ஒரு **ஆம்ஸ்டிராங்** வாங்குங்கள். ஸைகிள் தொழிலில் பிரசித்திபெற்ற தயாரிப்பாளர்களின் சிறந்த தயாரிப்பு உங்களுக்குச் சொந்தமாயிருக்கிறது என்கிற பெருமை உங்களுக்கு விரைவில் ஏற்படும். அதன் பெயரே குறிப்பிடுவதுபோல், வலிவாகவும், இந்தியாவின் கரடுமுரடான ரஸ்தாக்களில் நீடித்து நின்று வருஷக்கணக்கில் நம்பிக்கையளிக்கத் தக்கவாறு உழைப்பதாகவும் அது விளங்குகிறது. **ஆம்ஸ்டிராங்** — மிகவும் பிரபலமான பைஸைகிள்—ரஸ்தாவில் அதை நம்புங்கள். அதற்குக் கொடுக்கும் விலை அதற்குத்தகும்.



199336

விநியோகஸ்தர்கள் :

ராயல் ஸைகிள் அண்டு மோட்டார் கம்பெனி

13/14, பிராட்வே, தபால் பெட்டி நெ. 219, சென்னை-1.

ARMSTRONG
THE BETTER BICYCLE
ARMSTRONG CYCLES
BIRMINGHAM

காவேரி

நந்தன ஸு மலர் 12	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	புரட்டாசி இதழ் 2

சதங்கையொலி

தி. ப. பத்மநாபன்

சென்னையில் திருவல்லிக்கேணிப் பள்ளிக்கூடமொன்றில், நானே ஆசிரியனாயிருந்தேன். வேணுகோபால் எனது நண்பன். ஆசிரியனுங்கூட. நாங்கள் இருவரும் நாள்தோறும் கடற்கரைக்குச் செல்வதுண்டு. ஒரு நாள் மாலை அலை வீசுமிடத்திற்கு மேல் மணல் மேட்டில் உட்கார்ந்து கடலை நோக்கிக்கொண்டிருந்தோம். நல்ல சுத்தமான காற்று வீசிற்று.

திடீரென்று வேணுகோபால் என்னை உற்று நோக்கினான். ஏதோ கருத்தொன்று அவன் முகத்தில் படர்வது போலிருந்தது. ஆகாயத்தில் மேகம் கருக்கொண்டது. பலமான காற்று. அதன் வேகம் மரங்களை நிலை குலையச் செய்தது. அவை தலை விரித்தாடுவது தோன்றின.

"என்ன பேய்க்காற்று!" என்றேன்.

"மாதவா! பேய் பிசாசுகளை நீ நம்புகிறாயா?"

இப்படி ஒரு கேள்வி போட்டான் வேணுகோபால்.

"இப்பொழுது இல்லை,"

"அப்படியானால்...... ?"

"சிறுவனாயிருக்கும் போது என் தாயார் கதை சொல்லுவாள். சில சமயம் அதில் ராட்சதன் முதலியோர் வருவார்கள். வயது ஆக ஆக, உலக ஞானம் வளரவே, பேய் பிசாசுகளில் எனக்கு நம்பிக்கையே போய்விட்டது. நல்ல வேளை,"

"எனக்கு அவ்வளவு ஞானம் முற்றவில்லை. தைரியமும் பிறக்கவில்லை. ஆனால் பயந்து நடுங்கவுமில்லை. ஒருவிதமான மனநிலை. எந்த முடிவுக்கும் என்னால் வரக்கூடவில்லை" என்று சந்தேகங்கொண்டான் வேணுகோபால்.

"ஆராய்ச்சியும் அனுபவமும் முதிர முதிர என் கொள்கைக்கே வந்துவிடுவாய்." இந்தப் பதிலில் பெருமிதங் கொண்டேன்.

நான் குடும்பத்துடன் வீட்டில் குடியிருப்பவன். வேணுகோபால் ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு பள்ளிக்கூடத்திலேயே தங்கியிருந்தான்.

"நம்முடைய பள்ளிக்கூடத்தில் என்றைக்காவது இரவில் படுத்திருக்கிறாயா?" என்று கேட்டான் வேணுகோபால்.

"இது ஒரு பெரிய கேள்வியா? நாடகங்கள், பாட்டுக் கச்சேரிகள் அங்கே நடக்கும். இரவில் வெகு நேரமாய்விடும். நம்முடனுள்ள ஆசிரியருடன் இரவை அங்கேயே கழித்திருக்கிறேன். இதெல்லாம் சில வருஷங்களுக்குமுன்."

"அப்பொழுது பள்ளிக்கூடத்துக் கொல்லையில் பெரிய மாமரம் ஒன்று இருந்ததா?"

"ஆமாம். இப்பொழுது அதை வெட்டி விட்டார்கள்."

"வெட்டினபின் நீ பள்ளிக்கூடத்தில் தங்கினதுண்டா?"

"இல்லை. ஏன்?" என்று கொஞ்சம் தயக்கம் கொண்டேன்.

"ஒன்றுமில்லை, மரம் இருந்தபோது நல்ல காற்று அடித்ததாம். சரி, நம்மில் சிலர் பள்ளிக்கூடத்திலேயே தங்குவது உனக்குத்தான் தெரியுமே. இன்று அவர்கள் விடுமுறைக்காக ஊருக்குப் போகிறார்கள். இரவில் பேச்சுத் துணைக்கு நீ வரமுடியுமா என்று கேட்கிறேன்." இவ்விதம் சாதாரணத் தொனியுடன் கேட்டான் வேணுகோபால்.

ஒப்புக்கொண்டேன். இதற்குள் இருட்டிவிட்டது. சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஒன்பது மணிக்குமேல் பள்ளிக்கூடத்துக்கு வருவதாக உறுதி சொன்னேன். இருவரும் பிரிந்தோம்.

சுமார் ஒன்பதரை மணிக்குப் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தேன். அங்கு விளக்கு வெளிச்சமே இல்லை. பெயர் சொல்லி வேணுகோபாலைக் கூப்பிட்டேன், இரண்டு மூன்று குரலுக்குப் பின் எழுந்து மின்சார விளக்கைப் போட்டான். கதவையும் திறந்தான்.

"எனக்கு நல்ல தூக்கம் வந்தது" என்றான்.

நானும் படுத்துக்கொண்டேன். எனக்கோ தூக்கம் பிடிக்கவில்லை. மணி பத்து அடித்தது. அப்புறம் அரையும் அடித்தது. அன்று நல்ல மழைக்கால இருட்டு, தெருவிலோ அமைதி. ஊர் அடங்கினது போலிருந்தது. நண்பனோ குறட்டை விட்டுத் தூங்கிக்கொண்டிருந்தான். நானோ தூக்கத்தை வரவழைத்துக்

கொண்டிருந்தேன். இதற்குள் மணியும் பதினொன்று அடித்தது.

இதென்ன களேபரம்! இரண்டாவது மாடியில் தடாலென்று பலகைகள் விழும் சத்தம். இல்லை, பேய்க் காற்று ஒருவேளை ஜன்னல் கதவை அடைத்துத் திறந்து உடைக்கிறதா? இருக்கலாம். அலட்சியமாய்ப் படுத்துக்கெண்டேன். கால் நாழிகையில் அதேபோல் முதல் மாடியிலும் சத்தம் கேட்டது. எல்லாம் காற்றின் அட்டகாசம்........ காற்றா? இராதுபோல் தோன்றுகிறதே. பலகைகள் தரையில் விழுவதுபோல் ஓசை கேட்கிறது. ஜன்னல் சத்தமானால் அப்படியிருக்குமா? அந்தோ! மாணவர் உட்காரும் மேஜைகளைத் தூக்கி இழுப்பதுபோல் காதில் விழுகிறது, உற்றுக் கவனித்தேன். ஜன்னலுமில்லை. பலகையுமில்லை. மேஜைகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொள்கின்றன. எலி பெருச்சாளிகள் சண்டையானால் மேஜையைத் தூக்கிப் போடும் சத்தம் எப்படியுண்டாகும்? என்னதான் நடக்கிறது பார்ப்போம், தூக்கமே போய்விட்டது.

இதென்ன சதங்கையொலி! ஆம், காலில் கட்டின கஜ்ஜை தான். கவனிக்கும் நிலை மாறித் திகைப்பு உணர்ச்சி உண்டாய்விட்டது. கலீர் கலீரென்கிற நாதம் — சதங்கை கட்டி நடப்பது போல், நினைப்பு எங்கெல்லாமோ சஞ்சாரம். ஞாபகம் குழந்தைப் பருவத்துக்குச் சென்றுவிட்டது. அதிலும் என் தாயார் சொன்ன கதைகளில் பயங்கரமான கட்டங்களின் காட்சி நினைவுக்கு வந்தது. அப்பொழுது தாயார் அருகில் இருந்ததால் பயமெதுவும் தோன்றவில்லை. இப்பொழுது தான் என்ன, நடுக்கமா எனக்கு? அது ஒன்றுமில்லை. ஒரு திகைப்பு, அவ்வளவு தான்.

சதங்கையொலி படிக்கட்டில் இறங்கிக் கீழே வந்து கொண்டிருக்கிறது. ஹா! ஆள் தான் இறங்கி வருகிறது கஜ்ஜை கட்டி. எழுந்து உட்கார்ந்து கொண்டேன். சதங்கையொலி எங்கள் பக்கமாக வருவது போல் கேட்டது. ஆமாம், வரத்தான் செய்கிறது— தலை மாட்டுப் பக்கம். உடனே பலகைகள் தரையில் விழும் அதிர்ச்சி. பெஞ்சுகளோடு பெஞ்சுகள் முட்டுகின்றன. சதங்கையொலி நின்று பலகைகள் மோதும் ஆரவாரம். எனக்கு ஒரு சந்தேகம். இதென்ன கனவா? கையால் தரையைத் தடவினேன். இல்லை. கனவில்லை. நினைவோடு தான் இருக்கிறேன், ஆரவாரமும் ஓயவில்லை. இதற்குள் நெஞ்சு படபடக்க ஆரம்பித்துவிட்டது. பல்லைக் கடித்துக் கொண்டு நெஞ்சை அழுத்தமாய்த் தடவிக் கொடுத்தேன். எழுந்து நின்று தூணைப் பிடித்துக்கொண்டு மின்சார விளக்கைப் போட்டேன். ஆரவாரம் நின்றது. கொஞ்ச நேரம் அப்படியே தூணோடு சாய்ந்துகொண்டிருந்தேன். மணி பன்னிரண்டு அடித்தது. இதற்குள் ஒரு தூக்கம் தூங்கிவிட்டு வேணுகோபால் மெள்ளக் கண்ணை விழித்தான்.

“என்ன மாதவா! ஏன் விளக்குப் போட்டாய்?” என்றான்.

“ஒன்றுமில்லை. ஏதோ சப்தம் கேட்டது.”

“வேறொன்றும் இராது. எலிகள் உபத்திரவம் உண்டு. பூனையின் நடமாட்டமும் இருக்கிறது, அதுதான் காரணம்.”

“சரிதான்” என்று சொல்லி விளக்கை அணைத்தேன்.

என் கலவரத்தை ஏன் வெளியிடவேண்டும்?

படுத்துக்கொண்டாலும் தூக்கமேது! காதில் சதங்கை ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால் விளக்குப் போட்டபின் நெஞ்சுப் படபடப்பு நின்றிருக்கிறது. சில வினாடிகளுக்குள் மறுபடியும் சதங்கையொலி—வெளியேறிப் போகிறது. மாடியேறுவது போலிருந்தது, அப்புறம் ஒலியும் நின்றுவிட்டது. ஆனால் மாடியில் பலகைகள் ஒன்றின் மேலொன்று விழுவதுபோல் தடால் தடால் என்னும் சத்தம், எல்லாம் ஓய்ந்ததென்று நினைத்தேன். தொல்லையோ ஓய்ந்தபாடில்லை.

என் நினைவு சிறு பிராயத்திற்குச் சென்றது, அப்பொழுது பேய்க் கோவில்களில் வருஷாந்தரக் கொடை நடக்கும். சுடலைமாடன், சங்கிலிப் பூதத்தான், பேச்சி அம்மன்—இவர்கள் கோவிலில் பந்தல்போட்டு, வேப்பிலைத் தோரணங்கள் கட்டி, செவ்வாய் அல்லது வெள்ளிக் கிழமைகளில் பொங்கல் இடுவார்கள். விடிய விடியப் பறைக்கொட்டு. நடுநிசியில் ஆடு, கோழி பலியிடுவது வழக்கம். பூசாரிக்கோ பயங்கரமான அலங்காரம். இடுப்பில் சரிகை போட்ட வெல்வெட்டுச் சல்லடம். கழுத்தில் வேப்பிலை மாலை. முகத்திலெல்லாம் இரத்தம்போன்ற மஞ்சனை மெழுக்கு. நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டு. அதற்கு மேல் விபூதி. விரித்ததலை. கையில் வேப்பங் குழை. இந்தக் கோலத்தில் ஆட்டம், குதிப்பு அங்குமிங்கும் துள்ளித்தாண்டுதல்—இத்துடன் தொண்டை கிழிய அலறும் கூச்சலும் கேட்டால் எப்படியிருக்கும்? எனக்கு அப்பொழுதுபயந்தான். ஆனால் என்னுடன் சிறுவர் இருப்பார்கள். இருந்தாலும் பேய்க்கொடை என்றால் எங்களுக்குப் பயந்தான், இரவு பன்னிரண்டுமணிக்குமேல் அந்தப் பேய்களுக்குத் திரளைகொடுப்பார்களாம்—அதாவது படைத்திருந்த சோறு, கறி, மாமிசம் எல்லாம் கலந்து உருண்டையாக உருட்டி, பூசாரி ஆகாயத்தில் எறிவானாம். அந்தநாளில் எறிந்த திரளை கீழே விழாதாம். அந்தக் கோவில் தெய்வமே அதை வாங்கிக்கொள்ளுமாம்—ஆகாயத்தில் நின்றுகொண்டே, ஆனால் எவருக்கும் உருவம் தெரியாது. இப்பொழுது என்ன நடக்கிறதோ, யார் கண்டார்கள்?

அந்தப் பூசாரிக்குக் கோமரத்தாடி என்ற பெயருண்டு. கொடையன்று சாயங்காலம் கும்பம் எடுத்து ஆடுவார்கள். இது கரகவிழா,

இதில் கோமரத்தாடியும் பேயலங்காரத்துடன் முன்னால் ஆடிவருவான். அவன் கையில் தீச்சட்டியும் உண்டு. இடது கையில் சட்டி, வலது கையால் எல்லாருக்கும் விபூதி கொடுப்பான். நானும் அந்த விபூதி வாங்கியிருக்கிறேன். பயம் ஒருபக்கம், அந்தத் தெய்வத்தின் அருள் வேண்டுமென்று ஆவல் ஒருபக்கம். ஏனென்றால் அந்த நாளில் இத்தெய்வங்களெல்லாம் கிராமத்தின் காவல் தேவதைகளாயிருந்தன.

கோமரத்தாடிக்கும் காலில் சதங்கையுண்டு. இப்பொழுது அந்தக் காட்சி என் மனக்கண்முன் நிற்கிறது. இந்த ஞாபகங்களுக்கிடையே மாடிக்கு ஒரு நினைவு செல்கிறது. ஓசைகேட்கும்போது, அவை எப்படி மறக்க முடியும்? மணி ஒன்றடித்தது. இவ்வளவு தானா? ஐந்தடித்திருந்தால் எவ்வளவு நிம்மதி! அதோ சதங்கையொலி! மறுபடியும் படிகளில் இறங்கி வருகிறது.

மழுப் போல் ஒன்று என் நெஞ்சில் இறங்குகிறது. கல்லாய்ச்சமைந்து நிற்கிறேன். மார்பு துடிக்கிறது. மயிர் சிலிர்க்கிறது. பல்லைக் கடித்தாலும் மனத்தில் கலவரம், சதங்கை யொலி எங்கள் பக்கமாக வருகிறது. தலைமாட்டில் பெஞ்சுகள் மோதும் சத்தம். நான் நினைத்தது தான், சந்தேகமில்லை. என்ன சனியன் இது! ஐயோ, கலீர் கலீரென்கிறதே. இங்கு வந்தும் ஆடுகிறதே. மனமும் வயிறும் சேர்ந்து கலக்கம் எடுத்தன. யோசனை ஒன்றும் தெரியவில்லை. கைகால்கள் நடுங்கின. விளக்குப் போடவும் புத்தியில்லை. என்ன பிரமை! அந்தப் பக்கமாகப் பார்க்கவும் செய்கிறேன். சதங்கை தான் ஒலிக்கிறது. இருட்டில் உருவம் தெரியவில்லை, உருவங்காணாமல் ஒலி மட்டும் கேட்பது பயத்தை அதிகப்படுத்துகிறதே. தூணை இறுகப் பிடித்துக்கொண்டேன். பிடிக்கப் பிடிக்கத் தானே கை நழுவுகிறது. எனக்கு மனமில்லை, இருந்தாலும் என்னை மீறி என் கண் அந்தப் பக்கமே பார்க்கிறது. சதங்கையும் ஒலிக்கிறதே! விளக்கையாவது போடலாமா? அது தான் செய்யத் தைரியமில்லை. கையும் அசையவில்லை. உடம்போ வேர்த்துவிட்டது. உள்ளூற ஒரு நடுக்கம். கை கால்கள், உடம்பும் நெஞ்சும் சேர்ந்து ஒரே விதிர் விதிர்ப்பு. கால் தரையில் பாவவில்லை. தூணின் ஆதரவு எப்படியோ தளர்ந்துவிட்டது; நிற்க முடியாமல் கீழே சாய்ந்துவிட்டேன்.

மறுநாள் காலையில் எழுந்ததும் பக்கத்தில் வேணுகோபாலும் டாக்டரும் நின்றார்கள். என் நெஞ்சையும் கையையும் தொட்டுப் பார்த்தார் டாக்டர். தெர்மாமீட்டரும் வைத்தார். அவர் முகம் சுளிக்கவில்லை.

"ஒன்றுமில்லையே. தூக்கமில்லாததனால் உண்டான பலவீனம்தான். கொஞ்சம் நரம்புத் தளர்ச்சி. வேறொன்றுமில்லை. காப்பி கொடுங்கோ, சரியாய்ப் போய்விடும். வேணுமானால் சாயங்காலம் வீட்டுக்கு வாருங்கோ. பார்த்து மருந்து கொடுக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார் டாக்டர்.

"மாதவா! ராத்திரி இரண்டு தரம் விளக்குப் போட்டாயே, ஏன்?"

வேணுகோபால் முகத்தைப் பார்த்தேன். சிரிக்க ஆரம்பிப்பது போல் இருந்தது. நடந்ததெல்லாம் அவனுக்குத் தெரியுமா? தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் நானேன் முந்திக் கொள்ளவேண்டும்?

"எலி உபத்திரவம் என்றுதான் சொன்னாயே; அதனால்தான் தூக்கம் வரவில்லை, அசதியாயிருந்தது. இதற்காக டாக்டரை ஏன் கூட்டிக் கொண்டு வந்தாய்?" என்று நெஞ்சுரம் கொண்டவனாகத் தோன்றினேன்.

"உனக்குத் தைரியம் பிறக்கத்தான்."

"எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே."

"உடம்பில் ஒன்றுமில்லை, மனம்........."

"மனசிலும் கோளாறு எதுவுமில்லை."

"சரி, நீ தைரியசாலிதான். நேற்றே சொல்லிவிட்டாயே பேய் பிசாசுகளில் நம்பிக்கை இல்லையென்று." இதைச் சொல்லும்போது சிரிப்பைப் பாதி அடக்கிக்கொண்டான் வேணுகோபால்.

அவனுடைய கருத்தெல்லாம் இப்பொழுது தெரிந்தது எனக்கு. இரவில் நடந்ததைத் தெரிந்துகொண்டு என்னைச் சோதிப்பது போலிருந்தது அவனுடைய பார்வை. அவனே சொல்லட்டுமே.

"வேணுகோபால்! இரவில்கேட்ட சத்தத்தின் காரணமென்ன? எலியுமில்லை, பெருச்சாளியுமில்லையென்று தீர்மானித்திருக்கிறேன். என் யூகம் இருக்கட்டும். நீ உண்மையைச் சொல்லிவிடு."

"உண்மையா? கேள். இங்குள்ள மாமரத்தில் முனியன் இருந்ததாம். அதை வெட்டினதும் இருக்க இடமில்லாமல் கட்டிடத்திற்குள் வந்துவிட்டதாம். இன்று நான் உன்னோடு விழித்திருக்கிறேன். என்ன நடக்கிறதென்று பார்ப்போம். ஏதேனும் சத்தம் வந்தால் நாம் இருவரும் எதிர்த்து நின்று அதட்டுவோம். நீதான் எனக்குத் துணையிருக்கிறாயே. என்ன சொல்லுகிறாய்?"

"தூக்கமில்லாத மனிதன் நான். எனக்கு இந்தச் சனியனெல்லாம் எதற்கு? வேண்டவே வேண்டாம்" என்று தெளிவாய்ச் சொல்லிவிட்டேன்.

"இருந்தாலும் நீ தைரியசாலிதான்" என்று கேலிச் சிரிப்போடு வேணுகோபால் சொன்னது என் மனசை உறுத்தினது.

மேற்கொண்டு கட்சி பேசினால் எனக்கு வெற்றியில்லையென்று தீர்மானித்து வீடுபோய்ச் சேர்ந்தேன். ●

புதிய தொடர்'கதை

லக்ஷ்ய புருஷன்

கே. சுந்தரம்மாள்

"ஆஜானு பாகு அரவிந்த தளாய தாக்ஷம்" என்று கவிகள் வர்ணிக்கும் விதமாக ஸ்ரீ ராமச்சந்தர மூர்த்தியானவர் ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன அனுமத் சமேதராக, ஸ்ரீராம நவமி உத்ஸவம் கொண்டாடும் பக்தர்களுக்குக் காட்சி கொடுக்கத் திவ்யாலங்கார பூஷிதமாகவுள்ள பிம்பமாக வீற்றிருந்தார்.

சுவாமிக்கு எதிராகப் பலவித வர்ண பல்புகளாலான மின்சார தீபங்களினால் ஜகஜ்ஜோதியாக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தினுள் மேடையின் நடுவில் பதினாறு வயதென மதிக்கத்தக்க ஓர் யுவதியும் அவளுக்குப் பக்கத்தில் எட்டு வயது நிரம்பப் பெறாத சிறுமியும், அவர்களது இரு பக்கங்களிலும், மிருதங்கம், பிடில், கடம், தம்புரா மீட்டுபவர் முதலிய வாத்தியக்காரர்களும் அமர்ந்திருந்தார்கள்.

மிருதங்க வித்வான் ஓர் தாடி ஆசாமி. கட வாத்யக்காரர் ஓர் உச்சிக்குடுமி. தம்புரா மீட்டுபவர் ஓர் தளர்ந்த வயோதிகர். பிடில் வித்வான் கிராப் தலையுடன் நாகரிக உடையணிந்த ஓர் அழகிய வாலிபன்; வயது இருபதிற்குமேல் மதிப்பிட முடியாது. கையில் கண்ணாடி வளையல் காதில் இமிடெஷன் தோடும் லோலாக்கும், கழுத்தில் இருப்பதும் இல்லாததும் அறிய முடியாதபடி தோள் புடவையை இழுத்து மூடிக் கொண்டிருந்தாள் பாடகி. கறுப்பு உடலில் சிகப்புக் கரையில் மூன்று ஜரிகைக் கோடு போட்ட நூல் சேலைதான் உடுத்தியிருந்தாள். மணத்தின் உதவியின்றி இயற்கையின் உதவியினால் கறுத்து வளர்ந்த நீண்ட பின்னலின்மேல் சிறிது புஷ்பம் வைத்திருந்தாள். நெற்றியில் நெளிபடிந்த கேசம் அழகிற்கழகு செய்தது.

வாயில் கவுன், கையில் கண்ணாடிவளையல்கள், முன்பக்கமாக வலதுபுறத்தில் பின்னல் போட்டு ரிப்பன் கட்டிச் சிறிது புஷ்பமும் வைத்து, பின்பக்கம் பிடரி வரை ஒழுங்காக வெட்டிவிடப்பட்டிருந்தது. இவைதான் சிறுமியின் அலங்காரம். அவர்களின் தோற்றமே அவர்களின் நிலைமைக்கு எடுத்துக்காட்டாக இருந்தது.

பந்துவராளி ராகத்தை யுவதி பாடி முடித்ததும் கரகோஷம் வானைப் பிளந்தது. நின்றதும் பிடில் வித்வான் ராக ஆலாபனையை ஜகஜ்ஜால வித்தையாகக் கையாண்டார். உற்சாகத்துடன் வாசிக்கும் பொழுதே கடைக்கண்ணால் யுவதியை நோக்கியதும், யுவதி புன்சிரிப்புடன் சபையை ஓர் முறை நோக்கிவிட்டு, பிடில் வித்வானை ஒரு கடைக்கண் வீச்சில் உத்ஸாகப்படுத்திக் கொண்டிருந்தாள். மேடைக்கு முன் பக்கத்தில் முதல் வரிசையில், அழகாக வாரிவிட்ட அமெரிக்கன் கிராப், துல்யமான மல் வேஷ்டி, ஸில்க் ஜிப்பா, கையில் தங்கச் செயினுடன் கூடிய ரிஸ்ட் வாச். வைர மோதிரம், இத்யாதி அலங்காரத்துடன் உட்கார்ந்திருந்த இருபது வயது மதிக்கத் தகுந்த இளைஞன், பிடில் வித்வானைப் பார்த்து மண்டையை ஆட்டுவதும்! அச்சா! பலே! சபாஷ்! என்று உற்சாகப்படுத்தியும்! யுவதியைக் குறிப்பாகக் கண்களினால் பிடில் வித்வானுக்குச் சமிக்ஞை செய்வதுமாக இருந்தான். பிடில் வித்வானும் கண்களினால் சமிக்ஞை செய்தவண்ண மிருந்தான். இவைகளுக்குக் காரணம்?

பிடில் வித்வான் சிவஸ்வாமியும். மைனர் ராஜாவும். ஹரி: ஓம் என்று ஆரம்பித்ததிலிருந்து, (தற்சமயம் பி. ஏ., (ஸீனியர்) படிக்கிறார்கள்) இன்று வரை ஒன்றாகவே படித்து, ஒரே ஊரில் வசித்து வருபவர்கள். S. S. L. C. வரை இவ்வூரிலேயே படித்தார்கள். பிறகு சென்னை சென்று படிக்கிறார்கள், பூர்வ ஜன்ம வாசனா பலனோ என்று நினைக்கச் செய்தது சிவஸ்வாமியினிடம் காணப்படும் சங்கீதப் பற்று. சாதாரண நிலைமையிலுள்ள குடும்பத்தில் பிறந்திருந்தாலும் முற்போக்காளரான அவன் தந்தை, படிப்புடன், ஓர் நல்ல வித்வானிடம் பிடில் கற்க ஏற்பாடு செய்தார். வெகு விரைவில் தேர்ச்சி பெற்று, ஸ்கூல் பைனல் படித்துக்கொண்டிருக்கும் பொழுதே, பெயர் பெற்ற வித்வான்களுக்குப் பக்கவாத்யம் வாசிக்கத் தொடங்கினான். எப். ஏ., பட்டமும் சங்கீத பூஷணம் என்ற பட்டமும் ஒருங்கே பெற்றான். சமஸ்தானங்களில் தனிக்கச்சேரி செய்து மெடல்களும் பெற்றான். வித்யா கர்வத்தினாலோ சிலருடைய கொள்கைகளைப் பின்பற்றினதினாலோ பெண்கள் பாடினால் பக்கவாத்யமாக அவர்களுக்குப் பிடில் வாசிப்பதில்லையென்று உறுதியாக நடந்துவந்தான்.

மைனர் ராஜாவின் குடும்பம் பரம்பரையாக வந்த பணமும் செல்வாக்கும் பெற்றது. ராஜாவின் சிறுவயதிலேயே தகப்பனார் இறந்துவிட்டதினால் தாயாரின் பராமரிப்பிலேயே வளர்ந்தாலும் உத்தமகுண சம்பன்னனாக விளங்கினான். ராஜாவின் முன் ஏழுதலைமுறைகளிலிருந்து

அவ்வூர் ராமர் கோவிலில் ஸ்ரீராமநவமி உத்ஸவத்தை நடத்திவைப்பது வழக்கமாக நடந்துவந்தது. அரசன் தந்தை இறந்தபிறகு ஊராரின் உதவிகொண்டு அவன் தாயே நடத்திவந்தாள். நான்கு வருஷமாக அவனே முன்நின்று நடத்தலானான் ராஜாவும் நல்ல சங்கீத ரசிகன். அவனும் வீணை சொல்லிக்கொண்டான். ஆனால் அவன் ஆத்மார்த்தமாகவே வாசிப்பானேதவிர கச்சேரிசெய்ய விரும்பினதில்லை. சங்கித ரசிகனானபடியினால் உத்ஸவத்தில் உயர்தர வித்வான்களை அழைத்து, தக்க வெகுமதிகொடுத்து அனுப்புவான். எப்பொழுதும் சிவஸ்வாமி உத்ஸவம் முழுவதும் இவ்விடமே தங்கி, பிரபல வித்வான்களுக்குப் பிடில் வாசிப்பான். இருவரும் சென்னையில் படித்துக்கொண்டிருந்தாலும் உத்ஸவத்தின் பொழுது இவ்விடம் வந்துவிடுவார்கள். முதல் நாள் ஓர் பிரபல வித்வானுக்குப் பிடில் வாசித்தான். இந்த ராமனின் சன்னிதியில், ஸ்ரீராம நவமி உத்ஸவத்தின்பொழுது அரங்கேற்றம் செய்தவர்கள் பெயரும் புகழும் பொருளும் அடைந்துவந்தார்களென்பது பழக்கமாகிவிட்டபடியினால் நான் நீ என்று போட்டியிட்டுக் கச்சேரிசெய்ய வருவார்கள். சிவஸ்வாமியின் அரங்கேற்றம்கூட இந்த இடத்தில்தான் நடந்தது.

முதல்நாள் காலையில் கோவில் பட்டாச்சாரி பக்கத்தூர் சிவன் கோவில் பரிசாரகர் ஈசுவரய்யரின் தாயில்லாப் பெண்களாகிய விஜயமாலினி, ஹேமமாலினி இருவரும் அவர்கள் வீட்டில் குடியிருந்த சாமி பாகவதரிடம் சிக்ஷை சொல்லிக்கொண்டு, நன்றாகப் பாடுவதாகவும், ராமர் சன்னிதியில் அரங்கேற்றம் செய்ய ஆசைப்படுவதாகவும் ராஜாவினிடம் சொன்னார். அதுவரை பெண்கள் ஒருவரும் அவ்விடம் கச்சேரி செய்ததில்லையாதலினால் ராஜா சற்று யோசனையிலாழ்ந்தான். "ராஜா யோசனை செய்யாதே. ஆண்டவன் முன் ஆண் யார்? பெண் யார்? அக்குழந்தைகள் தாயற்றவர்கள். பரம ஏழை. அக்குழந்தைகளின் புத்தி விசாலத்தைக் கண்டே சாமி பாகவதர் இனமாகச் சங்கீதம் கற்பித்தார். விஜய மாலினிக்கு வயது பதினாறு. ஹேமமாலினிக்கு வயது எட்டு. விஜயாவிற்குத் தான் சிக்ஷை. ஹேமா கேட்டுக் கொண்டிருந்தே நன்றாகப பாடுகிறாள். நமது உத்ஸவத்தில் அரங்கேற்றினால் பெயரும் புகழும் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் கேட்கிறார். இது முதல் கச்சேரி செய்தே பணம் தேடி அப்பெண்களின் கல்யாணம் நடைபெற வேண்டும். உனக்கு மிகவும் புண்ணியமுண்டு. ஒத்துக் கொள். நீ சொன்னால் பெரியவர்களும் ஒத்துக் கொள்ளுவார்கள்." என்றார்.

"ஐயோ! பரிதாபம்! சரி நாளையதினம் ஏற்பாடு செய்துவிடுங்கள்" என்றான்.

அன்று இரவு பட்டாச்சாரி அவனிடம்வந்து "ஏற்பாடு செய்துவிட்டேன்; ஆனால்சாமி பாகவதர் முன்பே ஒரு கச்சேரிக்குப் பிடில் வாசிப்பதாக ஒத்துக்கொண்டுவிட்டாராம். அதனால் நீதான் பிடிலுக்கு ஆள்தேடவேண்டும்" என்று சொல்லிச் சென்றார்.

பிடிலுக்கு யார்? அவ்வூர் சுமாரானது. நினைத்தவுடன் பிடில்காரரைப்பிடிக்கமுடியாது. முப்பது மைல் சென்றுதான் அழைத்துவரவேண்டும். அதனால் முன்னேற்பாடாக அவர்களே அழைத்து வந்துவிடுவார்கள். முக்யமான வித்வான்களுக்குச் சிவஸ்வாமி வாசித்துவிடுவான். இன்று என்ன செய்வது என்ற சிந்தனையில் மாடி வராந்தாவின் கைப்பிடிச் சுவரில் முழங்கையை ஊன்றிக் கன்னத்தில் கைவைத்தவண்ணம் நின்ற ராஜாவை,

"என்னப்பா! யோசனை பலமாக இருக்கிறதே? எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறாய்" என்று கேட்ட வண்ணம் அவ்விடம் வந்த சிவஸ்வாமியின் குரல் தட்டி யெழுப்பிற்று.

"கோட்டையைப் பிடித்து எனக்கு ஆகவேண்டியதென்ன? பிடில்காரரைப் பிடிக்கவே சிந்தனை" என்று திரும்பி இரு கைகளினாலும் சிவஸ்வாமியின் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"பிடித்துவிட்டாயா பிடில்காரனை" என்று சிரித்தான் சிவஸ்வாமி.

"பிடித்தால் போதுமா?"

"என்னப்பா புதிர் போடுகிறாய்? விஷயத்தை விளக்கேன்."

விஜயமாலினி விஷயம் முழுவதும் சொல்லிவிட்டு, "சிவஸ்வாமி, எனக்காக நீ உதவி செய்ய மாட்டாயா?" என்றான் கெஞ்சும் பாவனையில்.

"சரிதான். அடிமடியில் கைவைக்கிறாயே? என் கொள்கை அறியாதவனா நீ?"

"உனது கொள்கையை எனக்காக. ஒரு ஏழைப் பெண்ணிற்காக, விட்டுக் கொடுக்கக்கூடாதா?"

"அதெப்படியப்பா முடியும்?"

"ஏன்? சங்கீதம் என்பது ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் தனித்தனியாகப் பிரிக்கக்கூடிய வஸ்துவல்லவே. கலாதேவியானவள் தன்னை முழு அன்புடனும் சிரத்தையுடனும் யார் உபாசிக்கிறார்களோ அவர்களிடம் பரிபூர்ணமாக வியாபிக்கறாள். ஆணென்றும் பெண்ணென்றும் அவள் வித்யாசம் பாராட்டுவதில்லையே பெண்களின் பாட்டிற்கு நீ பிடில் வாசித்தால் என்ன கெடுதி சம்பவிக்கும் சொல் பார்க்கலாம்?"

"கெடுதி சம்பவிக்கும் என்பதா அர்த்தம்? நமது கௌரவத்திற்குக் குறை என்பது என்னைப் போன்ற சில பேர்களினுடைய அபிப்பிராயம்."

"என்னப்பா கௌரவக் குறைவு? சங்கீத தேவதை வாணியென்பதை நினைப்பூட்டுகிறேன். பெண்ணை இழிவாகக் கருதினால் கலையையே இழிவாகக் கருதுவதாகும். பெண்களைச் சக்தி என்று பாடின பாரதியார் பைத்தியமா? தமது சரீரத்தில் பாகம் கொடுத்து அர்த்தநாரீயென்று பெயர் வாங்கிய பரமேசுவரன் பைத்தியமா? பெண்களுக்கென்று தனியாயும் ஆண்களுக்கென்று தனியாகவும் சப்த ஸ்வரங்கள் பேதமாக ஒலிக்கின்றனவா? சபையில் பாடத் தொடங்கினால், சங்கீத சாகரத்தில் மனோதர்ம அலைகள் எழும்பி விளையாடுவதில் மனம் லயிக்குமே தவிர ஆணென்றும் பெண்ணென்றும் வித்யாசமான மனோதர்மம் ஏற்படுமா? பெண்களுக்குச் சம உரிமை என்று நம்மைப் போன்ற யுவர்கள் மார்தட்டும் இக்காலத்தில், உன் போன்றவர்கள் பெண்களுக்குப் பிடில் வாசிக்க மாட்டேனென்றால், அந்த விஷயம் எவ்வளவு மதியீனமான செய்கை? சற்றுச் சிந்தனைச் செய்து பார்."

"என்ன? இன்று பெண்களின்மீது இவ்வளவு தயவு ஏற்பட்டுவிட்டது? ஏதாவது காதல்......" என்று சிரித்தான்,

"இதைப்பார் குதர்க்கம் பேசாதே. நான் இதுவரை பெண்களைத் தூஷித்ததுமில்லை, பூஷித்ததுமில்லை. அப்பெண் நாளைக் காலையில் தான் இவ்வூருக்கே வரப்போகிறாள். அவள் கறுப்பா, சிவப்பா? குட்டையா, நெட்டையா? என்பதுகூட எனக்குத் தெரியாது. 'தாயற்ற பெண். பரம ஏழை' என்ற சொல்லே மன இரக்கத்தை உண்டு பண்ணியது. வீணாகப் பேச்சை வளர்த்தாமல் உன் கொள்கையைத் தியாகம் செய்."

"தியாகம்! இந்த விஷயத்திற்கு இவ்வளவு பெரிய வார்த்தையா? இப்பொழுது நான் என்ன செய்யவேண்டுமென்கிறாய்?"

"விடிய விடியக் கதை கேட்டு, சீதைக்கு ராமன் சித்தப்பா என்கிறாயே? நாளைக் கச்சேரியில் விஜயமாலினிக்கு நீ பிடில் வாசிக்கவேண்டும். அப்படிச் செய்தாயானால் உன் போன்றவர் கடைப்பிடித்துவரும் மூடக்கொள்கைகளைத் தகர்த்தெறிய வழிகாட்டியதாகும். சங்கீத உலகிலேயே ஒரு புரட்சி உண்டாகிவிடும் எந்த விஷயமும் ஒரு பிரபலஸ்தர் செய்துவிட்டால் அதற்கு வரவேற்பும் பாராட்டுதலும் அதிகம் கிடைக்கும். அந்தப் பெருமையை நீ அடைய நான் பிரார்த்திக்கிறேன்"

"சரி, நீ இவ்வளவு தூரம் மன்றாடுவதினால் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் ஓர் நிபந்தனை. பாட்டு என் மனதிற்கு ரஸிக்கவில்லையென்றால் சபையென்றும் பாராமல் 'அம்மா பரதேவதா, சற்றே சிரமப் பரிகாரம் செய்துகொள்' என்று சொல்லிவிட்டு, நானே தனிக் கச்சேரி நடத்திவிடுவேன். சம்மதமா?."

"சரி. அப்படியே செய்? எனக்கு ஆக்ஷேபணையே இல்லை" என்றான்.

மறுநாள் மத்யானம் சாப்பாடானதும், ராஜாவும் சிவஸ்வாமியும் ராஜாவின் அறையில் தனியாக உட்கார்ந்திருந்த பொழுது, "ராஜா! எங்கேயப்பா அந்தப் புண்யவதி? சற்றுக் கூப்பிடு, என்னவெல்லாம் பாடப் போகிறாள் என்று கேட்போம்" என்றான் சிவஸ்வாமி.

ஹேமமாலினியும், விஜயமாலினியும் உள்ளே நுழையும் பொழுது, ராஜாவும் சிவஸ்வாமியும் ஒரே சோபாவில் உட்கார்ந்திருந்தார்கள், சிவஸ்வாமி அவர்களை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி மௌனத்தைக் கடைப்பிடித்தான். "வாருங்கள்" என்று ராஜாவே வரவேற்றான். "நமஸ்காரம்" என்று கை கூப்பினாள் விஜயமாலினி. தமக்கையைப் பின்பற்றினாள் ஹேமமாலினி. பதிலுக்கு மரியாதை செலுத்தினார்கள் நண்பர்கள். மளமள வென்று பேசவொட்டாமல், தடுத்தது அவர்களின் பருவ நிலை. கால்கட்டை விரலால் பூமியைக் கீறிய வண்ணம் குனிந்த தலை நிமிராமல் நின்றாள் விஜயா.

"எவ்வளவு வருஷச் சிக்ஷையோ?" என்று பேச்சைத் துவக்கினான் ராஜா. "ஆறு வருஷம்" என்றாள் விஜயமாலினி. அதற்குள் வாசலில் நின்றபடியே ராஜாவை யாரோ கூப்பிடும் சப்தம் கேட்கவே, "டேய், கேட்க வேண்டியதைக்கேட்டுக்கொண்டு அனுப்பிவிடு. நான் வருவதற்காகக் காக்க வேண்டாம்" என்று எழுந்து சென்றான் ராஜா.

ராஜா எழுந்து சென்றதும் சிவஸ்வாமியின் நிலைமை தர்மசங்கடமாகிவிட்டது. பேச நினைத்த வார்த்தைகள் தொண்டையைவிட்டு வெளி வர மறுத்தன, சுவரில் மாட்டியிருந்த படத்தின் மீது பார்வையைச் செலுத்தியவண்ணமிருந்தவன், புரோகிராம் என்னவென்று கேட்கலாமென்று திரும்பும் சமயமும், விஜயா நிமிர்ந்து பார்ப்பதும் ஒரே சமயத்தில் நிகழவே இருவர் கண்களும் சந்தித்துவிட்டன. சட்டெனத் தலையைக் குனிந்து கொண்டாள் விஜயா.

"புரோகிராம்" என்று முடிக்கு முன்,

"இதோ" என்று ஒரு காகித மடிப்பை அவன் கையில் கொடுத்தாள் ஹேமா.

பிரித்துப் பார்த்துவிட்டு, "அட, எல்லாம் ஒண்ணும் நம்பர் உருப்படியாக இருக்கிறதே' என்றான்.

"உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். எனது முதல் கச்சேரியில் தாங்கள் பிடில் வாசிக்க ஒத்துக்கொண்டது நான் பூர்வத்தில் செய்த சுகிர்தமே" என்று தைரியத்தை வர

வழைத்துக் கொண்டு குரலில் நடுக்கம் தொனிக்கச் சொல்லி முடித்தாள் விஜயா.

"பலே! கிராமத்தில் வளர்ந்த பெண்ணாகத் தோன்றவில்லையே வாக் சாதுர்யம்!" என்றான். சற்று நேரம் மௌனம் நிலவிற்று. பிறகு "ஒரு பாட்டுப் பாட முடியுமா? நான் பிடில் வாசிக்கிறேன். ஓர் ஒத்திகை என்றான்."

"சித்தம்" என்றாள்.

"சந்தோஷம். உட்கார்ந்து கொள்ளுங்கள்." என்று சொல்லிவிட்டு எழுந்து சென்று பிடிலை எடுத்து வந்து அவளுக்கு எதிராக உட்கார்ந்து கொண்டு சுருதி கூட்டினான், "ச, ப, ச" என்று இழுத்த வண்ணம் அவள் என்ன ராகம் தொடங்கப் போகிறாளோ என்று அவனும், அவள் எந்த ராகத்தை எடுக்கிறாளோ அதையே வாசிப்பது என்று அவனும் எதிர்பார்த்த வண்ணம் கொஞ்ச நேரம் சென்றது. ச. ப. ச அலுத்துப் போய் ஏதோ சிந்தனையாக ஒரு ராகத்தின் ஆரோக அவரோகணமாகப் போவை இழுத்தான். அது வசந்த பைரவியாய் அமையவே உடனே, "நீ தயராது" என பாடத் துவக்கினாள் விஜயா.

அப்பாட்டு முடியும் தருணம் அவ்விடம் வந்த ராஜா 'அச்சா, ரைட்டோ' என்று சொல்லிய வண்ணம் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். அப்பாட்டு முடிந்ததும், "சிவஸ்வாமி! ஆலாபனத்துடன் இன்னொன்று. நான் மிருதங்கம் வாசிக்கிறேன்" என்றான்.

"போட்டியிடாமல் சிவஸ்வாமியே கல்யாணி ராகத்தைத் துவக்கினான். இருவரும் ராகம் ஆலாபனை செய்து முடித்ததும், "நீதுசரணபங்கஜமுன" என்ற கீர்த்தனத்தை விரவல். பல்லவி சுரத்துடன் பாடி முடித்தார்கள். நடு நடுவே ஹேமாவும் கூடவே பாடினாள்.

சிவஸ்வாமி பிடிலைக் கீழே வைத்தான். விஜயா எழுந்து நின்றுகொண்டு "நாங்கள் சென்றுவருகிறோம்" என்றாள்.

"உன் தகப்பனார் வந்திருக்கிறாரா?" என்று கேட்டான் ராஜா.

"இல்லை. சாயங்காலம் பூஜை முடிந்ததும் வருவார்" என்றாள்.

"பட்டாச்சாரி வீட்டில்தானே இறங்கியிருக்கிறீர்கள்?"

"ஆம். அவர்தான் நீங்கள் கூப்பிடுவதாகச் சொல்லி அழைத்துக்கொண்டுவந்து விட்டுவிட்டு அவசர ஜோலியிருப்பதாகச் சொல்லிச்சென்றார்."

"நன்றாகப் பாடுகிறாய். ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியினருளால்' கூடிய சீக்கிரம் பெரும் புகழும் அடைவீர்கள்,' என்றான் ராஜா.

"உங்கள் குரு உங்கள் அரங்கேற்றத்திற்கு வரவில்லையா?" என்றான் சிவஸ்வாமி.

"இவ்விஷயம் தீர்மானமாகுமுன் அவசியமான கச்சேரிக்கு ஒத்துக்கொண்டுவிட்டார். அதனால் இன்று சாயங்காலமாவது இரவாவது வந்துவிடுவார். வீட்டில் பாடும்பொழுது அவர்தான் பிடில் வாசிப்பார்" என்றாள் விஜயா.

"சாயங்காலம் வந்துவிட்டால் நல்லதாகப் போய்விட்டது உன் பிடியை நீ விடவேண்டாம்; அவரே பிடில் வாசித்துவிடுவார்" என்றான் ராஜா.

"வேண்டாம். நானே வாசிக்கிறேன்" என்றான் சிவஸ்வாமி.

"ஓஹோ! அப்படியா! என்று சிரித்தான் ராஜா."

"நாங்கள் போக உத்தரவா" என்றாள் அங்கே நிற்க மனமில்லாதவள்போல் விஜயா.

"சரி" என்றார்கள் இருவரும். புறப்படும் சமயம் அவ்விடம் வந்த ராஜாவின் தாயார் "ஏண்டாப்பா இந்தக் குழந்தைகள்தானா இன்று பாடப் போகிறார்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம்" என்றார்கள் நண்பர்கள். நமஸ்காரம் செய்தார்கள் சகோதரிகள்.

"தீர்க்க சுமங்கலீபவ. நல்ல புருஷனாய் வரட்டும். உன்பாட்டு மிக நன்றாக இருந்தது. இவ்விடம் வந்து கேட்க அவகாசமில்லை. குழந்தைகளா, உள்ளேவந்து காப்பிசாப்பிட்டுவிட்டு வெற்றிலைபாக்கு வாங்கிக்கொண்டு செல்லுங்கள்" என்றாள் ராஜாவின் தாய்.

கடைக்கண்ணால் சிவஸ்வாமியைக் கடாஷித்துவிட்டு, உள்ளே சென்றாள் விஜயா. அவளைப் பின் தொடர்ந்தாள் ஹேமா.

அவள் சென்ற திக்கையே வெறிக்கப் பார்த்த வண்ணம் அசையாமல் உட்கார்ந்திருந்த சிவஸ்வாமியைச் சற்றுநேரம் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு,"உன்னையறியாமலே, உன் மனம் கொள்ளைபோனதே" என்று பாடினான் ராஜா.

"என்ன குறும்புப் பேச்சு. போடா, அப்படியொன்றுமில்லை. நேற்று நீ சொன்னபொழுது நம்பிக்கை ஏற்படவில்லை. உன் மனத் திருப்திக்காக ஒத்துக்கொண்டேனேதவிர, இப்பெண்ணை என் எதிரியாகவே பாவித்தது என் மனம். இரவு வரை காக்கவைக்காமல் இப்பொழுதே கூப்பிட்டு, மூக்குடைத்து அனுப்பிவிடவே நினைத்தேன். ஆனால் நான்தான் மூக்குடைக்கப்பட்

டேன். நன்றாக உழைத்து அப்யாஸம் செய்திருக்கிறாள். சுகமான சாரீரம், அற்புதமான கற்பனா சக்தி, சங்கீதம் அவளுக்கு அடிமையாகத் தவழ்ந்து கொஞ்சுகிறது'' என்று முடிக்குமுன்,

''நீ இன்னும் கொஞ்சம் போனால் நீயே அவளுக்கு அடிமையாகி நடந்து கொஞ்சுவாய்''

''அவள் கலைக்கு அடிமை என்று ஒத்துக் கொள்ளுகிறேன். அவளுக்குப் பிடில் வாசிக்க ஒத்துக்கொண்டது பாக்யமே என்று நினைக்கிறேன்.''

''ஆமாம். இன்னும் சொல்லப்போனால் அவளுக்கு நீ அடிமையானதே பாக்யம் என்று ஒத்துக்கொள்ளுவாய்'' என்று சிரித்தான். ''டேய்! என்ன?'' என்று ராஜாவின் முதுகில் குத்தினான்.

''அப்பா நானென்ன மிருதங்கமா?'' என்று கேட்டவண்ணம் சிவஸ்வாமியின் மடியில் தலையை வைத்துப் படுத்து இருகைகளையும் அவன் கழுத்தில் மாட்டிக் குனியவைத்து,

டேய்! பழி! பொய் சொல்லாமல் உண்மையை ஒத்துக்கொள். அவள் அழகாக இல்லையா? உன் மனம் அவளை நாடவில்லையா? என்றான் ராஜா.

''அதே கேள்வியை உன்னை நான் கேட்கிறேன்''

''அவள் அழகி என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால் பட்டாச்சாரி சொன்னதிலிருந்து அப்பெண்ணின் மீது ஓர்வித அனுதாபம் தோன்றுகிறதே தவிர, மனம் சலனமடையவில்லை. விரும்பினால் உன்னிடம் மறைப்பானேன்? என் அம்மா என் இஷ்ட விரோதமாக நடக்க விரும்ப மாட்டாள்.''

''என் பெற்றோர் மட்டும் என் இஷ்ட விரோதமாகப் பேசுவார்களா?''

''பார்த்தாயா? உன் மனத்துடிப்பை. நான் சொல்வதைத் கவனமாகக் கேள். ஸ்ரீ ராமபிரானுக்குத் தொண்டு செய்தாய். அதன் பலன் விஜயமாலினியை அனுப்பியிருக்கிறார். சங்கீத ரசிகனுக்கு அதிற் பற்றில்லாத மனைவி வாய்த்தாலும் சங்கீத ரசிகைக்கு, அதில் பற்றில்லாதவள் வாய்த்தாலும் வாழ்க்கைச் சக்கரமானது நேர்பாதையில் செல்வது சற்றுச் சிரமமே. நீ விஜயமாலினியை மணந்தால் விஜயா சிவஸ்வாமி கச்சேரி நிரந்தரமாக நடக்கும். பெயரும் புகழும் உங்கள் காலடியில் தவழும். வாழ்க்கையிலும் நிரந்தர அமைதியைக் காணலாம். நீ ஏற்பதாக இருந்தால் என் செலவில் கண்யமான முறையில் கல்யாணம் செய்துகொடுக்க என் அம்மா மிக விரும்புவாள். நீ சேர்த்து வைத்திருக்கும் பணத்திலிருந்து நகை செய்து போடு. முற்போக்காளரான உன் தந்தை ஆக்ஷேபணை யேதும் சொல்ல மாட்டார். பெண்ணின் தந்தையோ தேனில் விழுந்த ஈயாகி விடுவார்.''

''ஒன்பார்ட்டி ரெடி'' என்பதாகப் பேசுகிறாயே. அப்பெண்ணின் மனம்''

''டேய் பழி! என்னையா ஆழம் பார்க்கிறாய்? பாடும் பொழுது கண்கள் உறவாடியதை நான் கவனிக்கவில்லை யென்பது உன் அபிப்ராயமா? போகும் பொழுது கடைக்கண் வீசினாளே அது போதாதா அவள் சம்மதத்திற்கு. நீ மயங்கிப் பித்தனாய்ச் சமைந்தாயே, அது போதாதா உன் மனம் தெரிய?''

''இவ்வளவு வருஷங்கள் அவர் சன்னிதியில் பிடில் வாசித்ததற்குச் சன்மானமாக விஜயாவைத் தந்தாரா ஸ்ரீ ராமப் பிரபு'' என்று சிரித்தான் சிவஸ்வாமி.

''நீ கொடுத்து வைத்தவன், பூர்வ ஜன்ம பூஜா பலன் அவள் கிடைத்தாள்''

''ராஜா! உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்.''

''அடுத்த வருஷ உத்ஸவத்திற்கு தொத்துக் குட்டியுடன் தம்பதி சமேதராக வர வேண்டும். அவ்வளவே'' என்று எழுந்து உட்கார்ந்தான் ராஜா.

(தொடரும்)

ராஷ்டிரபதி பவனம்

(பழைய வைஸ்ராய் லாட்ஜ்)

கே. ஸ்ரீ.

ஏதாவது பெரிய கட்டிடத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "அடேயப்பா, அதைச் சுற்றிவர ஒரு காரில் அல்லவா போக வேண்டும்" என்று சொல்லுவதுண்டு. இது போலப் பழையநாளில் அலகாபாததில் உள்ள பண்டித மோதிலால் நேருவின் மாளிகையான ஸ்வராஜ்ய பவனத்தைப்பற்றிச் சொல்வதுண்டு. ஆனால் ராஷ்டிரபதி பவனத்தையும் அதைச் சுற்றியுள்ள ஜனாதிபதியின் தோட்டத்தையும் பார்த்த பிறகு வேறு எந்தக் கட்டிடமும் "பிரும்மாண்டமாக"த் தோன்றுது.

வேடிக்கையாகச் சொல்லுவதுண்டு. 'வெள்ளைக்காரன்மட்டும் இந்தியாவில் இல்லாமல் இருந்திருந்தால் டில்லியில் கோட்டைகள் போன்ற சர்க்கார் காரியாலயங்களும் ஜனாதிபதி மாளிகையும் எப்படி வந்திருக்கும். இப்படிச் சொல்வதற்குக்காரணமும் உண்டு. இந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்குப் பணம் கணக்கின்றி எடைக்கணக்கில் தான் செலவழித்திருக்க வேண்டும். வெள்ளையன் ஆண்டபொழுது "அந்தக் கல்லில் செலவு செய்யப்படும் பணம் மிகவும் உபயோகமாகப்படிப் பிறகுச்செலவு செய்யலாமே" என்று நினைத்தார்கள். மேலும் டில்லியில் உள்ள பழைய சரித்திரச் சின்னங்களைக் கண்டாலே வெள்ளையர்களுக்குக் கிலி. அவைகள் நின்று மடிந்தசாம்ராஜ்யங்களைச் சதா நினைவூமூட்டுகின்றன அல்லவா? அதனுல் வெள்ளையர்களுக்கு அச்சான்யம் நம் சாம்ராஜ்யமும் அவைகளைப் போல் சரித்திரச் சின்னமாகி விடுமோ என்று. அதனுல் தான் வெள்ளையர்கள் தங்கள் ராஜ்ய பாரத்திற்கென்று புதுடில்லி நிர்மாணம் செய்யப்பட்டது. அதில் கிட்டத்தட்ட ஒரு கால் பங்கு விஸ்தீர்ணம் வைஸ்ராய் மாளிகைக்கு என்று ஒதுக்கப்பட்டது.

புதுடில்லியை நிர்மாணித்த சிற்பி ஸர் எட்வர்டு லுடியன்ஸ் எவ்வளவு திறமை வாய்ந்தவர் என்பதைப்பற்றி அபிப்ராய பேதம் உண்டு. ஆனல் ஸெகரடேரியட் கட்டிடங்கள் சம்பந்தப்பட்டவரை அவைகளைப் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சிகரமான முறையில் கட்டி அமைத்தார். கிட்டத்தட்டப் புது டில்லியில் எங்கிருந்து பார்த்தாலும் ஸெகரடேரியட்டும் ஜனதிபதி மாளிகையும் தென்படும்.

தேசமெங்கும் கவர்ன்மெண்ட் ஹௌஸ் ராஜபவனமாக மாறியதல்லவா? அதுபோல் வைஸ்ராய் லாட்ஜும் ராஷ்டிரபதி பவனமாயிற்று. இது ஸெகரடேரியட் கட்டிடங்களுக்கு வலது புறம் அமைந்துள்ளது. புது டில்லி கானுட் பிளேஸிலிருந்து வரும் ரோட்பார்லிமெண்டை அடைந்ததும் அதன் இடதுபாகம் மூலம்புகுந்து

வட்டப் பூங்காவும் சிங்காரத் தடாகமும்





மொகல் தோட்டத்தில் உள்ள
"காதலர் சோலை"

ஸட்தர்ஜங் முதலிய இடங்களுக்குச் செல்கிறது; அப்படிச் செல்லும் ரஸ்தாவிலிருந்து பிரிந்து வலது கைப்புறம் திரும்பி,ஸெகரடேரியட்டின் இருகிளைகளுக்கு நடுவே செல்லும் ரஸ்தா வழியாகச் சென்றால் ராஷ்டிரபதி பவனை அடைவோம்.

சாதாரணமாக வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் வைஸ்ராய் மாளிகை என்றால் கறுப்பா சிவப்பா என்று மிகவும் பிரபலஸ்தர்களுக்கே தெரியாது. அதைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள உயர்ந்த சிப்பந்திகளுடன் அளவளாவும் பெருமை பெரும்பாலும் இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களுக்கும் மற்றும் ஐரோப்பியர்களுக்குமே உண்டு. முதல் முதலாக, ராஷ்டிரபதி பவன் என்றால் சொர்க்கலோகம் என்பதைப் பார்க்கும் பாக்கியம் இந்தியர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று எண்ணியவர் முதல் இந்திய கவர்னர் ஜெனரலான ராஜாஜியேயாகும்.

முதல் முதலாக ராஜாஜி டில்லியில் உள்ள தென்னிந்தியர்களை ராஷ்டிரபதி பவனத்தைச் சுற்றிப்பார்க்கும்படி அழைத்தார். அவர் புதல்வி ஸ்ரீமதி நாமகிரி தென்னிந்தியப் பெண்மணிகளை வரவேற்று உபசரித்ததுடன் அவர்களுக்குச் சிற்றுண்டியும் அளித்தார். ராஜாஜி அவர் சுபாவத்திற்கேற்றவாறு வரும் ஜன சமூகத்தாருடன் அளவளாவி அவர்களுக்கு எது முக்கியமாகப் பார்க்கவேண்டியது என்பது போன்றவைகளையும் சொன்னார்.

ராஷ்டிரபதி பவனத்தின் முன்பக்கம் உள்ள இரும்புக் கிராதிக் கதவுகள் ராஷ்டிரபதி பவனிவரும் பொழுதுதான் திறக்கப்படும். மற்றச் சமயங்களில் அது மூடியே வைக்கப்பட்டிருக்கும், ஆகவே பக்கத்தில் இருக்கும் சிறிய ராஸ்தா மூலமாக "விசாரணை" ஆபீஸை அடைகிறோம். நேரே தெரிவதுதான் ராஷ்டிரபதி பவனத்தின் முகப்புத் தோற்றம். படிக்கட்டுகளுக்கு மேல் விசாலமான இடம் தர்பாருக்கென்று ஏற்படுத்தப்பட்டதால், இப்பொழுது அது ஜனாதிபதி வெளியே வரும்பொழுது ராஜ பாட்டையாக உபயோகப்படுகிறது.

இப்பொழுதெல்லாம் ராஷ்டிரபதி பவனத்தைச் சுற்றிப் பார்க்க ஜனங்களுக்கு அனுமதி உண்டு. முன்னாலேயே எழுதினால் குறிப்பிட்ட தினத்திற்கென்று அனுமதிச் சீட்டு வரும், அதை எடுத்துக்கொண்டு "விசாரணை" ஆபீஸுக்குச் சென்றால் அங்கு உள்ள சிப்பந்தி ஒரு டவாலி போட்ட சேவகனை கூடவே அனுப்புவார். அவன் கூட வந்தால்தான் நிம்மதியாகப் பார்க்கமுடியும். இல்லாவிடில் பாதுகாப்புப் போலீஸார் கண்காணிப்பிலிருந்து நாம் தப்ப முடியாது—சமயத்தில் சர்க்கார் விருந்தினராகக்கூட நம்மைச் செய்துவிடலாம்!

விசேஷமாகப் பொதுஜனங்கள் பார்க்க விரும்புவது வெறும் கட்டிடத்தை அல்ல. ராஷ்டிரபதி பவனைச் சுற்றியுள்ள தோட்டத்தையே. இதில் மிகவும் பெயர் போனது மொகல் தோட்டம். இதை அடைய விசாலமான பரந்த வெளி (முற்றம்) வழியே செல்லவேண்டியிருக்கிறது. இப்பொழுது பூக்கள் ஓய்ந்த காலமானதால் அங்கு அமைக்கப்பட்டிருக்கும் சிங்காரக் கால்வாய்களிலும் நீர்த்தூம்புகளிலும் தண்ணீர் இல்லை. அவைகளில் நீர் நிரம்பி, சுற்றிலும் பூக்கள் பூத்துக் குலுங்கினால் பார்ப்பதற்கு மிகவும் மனோரம்மியமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இங்கேதான் ராஷ்டிரபதி சாதாரணமாகத் தம் விசேஷ விருந்தினர்களுடன் வார்த்தையாட வருவது வழக்கம்.

இதற்கு அப்பால் மொகல் தோட்டம் ஆரம்பமாகிறது. இங்குள்ள படிக்கட்டுகள்மேல் ஏறிச்சென்றால் ஆறு பட்டைகள் கொண்ட ஒரு பூந்தோட்டம் தென்படுகிறது. இதில் பாத்திகள் கட்டிப் பூச்செடிகளை ஒதுக்கி வைத்திருக்கும் அழகே அழகு. இந்தப் பக்கங்களில் தோட்டக்காரர்களை "மாலி" என்று சொல்வது வழக்கம். ராஷ்டிரபதி பவனில் உள்ள மாலிகள் மிகவும் கைதேர்ந்தவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜனாதிபதி தோட்ட விருந்தளிக்கும் உத்தியானவனம்

இந்த இடத்தைவிட்டு இறங்கியதும் பச்சைப் பசேலென்று ரத்னக் கம்பளம் போர்த்தினற்போல் விசாலமான புல்வெளி மைதானம். இரு பக்கங்களிலும் Coniferous வரிச் சாணிபோன்ற செடிகள். நடு நடுவே வாய்க்கால்களும், நீர்த் தூம்புகளும் காணப்படுகின்றன. இந்த இடத்தில் இரவு நேரத்தில் தேநீர் விருந்து வைத்தால் எவ்வளவு மனோரம்மியமாக இருக்கும் என்று நினைத்தேன். என்னுடன் வந்த டவாலி சொன்னான் இங்கேதான் தோட்ட விருந்துகள் நடக்கும் என்று. பௌர்ணமி தினமாகவும் இருந்து நல்ல காற்றும் வீசினால் மலர்களின் மந்தமாருதமும் புல்வெளியின் புனிதத் தோற்றமும் அங்கு இருப்போரை "இது பூலோகமா அல்லது கைலாசமா" என்று புளகாங்கிதமடையச்செய்யும்.

நேரே சென்று இடது பக்கம் திரும்பினால் குட்டைச் செடிகளைக்கொண்டு சுவர்கள்போல் பணிக்குச் செய்துவைத்திருக்கும் "காதலர் பாதை" வருகிறது. இப்பொழுது பாத்திகளில் மலர்கள் இல்லை, ஆனால் மலர்களும் இருந்து பூங்கொடிகளுக்கு என்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிங்காரப் பந்தலில் மல்லிகையும் முல்லையும் அரும்பி நிறைந்திருந்தால் இது தெய்வீகக் காதலர்களைக்கூடக் கைதட்டி அழைக்கக்கூடிய ஸ்தலம்.

வட்ட வடிவமான மலர்ச்சோலையுடன் மொகல் தோட்டம் முடிகிறது. இதன் சுவர்களின் மேல் பலவகைக் கொடிகளும் வர்ணப் பூக்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

படிப்படியாகப் புல் பாத்திகள் ரத்னக் கம்பளங்கள் விரித்தாற் போல் காணப்படுகின்றன. நடுவே அழகிய வட்ட வடிவத் தடாகம். உல்லாஸமாகப் பொழுது போக்குவதற்கு ஏற்ற இடம்.

திரும்பி வரும் பொழுது என் வழிகாட்டியை விசாரித்தேன். எவ்வளவு சிப்பந்திகள் ராஷ்டிரபதி பவனத்தில் இருக்கிறார்கள்? மாலிகள், டவாலிகள் முதல் மானேஜர், காரியதரிசிகள் வரை, மெய்காப்பாளர்கள் உள்பட 2000 பேர்கள் இருக்கிறார்கள். கூடுமான வரையில் சிக்கனம் செய்யத்தான் செய்திருக்கிறார்கள். பழைய காலத்தில் வைஸ்ராய் லாட்ஜில் இதைப் போல இரண்டு பங்கு ஊழியர்கள் இருந்திருக்கிறார்கள். ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத் ஆடம்பரத்தை விரும்பாதவர். ஆனால் இந்தியாவின் முதல்வரின் இருப்பிடம் வெளி நாட்டார் மதிப்புக்கு உகந்ததாக இருக்க வேண்டாமா? வேண்டும் என்றுதான் பண்டித நேரு ராஷ்டிரபதி பவனத்தை மிகவும் மனதைக் கவரும் முறையில் வைக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

இவ்வளவு ஆள் மாகாணமும் அவசியமா என்றால் முழுவதும் அவசியம் இல்லை என்று தான் தோன்றுகிறது. ஆனால் இவர்களின் எண்ணிக்கையை இன்னமும் குறைத்தால் சென்னையில் (கிண்டியில்) ராஜ பவனம் என்ற பெயரில் குதிரை லாயம் ஒன்று இருக்கிறதே அதே போல ஆகிவிடும்.

இப்பொழுது திரும்புவோம். உள்ளே அதாவது கட்டிடத்துக்கு உள்புறம் பார்ப்பதற்கு ஓர் இரண்டு இடங்களைக் காண்பிக்கிறார்கள். இவைகளுள் ஒன்று பழையநாளில் நடன ஹாலாக இருந்த இடம். இப்பொழுது

ஆறுபட்டை வடிவப் பூத்தோட்டம்



ஜனாதிபதி அளிக்கும் விருந்துகள் இங்கு நடைபெறுகின்றன. தரையில் விலை உயர்ந்த கம்பளங்களை விரித்திருக்கிறார்கள். சுவர்களில் முகம்பார்க்கும் கண்ணாடிகள் சிறு சிறு துண்டுகளாகப் பதிக்கப்பட்டு எங்குத் திரும்பினாலும் நம்முடைய ஆவிகளோ என்று பயப்படுமாறு பிரதிபிம்பங்கள் உண்டாகின்றன. கலை நுட்ப பூர்வமான பல சித்திர வேலைப்பாடுகளோடு அமைந்திருக்கிறது ஒட்டு, இங்கே தான் ஜனாதிபதி தம்மைப் பார்க்க வருபவர்களுக்குப் பேட்டியளிக்கிறார். உயரத்தில் (Chandailie) கண்ணாடி அற்புதங்கள் பல தொங்குகின்றன.

இந்த அறைக்கு அடுத்த அறை உணவு அருந்தும் இடம் (Dining Hall), விலையுயர்ந்த மர மேஜையும் நாற்காலிகளும் இந்த அறையை அலங்கரிக்கின்றன. சுவர்களில் பழைய வைஸ்ராய்களின் வர்ணச் சித்திரங்கள் இன்னமும் இந்தியர்களைக் கண்டு பொருமுவதுபோலக் காண்கின்றன.

இங்கிருந்து சிறிது தூரத்தில் (Art Gallery) சித்திரக் காட்சி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. சித்திரங்கள் துணித் திரையில் வர்ணங்கள் குழைத்துத் தீட்டப்பட்டவை. சித்திரத்தின் பொருளை மறந்து வேலைப்பாட்டை மட்டும் கவனித்தால் அவைகளின் அற்புதம், தெரிய வரும். சுதந்திரத்திற்குப் பிறகு சுதந்திரத்திற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்த பால கங்காதர திலகர், பண்டித மோதிலால் நேரு முதலியவர்களின் படங்களையும் சுவரில் பொருத்தியிருக்கிறார்கள், சித்திரக் காட்சிப் படங்களுக்கும் தலைவர்களின் படங்களுக்கும் ஸ்தானப் பிராப்திகூடக் கிடையாது. நம் தலைவர்களின் படங்களை ஏன் புகழ்பெற்ற சைத்ரிகர்களைக் கொண்டு தீட்டப் பெறக் கூடாதோ? பகவானுக்குத் தான் வெளிச்சம்.

ஜனங்கள் பார்க்கும் இடங்களுக்கு எதிர் சாரிகள் ஜனாதிபதியின் சொந்த விடுதி. நான் திரும்பி, புறப்பட்ட இடத்திற்கு வரும் பொழுது "இது அதிதிகள் விடுதி" என்று டவாலி காண்பித்தான். அதிதியாக இருந்தாலும் ஜனாதிபதியின் அதிதியாக அல்லவா இருக்கவேண்டும் என்ற பொருமை உண்டாயிற்று, அவ்வளவு அருமைக் குட்டி மாளிகைகள் அதிதிகளுக்கு என ஒதுக்கப்பட்டிருந்தன.

"இவ்வளவுதான் ராஷ்டிரபதி பவனம்" என்று வழிகாட்டி டவாலி சொல்லி ஒரு பெரிய சலாம் வைத்தான். என் முதுகுப் புறம் இருந்த மற்றொரு டவாலி "ஏதாவது தளர்ந்ததா?" என்று செய்த சமிக்ஞையையும் என் வழிகாட்டி பதிலுக்கு நாக்கைத் துருத்தியதையும் நான் கவனிக்காமல் இல்லை. பையில் சில்லறை இல்லாதவர் பிரமாதமாக ராஷ்டிரபதி பவனம் பார்க்க வந்து விட்டார் என்று நினைக்கக்கூடாது என்று டில்லியில்நாசுக்காக(Tipping)சொல்லும் முறையில் ஒரு ரூபாயை வைத்து அழுத்திவிட்டுத் திரும்பி நடையைக்கட்டினேன். ●

உஷார்! பாரா! மிடுக்கும் முறுக்கும் ததும்பும் சதா பாரா கொடுக்கின்றனர்



ஜோசியம் பலித்தது!



ஜய்லன்

காப்பக நூலகம்
சென்னை 600 008

தம்முடைய வாசஸ்தலத்திற்கு முன் இருந்த தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார் பண்டிதர் வாஸுதேவாசார்யர். அவர் வான சாஸ்திரத்திலும், கணித சாஸ்திரத்திலும் தேர்ச்சியுற்றிருந்தார். அந்தத் தோட்டம் அவருடைய ஆராய்ச்சிக் களஞ்சியமாகவும், வித்தியார்த்திகளுக்குப் பாடசாலையாகவும் உபயோகப்பட்டது. அவருடைய பெண் சீலவதியும், ஒரே ஒரு மாணாக்கனான சுதீரனும் இப்பொழுதும் அவரிடம் வித்தியாப்பியாசம் செய்துகொண்டிருந்தனர்.

அது கல்வி பயில்வதற்கு உகந்த காலமாக இருக்கவில்லை. ஹூணர்கள் புகும் இடங்களையெல்லாம் கொள்ளையிட்டுக் கொண்டும், தீ வைத்துக்கொண்டும் ஆர்ப்பாட்டம் செய்தனர். குப்தர்களுடைய காலம் முடிந்துவிட்டது. ஒற்றுமையின்மைக்கு அனாதி காலந்தொட்டுப் பேர்போன இந்திய அரசர்களால் மத்திய ஆசியாவிலிருந்து படையெடுத்து வந்த அந்நியர்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவர்களுடைய தலைவனான தோரமானனும், அவனுடைய பிள்ளையான மிஹிராகுவனும் ரத்த வெறி பிடித்தவர்கள். இந்தியாவின் வடமேற்குப் பாகத்திற்கு அரசர்களாகத் தங்களை நியமித்துக் கொண்டார்கள்.

ஆயினும் ஆரியபட்டர், வராஹமித்திரர், பிரம்மகுப்தர் முதலிய அறிவாளிகளும், ஆசாரியர்களும் இருந்தனர். இவர்களுடைய பெயர்கள் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் போர் புயற்காற்றிற்கிடையே ஞான ஒளி அணையாமல் காப்பாற்றி வந்தனர். இவர்களுள் பண்டிதர் வாஸுதேவசாரியரும் ஒருவர். அந்நியர்கள் இவருடைய வாசஸ்தலத்தை நெருங்க ஆரம்பித்ததும் குரு குலத்திலிருந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தது. கடைசியில் சுதீரன் ஒருவன்தான் இருந்தான். அபாயம் அருகில் வந்தும்கூட அவன் குருகுலத்தை விட்டுப் போக விரும்பவில்லை. தம் மாணாக்கனுக்குக் கல்வி பயில்வதில் இருந்த ஆர்வத்தைப் பார்த்துப் பண்டிதர் மிகவும் மகிழ்வெய்தினார்.

சுதீரன் கலைத்தேவியிடத்தில் பக்தி கொண்டிருந்தது பற்றிச் சந்தேகமில்லை, ஆனால் வானத்தைப் பார்த்துக் கொண்டு கணிதக் குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்த பண்டிதருக்குச் சுதீரன் விஷயத்தில் காதல் தெய்வமும் பங்கு எடுத்துக் கொண்டிருந்தது தெரியவில்லை, சரஸ்வதி அவனுடைய புத்தியின் மேல் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தாள். ஆனால் குருவின் அழகிய பெண்ணான சீலவதிதான் அவனுடைய ஹ்ருதயத்தில் அரசு புரிந்து வந்தாள்,

அவருடைய சிஷ்யர்கள் அவர் கேள்வியைப் புரிந்து கொள்ளு முன்பே, தூரத்தில் திடீரென்று காணப்பட்ட ஜ்வாலையினால் குருவினுடைய கவனம் கவரப்பட்டது. ஆராய்ச்சிகளுக்கு அமைதி வேண்டுமென்று ஜன சந்தடியற்ற ஒரு சிறு குன்றின் மேல் தம்முடைய வாசஸ்தலத்தை அமைத்திருந்தார், அத்தோட்டத்திலிருந்து பார்த்தால் பல மைல்கள் வரை பரவியிருந்த பிரதேசம் கண்ணிற் பட்டது. தீயின் ஜ்வாலை தன்னுடைய சரித்திரத்தைச் சொல்லிற்று. "ஹூணர்கள்"—அவர்கள் எல்லோரும் சேர்ந்து கூவினார்கள்,

"ஹே, பகவான்! என்னுடைய தேசம் அந்நியர் படையெடுப்பிலிருந்து எப்பொழுதுதான் விடுதலையடையுமோ?"

கிழவர் தடியின் உதவியினுல் எழுந்தார். அவருடைய பலஹீனமான சரீரம் கோபத்தினுல் தள்ளாடியது.

"அப்பா, நாம் உள்ளே போவோம்" என்று அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு சீலவதி சொன்னுள்: "சாயங்காலக் குளிர்காற்று உங்களுக்கு நல்லதல்ல."

"இந்த ஹூணர்கள் பத்து மடங்கு தீங்கிழைப்பார்கள்" இருந்த போதிலும் தம்மை உள்ளே அழைத்துப் போக விட்டார். சுதிரன் பின் தொடர்ந்து வந்தான்.

"இப்பொழுதிருப்பதைப்போலப் பலஹீனமான பல அரசர்களுக்குப் பதிலாக, பாரத முழுமைக்கும் ஒரே ஒரு சக்தி வாய்ந்த அரசனிருந்தால்" மறுபடியும் ஆரம்பித்தார்.

"குருஜி, ஹூணர்களுக்கு எதிராக எல்லா அரசர்களும் ஒன்று சேர்ந்து யுத்தம் செய்யப் போவதாகக் கேள்விப் பட்டேன். மகத தேசத்துப் பாலாதித்யனும், மால்வாவின் யசோதர்மனும் பலரும் சேர்ந்திருக்கின்றனர். தினமும் பலர் சேர்ந்து கொண்டிருக்கின்றனர்."

"இது மிகவும் நல்ல செய்தி. தேசத்தைத் துண்டு துண்டாகச் செய்திருக்கும் அரசர்கள் ஒன்று சேர்ந்தால் கொஞ்சம் நம்பிக்கை வைக்க இடமிருக்கிறது. இப்பொழுதிருக்கும் ஹூணர்களின் அரசன் கொடுங்கோன்மையின் அவதாரம் என்று கேள்விப்பட்டேன்."

"ஆம், உண்மைதான்," புத்த பிக்ஷுக்களைத் துன்புறுத்துவதில் அவனுக்கு அலாதி சந்தோஷமாம். காரணம் யாதெனில், பல வருஷங்களுக்கு முன் அவர்களால் அவமானம் செய்யப்பட்டதாகச் சொல்லிக் கொள்கிருனும். அவனுடைய சபையில் வான சாஸ்திர பண்டிதர் சொன்னபடி நடக்கவில்லை என்பதற்காக, அவரைச் சித்திரவதை செய்து கொல்லச் சொன்னுனும்."

"என்ன பயங்கரம்! எத்தகைய நியாயமற்ற செய்கை! நக்ஷத்திரங்களைப் பார்த்து வருங்காலத்தைப்பற்றி சொல்லமுடியும் என்பது சரியல்ல. மிகவும் கவனித்துச் சொல்லப்பட்டவைகள்கூட, தவறுதலாக நடந்திருக்கின்றன. ஒரு ஏழை ஜோசியனை, ஜோசியம் பொய்த்ததற்காகக் கொலை செய்வதை, அந்த ரத்த வெறியன் ஒருவன்தான் செய்வான்."

"அப்படியானுல் வானசாஸ்திரம் பொய்தானு?" சுதிரன் அதிசயமடைந்து கேட்டான். "உங்களுக்குத் தெரியும் குருஜி." உங்களிடம் வருஷக் கணக்காக நான் வான சாஸ்திரம் பயின்று வருகிறேன். அதெல்லாம் உபயோகமற்றதா!"

"இல்லை, மகனே! உண்மையை அறிவதற்காக ஆராய்ச்சி செய்வதில் பயனில்லாமற் போகாது. ஒருபொழுதும் வீண்போகாது. மனிதனின் அறிவுக் களஞ்சியத்தில் உண்மையான அபிப்பிராயங்களும், தவறுதலான அபிப்பிராயங்களும் இருக்கும். தவறுதலான எண்ணங்களிலிருந்து உண்மையைப் பிரிப்பதுதான் ஆராய்ச்சியின் உத்தேசம். உதாரணமாக, வான சாஸ்திரம் பயில்வதால், நாம் கிரஹணங்களைப் பற்றியும், சந்திரனைப் பற்றியும் முன் கூட்டியே அறிந்துகொள்ள முடிகிறது. ஆனுல் ஒரு ராஜ்யத்தின் ஆரம்பத்தையும் வீழ்ச்சியையும் தனி மனிதனின் அதிருஷ்டத்தையும் வான சாஸ்திரத்தினுல் சரியாகச் சொல்லிவிட முடியுமென்று நடிக்க முடியாது. இன்னும் சிறிது கால ஆராய்ச்சியினுல் மனிதனின் கற்பனையில் தோன்றும் உண்மையில்லாத அபிப்பிராயங்களை நீக்கிவிடலாம். ஆனுல் தற்சமயம் உண்மையானவைகளையும், உண்மையற்றவைகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். ஆராய்ச்சி நடந்துகொண்டே இருக்கும், சண்டையிலும், சமாதான காலத்திலும், மிலேச்சர்கள் இருந்தாலும், வீழ்ந்தாலும்."

"இவ்வளவு நாட்கள், ஹூணர்களிடமிருந்து தப்பித்திருந்தது ஆச்சரிய மில்லையா?" என்று வினவினுள் சீலவதி,

"நம்முடன் ஏன் சண்டைக்கு வருகிருர்கள்? உலகப் பற்றற்று நாம் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறோம். நம் பெயர் வெளி வராமவிருப்பதே நம்மைக் காக்கிறது. இந்த ஏழையின் வீட்டைக் கொள்ளை யடிப்பதால் தனமும் இல்லை, புகழும் இல்லை."

அவர் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, நாலு கால் பாய்ச்சலில் வருகின்ற குதிரைக் குளம்புகளின் சத்தம் அவர்களுடைய செவிகளில் விழுந்தது. வெளியில் பார்த்த பொழுது, தோட்டச்சுவரின் கதவிற்கு முன் சில குதிரை வீரர்கள் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. திடீரென்று வாசஸ்தலத்தின் அமைதி பங்க முற்றது. கிழவருக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. பலஹீனமாக வேறு இருந்ததால் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டார். சீலவதி சுதிரனைப் பார்த்தாள்.

"தயவு செய்து போய் அவர்களுக்கு என்ன வேண்டு மென்பதை விசாரித்து வா. தந்தையின் தேகஸ்திதி அவர்களைச் சந்திக்கும் நிலையிலில்லை. நாங்கள் உள்ளே செல்லுகிறோம்." இதற்குள் தலைவன் தன் ஈட்டியின் முனையினுல் தோட்டத்துக் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்து விட்டான், சுதிரன் விரைவாகச் சென்று பாதி தூரத்திலேயே அவனைச் சந்தித்தான்.

"பண்டிதர் வாஸுதேவாசாரியார் இங்கே தானே இருப்பது?" தலைவன் குதிரையை நிறுத்திக் கொண்டு கேட்டான்.

"ஆம், இங்கேதான்" என்று சுதிரன் பதிலளித்தான்.

"அப்படியானுல் ராஜசபைக்கு இப்பொழுதே எங்களுடன் வரச்சொல். இது அரசன் மிஹிரகுலனின் கட்டளை."

"தினசரி சக்தியை
அளிக்க அவன் உணவு
எப்பொழுதும் டால்டாவில்
சமைக்கப்படுகிறது"
டால்டா-சமநிலை
உணவில் உங்களுக்கு தேவை
யான சக்திதரும் கொழுப்பை
அளிக்கிறது
DALDA
HYDROGENATED GROUNDNUT AND TIL OIL
டால்டா
HVM. 167-50 TM

"திடீரென்று சொன்னால் எப்படி? பிரயாணம் செய்யும் நிலையிலில்லை அவர்........."

தலைவன் நடுவிலேயே தடுத்துச் சொன்னான் :

"போ, அவரை எங்களுடன் உடனே வரச் சொல். உடம்பு சரியோ, இல்லையோ எங்களுடன் வந்தே ஆகவேண்டும். என்னுடைய குதிரையின் வாலில் கட்டியாவது இழுத்துப் போகவேண்டும்."

"தயவுசெய்து இவ்வளவு கோபப்படாதீர்கள். நீங்கள் பண்டிதருக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்தால், அவர் உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிவார். அவா வயதானவர். பலஹீனமாகவும் இருக்கிறார். ஆயினும், அரசனின் கட்டளையாதலால், அவர் கட்டாயம் வருவார். அரசன் அவரை எதற்காகக் கூப்பிட்டனுப்பியிருக்கிறார் என்று சொல்ல முடியுமா?"

"ஒருகால் உயிருடன் புதைப்பதற்காக இருக்கலாம், இதற்குமுன் இருந்த சபைச்சோதிடரைச் செய்ததைப் போல்" பரிகாசமாகப் பதிலளித்தான் அம்மனிதனின் விகாரமான முகத்தில் கோரப் புன்சிரிப்புத் தாண்டவமாடியது. "அரசன் இன்னொருவரை அவருடைய பதவியில் வைக்க விரும்புகிறார். பண்டிதரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். அவரை உடனே வரச் சொல். தாமதித்தால் என் ஆட்களை உள்ளே நுழையச் சொல்லிப் பலாத்காரம் செய்ய வேண்டி வரும்."

கொடுங்கோல் மன்னனின் கொடுமையான சேவகர்களிடம் நியாயம் பேசுவதில் பயனில்லை என்று தெள்ளத் தெரிந்தது சுதீரனுக்கு. எஜமானனைப் போல, அவன் கீழ் வேலை செய்யும் மனிதர்களும் என்று யோசித்துக்கொண்டே விரைவாக வீட்டை நோக்கி நடந்தான் அவ்விள மாணாக்கன்.

"ஐயோ கடவுளே! பிரயாணம் செய்வதிலுள்ள சிரமங்களாலும், இம்மிருகங்களின் கையில் சிக்கிக் கொள்ளுவதாலும் ராஜ சபையை அடையு முன்பே பிராணன் போய்விடும். சீலவதி என் செய்வாள்—கடவுள் நம்மை ரக்ஷிப்பார்!"

* * *

"இதுதான் புதிய ஜோதிடரா? மிஹிராகுலன் கேட்டான். அவனுடைய கண்கள் கூனிக் குறுகிய மனிதனைப் பார்த்து உருண்டன. எப்படியோ அக்கிழப் பண்டிதர் அப்பயங்கரமான பிரயாணத்தில் உயிர் தப்பிவிட்டார்.

"நக்ஷத்திரங்களைப் பார்த்துச் சொல்," ஹூணர்களின் தலைவன் அதிகாரத்துடன் சொன்னான்; "இதுவரை என்னுடைய தாக்குதல்களினால் சாங்ளிக் கோட்டையைத் தகர்க்க முடியவில்லை. அதை ஆக்கிரமித்துக் கொள்ள எத்தனை பெரியபடை எடுத்துப்போக வேண்டும், எப்பொழுது கிளம்ப வேண்டுமென்று நல்ல நாளையும் பார்த்துச் சொல். ஆனால் கவனமாகப் பார்த்துச்சொல். உனக்குத் தெரியுமா? முன் இருந்த ஜோசியப் பொய்யனின் கதி!"

அக்கிழப் பண்டிதர் தலைகுனிந்து வணங்கினார்.

"உனக்குத் தெரியுமா? நல்லது. உனக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும். சரியாகச் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உனக்கும் அக்கதிதான் நேரும்."

ஜாக்கிரதையாக இருப்பதற்கு இவ்வளவு எச்சரிக்கை செய்யப்பட்டதால், நாள், நக்ஷத்திரம் கணிப்பதில் அரசாங்க ஜோதிடர் வெகு நாட்கள் எடுத்துக்கொண்டதில் ஒன்றும் 'ஆச்சரியமில்லை. கடைசியில் தம்முடைய எண்ணத்தை வெளியிட்டார்.

"அரசே, இப்பொழுதுதான் நக்ஷத்திரங்கள் சாதகமான இடத்தில் இருக்கின்றன. பகல் பன்னிரண்டு மணி ஆனவுடன் கிளம்புவதுதான் நல்ல சமயம். ஒரு சிறிய படை போதும். ஐந்நூறு சிப்பாய்களுக்குமேல் வேண்டாம். தாக்குதலுக்கு நீங்களே தலைமை வகிக்க வேண்டும். நாளைக் காலை சூரியன் உதித்து மூன்று மணியான

பின் தாக்குதலை ஆரம்பிக்கவேண்டும். வெற்றி நிச்சயம்."

மிஹிராகுலனைச் சுற்றி நின்றிருந்த உத்தியோகஸ்தர்களுக்கு இது பைத்தியக்காரத் தனமாகப் பட்டது. அக்கோட்டை மிகவும் பலம் பொருந்தியது என்று பிரசித்தி பெற்றிருந்தது. பெரிய பெரிய படைகளின் தாக்குதல்களையெல்லாம் சமாளித்துவிட்டது.

“இதைத்தான் கிருஹங்கள் சொல்லுகின்றனவா?”கேட்டான் ஹூணர்களுடைய தலைவன்: “நிச்சயமாக, சரியாகக் கவனித்திருக்கிறாயா?”

“ஆமாம், அரசே,’,

“சரி!” அரசன் பண்டிதரைக்கொண்டுவந்திருந்த உத்தியோகஸ்தனைப் பார்த்துச் சொன்னான்; இவனைப் பாதுகாப்பில்வை. அவன் சொல்லுகிறபடி செய்வோம். நாம் தோற்றுவிட்டால் அவனை என்ன செய்யவேண்டு மென்பது உனக்குத் தெரியும். தோலை உரித்து விடு. இவ்வார்த்தைகளைக் கேட்டுப் பண்டிதர் திடுக்குற்றார். அவர் தேகம் நடுங்கியது, சீக்கிரத்திலேயே சமாளித்துக்கொண்டார்.

* * *

சில நாட்களுக்குள் போர் முனையிலிருந்து செய்தி வந்தது. எல்லோரும் எதிர் பார்த்திருந்ததற்கு மாறாக, மிஹிராகுலனின் தலைமையின் கீழ் சென்றிருந்த சிறிய படையினிடத்தில், கோட்டை சரணாகதி யடைந்தது. சேர்ந்து எதிர்ப்பதற்காகத் தயாரித்துக்கொண்டிருந்த படையைப் பலப்படுத்துவதற்காக, அங்கிருந்த பெரிய படை அகற்றப்பட்டிருந்தது. சிறியபடையே அக்கோட்டையின் தற்காப்பிற்காக விட்டுவைக்கப்பட்டிருந்தது.

வெற்றியடைந்து திரும்பி வந்தவுடன், தன் ஜோதிடனை அழைத்து, தங்க மோஹராக்கள் நிறைந்த பையைக் கொடுத்தான், மிஹிராகுலன்.

"நாங்கள் மிகவும் சந்தோஷமடைகிறோம். உன்னால் சொல்லப்பட்டது கடைசி எழுத்து வரை நடந்தேறிவிட்டது."

கிழவர் மண்டியிட்டுப் பரிசை வாங்கிக்கொண்டு தம் வந்தனங்களைத் தலைகுனிந்து மௌனமாக அறிவித்தார்.

"உனக்கு இன்னும் வேலை இருக்கிறது." தொடர்ந்து சொன்னான் மிஹிராகுலன். "எனக்கு எதிராகப் பல ஹிந்து ராஜாக்கள் சண்டைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றனர். கிருஹங்களைக் கவனித்து அவர்களுள் யாராவது ஒருவன் என்னைத் தோற்கடித்து விடுவானோ என்று பார்த்துச் சொல்.”

கிருஹங்களைப் பார்ப்பதிலும், குறிப்புகள் எழுதுவதிலும் வெகு நேரம் செலவிட்டுப் புதிய ஜோதிடர் தம் அபிப்பிராயத்தைச் சொன்னார்: “இருஹங்கள் இருக்கும் நிலையைப் பார்த்தால், எதிரிகளான அரசர்களிடத்தில், தனித்தனி ராஜாக்களிடம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஒருவர், பின் ஒருவராகத் தோற்கடித்து விடலாம்.”

சில நாட்களாக, மிஹிராகுலனுக்குப் பயம் வலுத்து வந்தது. இவனுடைய கொடுங்கோன்மையினால் ஏற்பட்ட எதிரிகளின் கூட்டுறவு பலமடைந்து கொண்டே வந்தது. ஜோதிடர் சொன்ன வார்த்தை இவனுக்கு நம்பிக்கையை அளித்தது. இதற்கு முன்பு தனக்கு இருந்த பயத்தைப் பார்த்துச் சிரித்தான். எதிரிகளை முறியடிக்கத் தயார் செய்ய ஆரம்பித்தான்.

இதற்குப்பின் நடந்த சண்டைகளில், இந்திய அரசர்களின் ஒன்றுபட்ட சேனையினால், ஹூணர்கள் முறியடிக்கப் பட்டார்கள், ஒரு காலத்தில் பலம் பொருந்திய சேனையில் மிஞ்சிய கால்பாகத்துடன் ராஜதானிக்குப் பின் வாங்கி, அங்கிருந்து

கடைசியாக யுத்தம் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டான் மிஹிரகுலன். அவனுடைய கோப ஜ்வாலை அந்தக் கிழஜோதிடரையே நோக்கிச் சென்றது, வெற்றி நிச்சயம் என்பது பொய்த்துப் போனதினால்.

* * *

"பொய்யன்", கோபத்தினால் திணறிக் கொண்டு கத்தினான். "என்னை ஏமாற்றுவதற்கு எவ்வளவு தைரியம்? என் எதிரிகளிடத்தில் ஒருவரிடமாவது பயப்பட வேண்டாமா? அவர்களை ஒவ்வொருவராகத் தோற்கடிப்பேனா? முட்டாள்! நீ இனிமேல் ஒருவரையும் உன்னுடைய ஜோதிடத்தினால் ஏமாற்ற முடியாது—"

"அரசே, நான் சொல்வதைக் கேளுங்கள்," கிழவர் மண்டியிட்டுச் சொன்னார். "மேன்மை தங்கிய உங்களை நான் ஏமாற்றவில்லை: நான் சொன்னவைகளெல்லாம் முன் தடவையைப்போல், இத்தடவையும் நிறைவேறியிருக்கின்றன."

"எல்லாம் நடந்திருக்கிறது!" அவன் பல்லை நற,நறவென்று கடித்தான். "எல்லாம் நடந்தேறி விட்டது. சக்கையாகத் தோற்கடிக்கப்பட்டோம். ஒவ்வொரு நிமிஷமும், நம்முடைய தலைநகரத்திலேயே தாக்குதலை எதிர் பார்க்கிறோம். பொய் வேறு சொல்லிவிட்டு, கொழுப்பு வேறா? நான் எங்கப்பா மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். உன்னைப் பலநாட்களுக்குச் சித்திரவதை செய்யப்போகிறேன்."

"பொறுங்கள், மகாராஜா, நான் உண்மையைத்தான் சொன்னேன். என்னைத் தண்டிக்குமுன் நான் சொல்லுவதைக் கேளுங்கள். தனித்தனி அரசர்களிடம் பயப்பட வேண்டாம். ஒருவர் பின் ஒருவராகத் தோற்கடிக்கப் படுவாரென்று, சொன்னேன், உண்மையில் நடந்ததென்ன? நீங்கள் அவர்களுள் ஒருவனால் மாத்திரம் தோற்கடிக்கப் படவில்லை; ஒன்று சேர்ந்த படையினால் தோற்கடிக்கப்பட்டீர்கள். என் யோசனைப்படி தனித் தனியாகத் தாக்காமல், எல்லோரையும் சேர்த்துத் தாக்கினீர்கள். நான் சொல்லியபடி செய்திருந்தால் இவ்வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது."

"இதுதான் நீ முன்கூட்டி அறிவித்ததின் அர்த்தமா?" கோபத்தின் உச்சியை அடைந்திருந்த ரத்த வெறியன் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டான். "புரியும்படி ஏன் சொல்லவில்லை? இல்லாவிடில் இரண்டு விதமாய் அர்த்தம் செய்து கொள்ளக்கூடிய வார்த்தைகளினால் என்னை ஏமாற்றினாயா? வார்த்தைகளோடு விளையாட்டா? இதற்கு முழுத் தண்டனையைப் பெறுவாய். இவனைக் கட்டுங்கள்."

மிஹிரகுலன் சிப்பாய்களின் பக்கம் திரும்பினான். "அவனைக் கொண்டுபோங்கள். அவனுக்குச் சாதாரணமான சாவு கிடையாது. முதலில் அவனுடைய தாடியை வேரோடு பிடுங்குங்கள். பிறகு நானே வந்து என்னசெய்யவேண்டுமென்று சொல்லுகிறேன். கைதியைச் சித்திரவதை செய்வதைப் பார்த்து நாளாகிறது."

மிஹிரகுலன் அப்பொழுது நடந்துகொண்டிருந்த யுத்த மந்திராலோசனைச் சபைக்குச் சென்றான். சிப்பாய்கள் அரசனின் கட்டளைப் பிரகாரம் அக்கிழவரை இழுத்துச் சென்றனர். உதவியற்ற அக்கைதியிடமிருந்து ஒரு எதிர்ப்பும் இருக்கவில்லை. அவரைக் கம்பத்தில் கட்டியவுடனே அவருடைய கண்கள் கனவு உலகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்தன. அவரிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. ஒருவேளை அவர் சில காலத்திற்கு முன் விட்டுவந்த அழகிய கிராமக் காட்சிகளும், பூர்ணச் சந்திரனைப் பழிக்கும் எழில்கொண்ட நங்கையும்தான் அவருடைய கடைசி இன்பகரமான நினைவுகளாக இருந்திருக்கும்.

அவருடைய எண்ணங்களின் ஓட்டம் தடைப்படுத்தப்பட்டது. பெரிய கிடுக்கி கொண்டுவரப் பட்டது. அதைப் பார்த்து ஒடுங்கினார். கண்களை மூடிக்கொண்டார். சிப்பாய்களுள் ஒருவன் கைதியின் தாடியைப் பிடித்துக்கொண்டான்.

* * *

தன் வீட்டுத் தோட்டத்தில் சீலவதி தனியாக உட்கார்ந்திருந்தாள். அவளுடைய சோகக் கண்கள் வான வெளியை நோக்கிச் சென்றிருந்தன. அவளுடைய மனம் அதற்கப்பால் திரிந்துகொண்டிருந்தது. ஒரு குதிரை வீரன் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான். குதிரைவீரனை அடையாளம் கண்டுகொண்டவுடன் சீலவதி உற்சாகத்துடன் ஓடினாள்.

"சுதீரா! திரும்பி வந்துவிட்டாயா?" அவள் உரத்துக் கூவினாள்.

"ஆம், சீலவதி திரும்பிவந்துவிட்டேன், நல்ல நிலைமையில்." இறங்கிக்கொண்டே சொன்னான். "இங்கிருந்து போன கிழவனுக்கு என்ன நேர்ந்தது என்று அறிய ஆவலாயிருப்பாய். கிழவன் எதிர்பார்த்ததற்கு மாறாக, முதலில் அவன் சொன்ன ஜோசியம் பலித்துவிட்டது. உண்மையில் ஒரு சிறிய படையை எடுத்துக்கொண்டு போய் இறந்துபோகட்டும் என்று சொன்னான். இரண்டாவது ஜோசியம் இரண்டு அர்த்தம் கொண்டதாக இருந்தது. மிஹிராகுலன் தோற்றுப்போய், தன்னுடைய தலைநகரத்திற்குப் பின் வாங்க வேண்டி வந்தது. ஜோசியனுடைய தாடியைப் பிடுங்கச் சொல்லி உத்தரவிட்டான். அவனுடைய சிப்பாய்கள் உத்தரவை நிறைவேற்றினார்கள். அவர்களுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. ஒருமுறை இழுத்தவுடனே முழுத் தாடியும் கையோடு வந்து, அங்கு இருப்பது, கிழ வாஸுதேவாச்சாரியாரல்ல, அவருடைய சிஷ்யனான சுதீரன் என்பதை அறிவித்தது.

"அவர்களுக்கு தாடியைப் பிடுங்கத்தான் உத்தரவிடப்பட்டிருந்தது. சுதீரன் மறுபடியும் ஆரம்பித்தான்: "அடுத்தபடி என்ன செய்ய வேண்டுமென்பதற்குக் கொடுங்கோல் அரசனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் நாலா பக்கங்களிலும் எதிரிகள் சூழ்ந்துகொண்டதால் மிஹிராகுலனுக்கு வேலை சரியாக இருந்தது. ராஜீய விஷயங்களில் தலை போய்க்கொண்டிருக்கும்பொழுது, என்னைப் பற்றி நினைவுபடுத்த ஒருவருக்கும் தைரியமிருக்கவில்லை. அவன் யுத்தத்திலிருந்து திரும்பி வரும் வரை என்னைச் சிறையிலிட்டனர். அவன் திரும்பி வந்தான், ஆனால் வெற்றியடைந்த நம் தேசக் கட்சியினர் கையில் கைதியாக. ஆகையால் நான் சுதந்திர மனிதனானேன். தேசமும் விடுதலையடைந்தது."

"கடவுளுக்கு என் நன்றி. இத்தனை அபாயகரமான காரியத்தை ஏற்றுக்கொள்ள உனக்கு எவ்வளவு தைரியமிருக்கிறது! உள்ளே வந்து அப்பாவைப் பார். நீ போனதிலிருந்து இன்னும் பலஹீனமடைந்துவிட்டார். படுத்த படுக்கையாக இருக்கிறார்."

பண்டிதர் தம்முடைய வித்தியார்த்தியைப் பார்த்து அடைந்த ஆனந்தத்திற்கு அளவும் உண்டோ? அவனுடைய கதையைக் கடைசிவரையில் கேட்டார்.

"ஒரு உபயோகமற்ற கிழவனுக்காக நீ செய்திருக்கும் மகத்தான செய்கைக்கு நான் எப்படி நன்றி தெரிவிப்பது? தன் தகப்பனாருக்காக ஒரு மகன் இதைவிட வேறு என்ன செய்ய முடியும்? என்னிடம் புஸ்தகங்களையும், ஆராய்ச்சிகளையும் தவிர வேறு ஒன்றுமில்லை. நான் இரண்டையும் உனக்கு அளிக்கிறேன். உண்மையை அறிய ஆராய்ச்சி நடக்கவேண்டும். உனக்குத் திருப்தி



Retail Branches:

285, China Bazaar Road, MADRAS.

71, Pondy Bazaar, T. NAGAR.

ஏற்பட்டதாகத் தோன்றவில்லையே, சுதீரா?—சிலவதி இங்கே வா.''

பண்டிதர் அவளுடைய கையை எடுத்துச் சுதீரனின் கரத்தில் வைத்தார்.

''இப்பொழுது என்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிட்டேன். உனக்குப் பூரண திருப்தி ஏற்பட்டதா?''

இதற்கு விடை தேவையாக இருக்கவில்லை. கிழப் பண்டிதர் ஒரு சாந்தப் புன்னகையுடன் படுத்துக்கொண்டார்.

''கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும். என் குழந்தைகளே, ஆராய்ச்சி தொடர்ந்து நடக்க வேண்டும். சபதம் செய்யுங்கள்.''

இருவரும் சபதம் செய்தனர். ●

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிட்.

சேர்மென்

ஸர். A. ராமஸ்வாமி முதலியார் K. C. S. I., D. C. L. (Oxon)

(சென்னை நகரத்திலுள்ள ஆபீஸ்கள்)

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு,
பெரியமேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் & தியாகராயநகர்,

பிராஞ்சுகள்

அம்பாஸமுத்திரம்	புதுக்கோட்டை
ஆம்பூர் (N. A. Dt.)	ராமநாதபுரம்
சிதம்பரம்	சீர்காழி
கடலூர்	தஞ்சாவூர்
ஈரோடு	தென்காசி
காஞ்சீபுரம்	திருநெல்வேலி ஜங்ஷன்
காரைக்குடி	திருநெல்வேலி டவுன்
கும்பகோணம்	வேலூர்
மதுரை	விஜயபுரம்
மாருதேரு	விழுப்புரம் &
மாயவரம்	விருதுநகர்
பாலக்காடு	

K. S. வைத்யநாதன்
அஸிஸ்டெண்ட் செக்ரடரி



நான் வசிக்குமிடத்திற்கு அருகிலுள்ள ஒரு பெண்ணைப் பார்த்துவரச் சொல்லி என் சகோதரனிடமிருந்து கடிதம் வந்திருந்தது. துணையாக யாரை அழைத்துச் செல்வது என்ற சிந்தனைக்குப் பிறகு முத்துப் பாட்டியின் நினைவு வரவே அவளை அழைத்துவர ஆளனுப்பினேன்.

பெண் எந்த இடம் என்று விசாரித்தவளிடம் பெண்ணின் விலாசத்தைக் கொடுத்தேன். 'இருந்திருந்து அந்தப் பெண்தானா அகப்பட்டது' என்று அவள் கேட்கவே தூக்கிவாரிப் போட்டு நின்றேன்.

'ஏன் என்ன விசேஷம்' என்று பதறிப் போய், கேட்பதைக் கண்டு மெல்ல மழுப்பினாள் பேச்சை.

'இல்லை ......ஒன்றுமில்லை' என்று ஒரு மாதிரியாகக் கூறவே விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டேன்.

'சொல்லுங்கள் பாட்டி. சொன்னால்தானே தெரியும். பெண்ணின் குறை தெரிந்துவிட்டால் ஆரம்பத்திலேயே நிறுத்திக் கொள்ளலாமல்லவா?'

"அப்படியொன்றுமில்லை. அந்தப் பெண் தன்னை யாருமே வந்து பார்க்க அனுமதி கொடுப்பதில்லையாம். கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லையென்றும் கூறிக்கொண்டிருக்கிறாளாம்."

"அவ்வளவுதானே. நான் என்னவோ ஏதோ என்று பயந்து போனேன். இப்படிச் சொல்லுகிற பெண்கள் எத்தனையோ பேருண்டு. அவர்களெல்லாரும் கன்னியாகவே இருந்துவிடவில்லை. என்றைக்காவது ஒருவனுக்கு மாலையிட்டுத் தான் தீருகிறார்கள்."

"எங்கள் தூரத்து உறவிலுள்ள பிள்ளைக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கப் போயிருந்தார்கள். அப்பொழுது அவள் அலங்காரமே செய்து கொள்ளாததோடு அவர்கள் இருந்த இடத்திற்கே வர மறுத்துவிட்டாள். வீணாகப் பணம் செலவானதோடு அவமானமும் அடைந்தவர்களாய் ஊர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சொல்லப்போய்த் தான் தெரியும் இந்த விபரமெல்லாம்" என்று சொன்னாள் பாட்டி.

"புறப்பட்டதை நிறுத்தாமல் போய் வந்து விடுவோம். நடப்பது நடக்கட்டும்" என்று கூறி விட்டுப் புறப்பட்டுவிட்டேன்,

பாட்டியிடம் லகுவாகக் கூறிவிட்டேன்; ஆனாலும் மனமென்னவோ பாட்டியின் வார்த்தையால் குழம்பிப் போயிருந்தது. போனால் என்ன நடக்குமோ எப்படி வரவேற்பார்களோ? அந்தப் பெண் ஏதாவது அசம்பாவிதமாக நடந்துகொண்டால்...... என்றெல்லாம் எண்ணம் அலைபுரண்டது.

போகா விட்டாலோ சகோதரன் கோபித்துக் கொள்வான். இந்தச் சிறு உதவிகூடச் செய்ய லாயக்கற்றவள் என்று தம்பி வருத்தப்படுவதை விடப் போய்ப் பார்த்துவிட்டே வந்துவிடுவோம் என்ற தீர்மானத்திற்கு வந்தேன். ஒருவேளை பாட்டி ஏதாவது விரோதத்தில் வேண்டுமென்று கட்டிவிட்ட கதையாகவும் இருக்கலாமல்லவா? எதையும் நன்கு ஆராய்ந்துவிட வேண்டும் என்ற எண்ணம் நிலைத்துவிட்டது. ஒரு பொருள் கிடையாதென்னும் போது உயர்வாகப் படுகிறதல்லவா? எப்படியும் அந்தப் பெண்ணையே முடித்துவிட வேண்டுமென்ற வைராக்கியத்துடன் புறப்பட்டேன்.

2

எதற்கும் பெண்ணின் வீட்டிற்கே நேரடியாகப் போக வேண்டாமென்று அடுத்த தெருவிலுள்ள என் சிநேகிதி மாலதியின் வீட்டில் இறங்கி இருந்தேன். நான் வந்த விஷயத்தைக் கூறவும் அவளும் பாட்டி சொன்னதையே சொன்ன போது என் உறுதி சிறிது தளர ஆரம்பித்தது. இருந்தாலும் என் மனதைத் திடப்படுத்திக் கொண்டு வந்த காரியத்தை முடிக்காமல் திரும்புவதில்லை என்று உறுதி கொண்டேன்.

பெண் பார்ப்பதற்காக என்று சொல்லாமல் சிநேகிதி என்ற முறையில் என் தோழி என்னை அழைத்துச் சென்றாள். அப்போது பெண்ணின் தாயார் வீட்டிலில்லை. பெண் மட்டும் தனியாக இருந்தாள்.

தெரிந்தவள் என்பதற்காக மாலதியை உபசரித்ததோடு அவள் தோழி என்ற முறையில் எனக்கும் உபசரணை பலமாக நடந்தது. பெண்ணைப் பார்த்தவரையில் பெண்ணின் முகத் தோற்றத்திலிருந்து சுபாவத்திலும் நல்லவளாகத் தானிருக்கவேண்டும் என்று தோன்றியது. ஆனால் அவளைப்பற்றி மற்றவர்களின் வாய்மொழி... ஒருவர் இருவர் மட்டுமல்ல. அவளைத் தெரிந்த யாருமே அவளைப்பற்றி—அவள் சுபாவத்தைப்பற்றி—குறையாகவே கூறிவந்தார்கள். எதை நம்புவது? சுபாவத்தில் சரளமாகப் பழகும் அவள் அந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஏன் அப்படி நடந்துகொள்ள வேண்டும், அவள் மனம் புண்படும்படியான ஏதாவதொரு சம்பவம் நடந்திருக்க வேண்டும், அதுவே அவள் மனம் மாறுவதற்குக் காரணமாயிருக்கவேண்டும், என்ற சந்தேகம் என் மனதுள் தோன்றியிருந்தது. எப்படியாவது அதை ஆராய்ந்து, முடிந்தால் அந்தப் பெண்ணையே முடித்துவிடுவதென்ற திர்மானத்துடன் ஊர் வந்து சேர்ந்தேன்.

வந்ததும்முதல்காரியமாகப் பெண்ணின் விலாசத்திற்கு நான் வந்த விபரத்தைக் குறித்து எழுதி—அவளுக்குச் சம்மதமானால் முகூர்த்தத்தை வைத்துக்கொள்ளலாமென்றும் குறித்து எழுதியிருந்தேன். அதற்குப் பதில் ஒன்றுமே வரப்போவதில்லை என்று தெரியும். ஆனாலும் எழுதித்தான் பார்ப்போமே என்று துணிந்து எழுதிவைத்தேன்.

நான் நினைத்ததற்கு மாறாகத் தபால் அனுப்பிய நாலாவது நாள் பதில் வந்தது. எனக்கேற்பட்ட ஆனந்தத்தில் கவரைப் பிரித்துப் பார்ப்பதற்குக் கூடத் தோன்றாமல் கையெழுத்தையே பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தேன். நான் எடுத்துக் கொண்ட காரியத்தில் எனக்கு வெற்றி......ஆனந்தத்தால் துள்ளியது மனம். ஒரு வேளை... திருட்டுத்தனமாகப் பெண்பார்க்க வந்ததற்கு என்னைத் தாக்கி எழுதியிருந்தால்.........

கடிதத்தைப் பிரித்தேன். நாலு பக்கமும் மஞ்சள் பூச்சிலிருந்து சுபச் செய்தியென்பதை அறிந்து பூரித்துப் போனேன்.

"உங்கள் வருகை எங்களுக்கு ஆனந்தம். உங்கள் அன்பும் எங்கள் அதிர்ஷ்டமும் என் பெண்ணுக்கு நன்மையளித்துவிட்டன. என் பெண் விவாகத்திற்குச் சம்மதித்துவிட்டாள். எப்பொழுது முகூர்த்தம் வைத்துக் கொள்ளலாமென்பதைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்." என்று பெண்ணின் தந்தை எழுதியிருந்தார்.

நான் அடைந்த உவகையை எப்படி விவரிப்பது? இந்தச் சந்தோஷத்தை என் சகோதரனுக்குத் தந்தியின்மூலம் தெரிவித்துவிட்டு, முத்துப் பாட்டியின் வீட்டை நோக்கி நடந்தேன். என்னுடைய வெற்றியை நேரில் தெரிவித்து மகிழ்வடைய முத்துப் பாட்டியின் வீட்டையடைந்தேன்.

விஷயத்தைக் கூறவும் அதிசயித்து நின்றாள் முத்துப்பாட்டி. "இருந்தாலும் நீ சாமர்த்தியசாலிதான்" என்று பாட்டி கூறியபோது பெருமையினால் பூரித்துப் போனேன். அந்தப் புகழ்ச்சிச் சொல்லைக் கேட்பதற்காகத்தானே அவளுடைய வீட்டைத் தேடிவந்திருந்தேன்.

விவாகத்திற்கு இரண்டு நாள் முன்னதாக மாப்பிள்ளை அழைப்பு வைத்திருந்தார்கள், எங்களை எதிர்கொண்டழைத்த பெண்ணின் தந்தை ஏதோ சொல்லத் தயங்கினார். அவர் தயங்கியதைக் கண்டதும் என் மனதில் பலபல எண்ணங்கள் எழுந்து மறைந்தன. ஒருவேளை பெண் விவாகத்

திற்குச் சம்மதிக்க மறுத்துவிட்டாளோ? இப்படிச் சிந்தனைச் சேற்றில் திக்குமுக்காடிக் கொண்டிருந்த சமயம் அவராகவே பேச்சைத் தொடங்கினார்.

"ஒரு விஷயம்...... தவருக எடுத்துக்கொள்ள மாட்டீர்களே......"

"சொல்லுங்கள்...... கேட்கிறேன்...... நாங்கள் கேள்விப்பட்டது சரியாகிவிட்டதுபோலும்'' என்றேன்.

"என்ன கேள்விப்பட்டீர்கள்?"

"பெண்ணின் குணத்தைப் பற்றித்தான்"

"நான் சொல்லவந்தது பெண்ணைப் பற்றியல்ல ....அவள் தாயாரைப்பற்றி"

"தாயாருக்கென்ன?"

"அவள் குணம் ஒரு மாதிரி...... அவளுக்கு இந்தக் கலியாணத்தில் விருப்பமில்லை"

"நீங்கள் சொல்வது புதுமையாக அல்லவா இருக்கிறது? பெண்ணல்லவா அப்படிச் சொல்லிக்கொண்டிருந்ததாகக் கேள்வி......?''

"அதற்கெல்லாம் காரணம் உண்டு. விபரமாகச் சொன்னுல்தான் புரியும்'' என்று நிறுத்தினர்.

என் மனம் அவர் சொல்லப்போகும் விபரத்தை அறியத் துடித்தது.

"சொல்லுங்கள். அதன்பின் நான் எப்படி நடந்துகொள்ளவேண்டுமோ அப்படி நடந்து கொள்ளுகிறேன்'' என்றதும் அவர் தொடங்கினுர்.

* * *

மனைவியின் பிறந்தவீட்டுச் சலுகையில் வாழும் எந்த மனிதனும் மானத்தோடு வாழமுடியாது என்பது என் அனுபவத்தில் கண்ட உண்மை. என் மனைவிக்குப் பிறந்த வீட்டில் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. அதனுல் அவளும் அவள் குடும்பத்தவர்களும் என்னை ஒரு துரும்பாக மதித்திருந்ததில் வியப்பில்லை. அவர்களைச் சொல்ல வாயில்லை. அவர்கள் பணத்தில் வாழலாமென்றிருந்த என் மதியீனத்தைத்தான் நொந்துகொள்ளவேண்டும். அப்படியில்லையென்ருல் அம்மா தேர்ந்தெடுத்த ''லக்ஷ்மி'' யை மணந்துகொள்ள மறுத்திருப்பேனு?... அதெல்லாம் பழங்கதை. அதையெல்லாம் இப்பொழுது சொல்லி என்ன பிரயோஜனம்?

மணமான சிறிது காலம் மீனுவுக்கும் அவள் கொண்டுவந்த பணத்திற்கும் அடிமையாக இருந்ததென்னவோ உண்மை. நாட்கள் சென்றன. அவளது வீட்டிலிருந்து உதவிபெறும் சமயங்களில் அவள் பேசும் பேச்சுக்களிலிருந்து அவளது உண்மை மனதை அறிய முடிந்தது. தன் தயவால் வாழ்கிறவன் என்கிற நினைப்பில் என்னையே அவமதிக்கத் தொடங்கியபோது அவள்மீது கொண்டிருந்த பாசம் சிறிது சிறிதாக மங்க ஆரம்பித்தது.

இந்த மாறுதலினுல் என் மனம் நாளுக்கு நாள் குன்றத் தொடங்கியதே தவிர, அவளது போக்கில் எவ்வித மாறுதலுமே இல்லை. சொல்லப்போனுல் என்னுடைய மௌனத்தினுல் அவளுடைய கர்வம்தான் தலைக்கேறத் தொடங்கியது. அவள் விஷயம் எதிலுமே தலையிடாமல் ஒதுங்கிப் போவதை அவளுக்குப் பயந்து நடப்பதாகக் கருதிக்கொண்டாள்.

அதை வியாஜமாகக் கொண்டு என் தாயாரிடமும் அவமதிப்பாக நடக்கத் தொடங்கவே அவள் மானத்திற்கஞ்சி, தனியாக ஒதுங்கிவிட்டாள். ஆனுல் நான் மட்டும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவளுடன் ஒண்டியும் ஒண்டாமலும் வாழ்ந்து வந்தேன்.

இடையே வருஷங்கள் ஓடி மறைந்தன. ஒன்று இரண்டென நாலு குழந்தைகளுக்கும் தகப்பனுகி விட்டேன். ஊரிலுள்ளவர்கள் மனைவியின் பணத்திற்காக வாயை மூடிக்கொண்டிருப்பதாக என்னைப் பரிகசித்தார்கள். நிஜமாகவே என்னுல் என்ன செய்யமுடியும்? முரட்டுக் குதிரையை வண்டியில் பூட்டிவிட்டால் அதன் போக்குப்படியேதானே போகவேண்டியிருக்கிறது. முரண்டினுல் நின்று ரகளை செய்யும். அதனுடன் போராடி அதனை அடக்கமுடியாமல் தவிப்பதைவிட அதன் போக்குப்படியே போகவிட்டுப் பின்னுல் போய்க்கொண்டிருப்பதுதான் உசிதமென்று தோன்றியது.

என்னுல் செய்து கொடுக்கமுடியாத சௌகர்யங்களையெல்லாம் பிறந்த வீட்டுப் பணத்தின் மூலம் பெற்றுக்கொண்டு அவளும் குழந்தைகளுமாகச் சௌகர்யமாய் இருக்கட்டுமே, அதைத்தான் நாம் கெடுப்பானேனென்று வாளாவிருந்தேன். மனைவியை அடக்கி ஆளத் தெரியாதவன் என்கிற குறை என் பெற்ரோருக்கு. அதனுலேயே என்னுடன் இருக்கப் பிடிக்காமல் தனியாகப் பிரிந்து விட்டனர். ஒரே குடும்பமாக இருந்து போர்க்களமாக மாருமல் தனித்தனியே பிரிந்திருந்தது என் மனதிற்கோர் ஆறுதல்.

எப்பொழுதாவது நினைத்துக் கொண்டால் அம்மா என்னைப் பார்க்க வருவாள். வந்த இரண்டொரு நாட்களுக்குள்ளாகவே மீனுவின் சர்வாதிகாரம் பொறுக்கமுடியாமல் புறப்பட்டுப் போய்விடுவாள்.

எப்படியோ ஓடிக்கொண்டிருந்தது. என் வாழ்வு. இன்பமோ துன்பமோ எதிலும் பற்றற்ற ஞானியைப்போல் வாழ்ந்த என் வாழ்வில் உயிர் கொடுக்க வந்தவள் என் நீலா. அறியாப் பருவத்தில் மழலையால் மயக்கி மகிழச்

செய்ததை மட்டும் இங்குக் குறிப்பிடவில்லை. அது உலகத்துக் குழந்தைகள் எல்லோராலும் அடையக்கூடிய இன்பமே, ஆனால் என் நீலா அப்படியல்ல.

அவளுக்கு அறிவு தெரிய ஆரம்பித்ததிலிருந்தே தாயின் போக்கு, தவறு என்பது எப்படியோ தெரிந்துவிட்டது. தன் அம்மாவிடம் அன்புவைப்பதின் மூலம் அவள் பிறந்த வீட்டுப் பணத்தை அனுபவிக்கலாம் என்பது தெரிந்திருந்தும் ஏனோ அவள் தாயை வெறுத்தாள்...... இல்லை...... அவள் போக்கை வெறுத்தாள். என்மீது அன்பு செலுத்துவதினால் தாயின் வெறுப்புக்கு ஆளாகிறோமே என்பதை அறிந்தும் என்மீது தன் பிரேமையைக் கொட்டினாள். மீனா என்ன முயற்சித்தும் என்மீது படிந்துவிட்ட அவள் அன்பைத் திருப்ப முடியவில்லை.

அது ஒன்றுதான் என் வாழ்வின் ஆறுதல். அவளது கபடமற்ற அன்புதான் நைந்து போயிருந்த என் உள்ளத்திற்குப் புத்துயிர் கொடுத்த மருந்து. நானும் வாழவேண்டும், எனக்காக இல்லாவிட்டாலும் என்மீது பாசம் வைத்திருக்கும் என் மகளுக்காவது நான் வாழ வேண்டுமென்ற நம்பிக்கையை வளர்த்ததுவும் அவள் அன்புதான்.

அதிகம் வளர்த்துவானேன்? தாயிடமும் தாய் வீட்டு மனிதர்களிடமும் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டு என்னைப் பேணி வளர்த்தாள் என் மகள். என்னைப் பெற்றதாய் மீனாவுக்குப் பயந்துகொண்டு என்னை நிராதரவாகக் கைவிட்டு விட்டாள். ஆனால் நான் பெற்ற செல்வம், அல்லும்பகலும் அவளுடன் போராடி என்னைத் தடுத்தாட்கொண்டாள்.

நீலா வளரவளர மீனாவுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு சிறிது சிறிதாக அறுந்துவந்தது, நீலாவுக்குப் போதிய அறிவு தெரிய ஆரம்பித்த போதோ எனக்கும் என் மனைவிக்குமிடையே இருந்த சிறிதுதொடர்பும் அற்றுப்போய்விட்டது. என் உலகமே நீலா என்றிருந்தாலும் வீட்டில் சர்வாதிகாரம் மட்டும் மீனாதான். அவ்வப்போது அவளது போக்கைக்கண்டிக்கத் தவறமாட்டாள் நீலா.

இந்த ஒரே காரணத்தால் மீனாவின் பிறந்த வீட்டு மனிதர்களுக்கு என்னிடம் எத்தனை வெறுப்போ அத்தனை வெறுப்பு நீலாவிடம். என்னிடம் காண்பிக்கும் அலக்ஷியத்தையே அக்குழந்தையிடம் காண்பிக்கும்போதும் அவள் அதைப் பொருட்படுத்தமாட்டாள்.

அதிலும் மீனாவின் தம்பி பாலுவுக்கு நீலாவை அழவிட்டு வேடிக்கை பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சி. எதைப் பேசினால் நீலாவின் ரோஷத்தைக் கிளப்பிவிட முடியும் என்கிற உண்மையை நன்கறிந்திருந்த பாலு என்னைப்பற்றி, என் பொருளற்ற தன்மையைப்பற்றி, குறைவாகப் பேசி, அவள் மனதைப் புண்படுத்துவான். தீபாவளியின்போது, ஒரு தடவை பாலு வந்திருந்தான். என் சக்திக்கியன்றவாறு சாதாரணத் துணிகள் வாங்கியிருந்தேன் எல்லோருக்கும்.

விலை உயர்ந்த துணிகள் எடுத்துக் கொடுத்து என்னை மட்டம் தட்ட விரும்பிய பாலு கடை வீதிக்குப் போய் உயர்ந்த ரகத்துணிகளை வாங்கிக் குவித்துவிட்டான். மற்றக் குழந்தைகளெல்லாம் ஆசையோடு அவைகளை எடுத்துக்கொண்டபோது நீலா மட்டும் அவற்றுள் ஒன்றையேனும் தொடவேயில்லை, அதைக் கண்ட பாலு மிகவும் விலையுயர்ந்த துணி ஒன்றை அவளிடம் நீட்டி, இது உனக்குத்தான் பெற்றுக்கொள் என்றான்.

என் தந்தை அன்போடு எடுத்த சீட்டித் துணியே எனக்குப் போதும். பகட்டுக்காகப் பணத்தைக் கொட்டிவிட்டு, நாளை இடித்துக் காட்டும் உங்கள் பட்டுத் துணி எனக்கு வேண்டாம் என்று வாங்க மறுத்துவிட்டாள்.

அவளுக்குத் தெரியும், கேட்காதிருக்கும்போதே ஏதாவது ஒன்றை வலுவில் வாங்கிக் கொடுத்து விட்டு, பின்னர் பேச்சுக்குப் பேச்சு அதைச் சொல்லிக்காட்டும் பழக்கத்தை நன்கு உணர்ந்திருந்தாள். நேருக்கு நேராகத் தன்னை மடக்கிவிடவே தலைகுனிந்தான் பாலு. ஆனாலும் உள்ளுக்குள் அனலாய்க் கொதித்தது கோபம். தன்னை அவமானப்படுத்திய அவளைப் பழிவாங்கும் நாளை வெகு சீக்கிரத்திலேயே எதிர்பார்த்துக் கறுவிக்கொண்டிருந்தான்.

மணம் என்பது பலவந்தத்தால் நடத்தப்படும் வெறும் சடங்கல்ல. தம்பதிகள் இருவரும் மனமொத்துச் செய்யவேண்டிய மங்கள காரியம் என்பதை உணராத மீனு மகளுக்கு விவாகம் நிச்சயித்தாள்.

கனவிலும் காணவிரும்பாத பாலுவிற்கே மணமுடிக்கத் திட்டமிட்டாள். இதையறிந்த நீலா திடுக்கிட்டாள். மாமன் என்று சொல்லக்கூட விரும்பாத அவனைக் கணவனாக ஏற்க அவள் ஒப்பவில்லை. தாயிடம் போராடினாள். ஒரே தீர்மானமாக இருந்த மீனுவை நீலாவின் கண்ணீரோ, புலம்பலோ ஒன்றும் செய்யமுடியவில்லை. விதியை நினைத்து அழுவதைத் தவிர ஒன்றுமே செய்ய இயலாத நிலையிலிருந்தாள்.

அன்று பாலுவிடமிருந்து பணம் வந்திருந்தது. மணப் பெண்ணுக்கு வேண்டிய நகைகள் துணிகள் வாங்குவதற்காகப்பக்கத்து டவுனுக்குச்சென்றுவிட்டாள் மீனு. என் வேலையைக் கவனிக்க ஆபீஸ் அறைக்குச் சென்றேன். சிறிது நேரம் சென்றது. தயங்கிய நடையில் என் அறைக்கு வந்தாள் நீலா. 'என்ன வேண்டும் நீலா' என்ற எனது கேள்விக்கு உடனே பதில் அளிக்க முடியாதவள் போல் தயங்கினாள். கண்கள் நீரைக் கக்கத் தயாராய்த் துடித்து நின்றன.

எனக்குத் தெரியும் அவள் எதற்காக வந்திருப்பாளென்று. விவாகத்தில் தனக்கு விருப்பமில்லையென்பதைத் தெரிவிக்க வந்திருப்பாள். ஆனால் என்னால் என்ன செய்யமுடியும். மீனுவின் போக்குக்கு விரோதமாக நடக்க என்னிடம் பலமிருக்கிறதா? என்றைக்கானாலும் அவள் தயவில்தானே நீலாவின் விவாகம் முடியவேண்டும். இந்நிலையில் எப்படி அவள் போக்குக்கு மறுத்துப் போகமுடியும்.

'அப்பா ஒரு விஷயம்...' என்றாள்.

'சொல்லம்மா' என்றேன்.

என் கையில் ஒரு கவரை நீட்டினாள். படித்துப் பார்த்தேன். பாலு எழுதியிருந்தான், அவளுக்கு. 'உன் கொட்டம் அடங்கும் நாள் வந்துவிட்டது. எனக்கு மனைவியானபின் என்னை எதிர்த்துப் பேசமுடியாதல்லவா?' சவால் விடுத்திருந்தான் கடிதத்தில். ஏற்கனவே அவனை வெறுத்த நீலாவுக்கு அவனது பயமுறுத்தல் வேறு பீதியைக் கொடுத்திருந்தது.

'எனக்கு இந்த விவாகத்தில் விருப்பமில்லை'

'தெரியும்.'

'தெரிந்துமா பேசாமலிருக்கிறீர்கள்?' அவள் குரலில் ஆச்சரியம், ஆத்திரம் இரண்டும் ஒருங்கே தொனித்தன.

'நான் என்ன செய்யமுடியும் அம்மா?'

'அப்பா இதென்ன பேச்சு.? நீங்கள் ஆண் பிள்ளையில்லையா? ஒரு பெண்ணுடன் எதிர்த்துப் போராட உங்களுக்குத் திறமையில்லையா?'

'ஆம், திறமை இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். பணமில்லாதவனுக்கு என்னதான் உண்டு...'

'பணமென்ன அத்தனை பெரிதா அப்பா. உங்கள் பெண்ணின் வாழ்வை விடவா?'

'என் பெண் வாழ்வதற்குத்தான் பணம் வேண்டுமென்கிறேன்......'

'உண்மையான அன்பிருக்குமிடத்தில் தான் வாழ்வு பெறமுடியும். அவர்கள் பணச்செருக்கினால் இன்று உங்களைத் தாழ்வாகப் பேசுவது போல் என்னையும் பேசி, என் நிம்மதியைக் குலைக்கலாமல்லவா? நிம்மதியிழந்த வாழ்வில் என்ன சுகத்தைக் காண முடியும்......?'

'உண்மை. அவள் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை' ஆனாலும் நானென்ன செய்ய முடியும்?

'நீங்கள் ஒன்றுமே செய்யவேண்டாம். என் செய்கைக்குக் குறுக்கே நிற்காமலிருங்கள்." என்று கூறிவிட்டு அறையைவிட்டு வெளியே போய்விட்டாள். அதுமுதல் எந்த நேரம் என்ன ரகளை நடக்கப்போகிறதோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருந்தேன்.

விவாகத்திற்கு முன் தினம் பெண்ணை இங்கிருந்து அழைத்துக் கொண்டுபோக வேண்டும். மற்ற ஏற்பாடுகளெல்லாம் பாலுவே செய்து வைத்திருப்பதாகச் சொல்லியிருந்தான். அந்த ஏற்பாட்டின்படி தயார் செய்துகொண்டிருந்தாள் மீனு.

புறப்படவேண்டிய தினம் வந்தது. அதிகாலையிலேயே எழுந்து பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள் மீனு. வழக்கமாக நாலு மணிக்கே எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கும் நீலா அன்று மணி ஏழு

டித்தும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே யில்லை. இடையிடையே மகளை எழுப்பிவிட்டுக் கொண்டும் தன் வேலையைக் கவனிப்பதுமாகவுமே இருந்த மீனா வெகு நேரமாகியும் மகள் எழுந் திருக்காததைக் கண்டு கோபத்துடன் எழுப் பினாள்.

நேரம் சென்றுகொண்டிருந்தது. மீனா எத்தனை பாடுபட்டும் நீலாவைப் படுக்கையைவிட்டு எழுப் பவே முடியவில்லை. விருப்பமில்லாத விவாகத் தில் என்னைப் பலவந்தப்படுத்த முடியாது. இந்த விவாகத்திற்கு நான் உடன்படவே மாட்டேன். என்று எழுந்திருக்க மறுத்துவிட்ட நீலாவை என்ன செய்வதென்று தெரியாமல் என்னிடம் ஓடிவந்தாள். நான்தான் ஏற்கனவே நீலாவுக்கு அபயமளித்து விட்டேனே. ஆகவே என்னால் செய்வதொன்றுமில்லையென்று கையை விரித்து விட்டேன்.

பிறந்தவீட்டுப் பகையை வாங்கிக் கொடுத்து விட்டாள் என்பதற்காகச் சீறிவிழுந்தாள் மக ளிடம்.........வைதாள்.........சாபங்கொடுத்தாள். தன் மானமே போய்விட்டதாகக் குமுறினாள். அழுதாள்...... விழுந்தாள், ஒன்றுக்குமே மசிய வில்லை நீலா.

குழந்தைக்கு விருப்பமில்லாத விஷயத்தை விட்டுவிடவேண்டியதுதான் என்று எப்படியோ துணிந்து கூறிவிட்டேன். நானும் அவள் பக்கம் சேர்ந்துவிட்டேன் என்பதை அறிந்துகொண்ட மீனா இனி தன் ஜம்பம் சாயாதென்பதை உணர்ந்துகொண்டாள்.

எங்களைப் பழிவாங்காமல் விடப்போவதில்லை என்று கறுவிக்கொண்டு பிறந்த வீடு சென்ற மீனாவிற்கு அங்கே பெருத்த ஏமாற்றம் காத்திருந் தது. நீலா விவாகத்திற்குச் சம்மதிக்கவில்லை யென்று கேள்விப்பட்டதும் ஏற்கனவே பார்த் திருந்த பெரிய இடத்துப் பெண்ணை நிச்சயித்து விட்டார்கள் பாலுவிற்கு. அவர்களுடைய உதவி யின்பேரில் நீலாவைப் பயமுறுத்தி விவாகத்திற்கு இணங்க வைக்கலாமென்று வந்த மீனாவிற்குத் தம்பியின் ஏற்பாடு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. பணக்கார இடத்தில் சம்பந்தம் வலிய வருகிறபோது எளியவீட்டுப் பெண்ணை, அதுவும் விருப்பமில்லாத பெண்ணைப் பலவந்தப் படுத்தி மணம் செய்துகொள்ளப் பைத்தியமா பாலுவிற்கு. இரு இடத்திலும் அவமானம் அடைந்த மீனா அன்று முதல் எங்களை வெறுத் தாள்.

* * *

அதன்பின் பலர் நீலாவைப் பெண் கேட்க வந்தனர். வருகிறவர்களுக்கெல்லாம், விவாகம் முடியப்போகும் தருணம் நீலா மறுத்து விட்டது மட்டும் எப்படியோ தெரிந்துபோய் விடு கிறது. ஆனால் அவள் மறுத்ததின் காரணம் அவர் களுக்குத் தெரிவதில்லை. தெரிந்துகொள்ளவும் விரும்புவதில்லை. "அந்த விவாகத்தைத் தடை செய்து விட்டதுபோல் தாங்கள் நிச்சயம் செய் தாலும் அப்படித்தான் நிறுத்திவிடுவாளோ" என்று ஒதுங்கிப்போய்விட்டனர்.

வருகிற வரன்கள் முடியாமல் தட்டிப்போவ தோடு, உண்மையை உணராது, உணரவிரும்பாது தன்மீது பழியைச் சுமத்திச் செல்வதால் மனம் குன்றினாள். அதிலிருந்து யாருமே தன்னைப் பெண் பார்க்க வருவதை நீலா விரும்புவதில்லை.

அதைத்தான் நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர் கள். விதி நல்லதாக அமைந்திருந்ததால் நீங்கள் அதைப் பொருட்படுத்தாததோடு சாமர்த்தியமாக நீலாவின் மனது புண்படாத வகையில் பெண் ணைப் பார்த்துப் பேசி முடித்துவிட்டீர்கள். அதற் காக உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி'' என்று கூறி முடித்தவர் ஆழ்ந்த பெருமூச்சுவிட்டார்.

அப்பொழுதுதான் எனக்கும் சாவகாசமாக மூச்சு வந்தது. நான் கேள்விப் பட்டதுபோல் பெண்ணின் குணத்தில் குறையொன்றுமில்லை. சந்தர்ப்பம்தான் அவளுக்குக் குறைவேற்படுத்தி யிருந்தது என்பதை அறிந்தபோது என் மனதி லிருந்த பாரம் நீங்கி நிம்மதி ஏற்பட்டது.

பெண்ணின் தாயார் எப்படி இருந்தாலென்ன? வாழப்போகிறவள் நீலாதானே. அவள் குணம் சிலாக்கியமானது என்பதை அறிந்தது முதல் என் உள்ளத்தில் ஆனந்தம் பெருக்கெடுத் தோடியது. என் ஆனந்தத்தைப் பகிர்ந்தளிக்க என் உடன் பிறந்தவனையும் முத்துப்பாட்டியை யும் தேடிக்கொண்டு அவர்களிருக்குமிடம் ஓடி னேன்.

உண்மையான நீம் ஆயில் சோப் இதுதான்

சருமத்தைப் பாதுகாக்க அவசியமென்று நிபுணர்கள் கருதும் நீம் எண்ணெயினின்றும் தயாரிக்கப்படுவது **மார்கோ** ஒன்றுதான். தினசரி **மார்கோ** உபயோகித்து உங்கள் மேனியைப் பாதுகாருங்கள்.

மார்கோ சோப்

டாய்லட் & மெடிஸினல்

கல்கத்தா கெமிகல்

CALCUTTA CHEMICAL

குணத்தில் சிறந்தது

மைதீன் புகையிலை

தாம்பூலப் பிரியர்கள் மிகவும் விரும்புவது

டிரேட் மார்க்

E.S. MYDEEN & CO
இ.எஸ்.மைதீன்
TRADE MARK
KUMBAKONAM

ரிஜிஸ்டர் நெ 7479

E.S.மைதீன் & கோ

கும்பகோணம்

"சரும அழகைப்பெற நான்

லக்ஸ் டாய்லட் சோப்பையே

நம்பியிருக்கிறேன்"

என்று சொல்கிருர்

மாதுரி தேவி



இனிய மணத்துடன் கூடிய
இந்த வெண்மையானதும் சுத்த
மானதுமான சோப் உங்கள் சருமத்தை
வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 336-X30 TM

ஐயோ பல்லி!

நா. கி. நாகராசன்

கண்ணுக் கெட்டிய தொலைவுவரை ஒரே சதுப்பு நிலம். சாதாரணமாக நாம் பார்க்கும் தாவரங்கள் எதுவும் அந்நிலத்தில் இல்லை. உயரமாக வளர்ந்த பெரணைகளும், பாசைகளும் விசித்திர வடிவுள்ள பனை மரங்களும் அங்கே வளர்ந்துள்ளன. சேற்றிலும், நீரிலும் புதைந்திருக்கும் பெரிய பாறைபோன்றதொரு உருவம் தென்படுகிறது. அசைவற்றுக்கிடந்த அது மெல்ல அசைகிறது. அது வெறும் பாறையல்லவென்றும், அது ஒரு மிருகம் என்றும் இப்போது புலனாகிறது. பூதாகாரமான தனது உடலை அது தாங்கமுடியாமல் தாங்கிக்கொண்டு மெல்லக் கரையேறுகிறது. பிரம்மாண்டமான அதன் உடலுக்குக் கீழே நான்கு குட்டையான கால்கள், மெல்லிய நீண்ட கழுத்திற்குமேல் சிறிய தலை. இந்த விந்தை விலங்கு தள்ளாடிக்கொண்டே நடந்துவந்து தழைகளையும், இலைகளையும் உண்ணத் தொடங்குகிறது.

இப்போது ஒரு பயங்கரமான ஒலி கேட்கிறது. பூதத்தினிடம் கலவரம் தோன்றுகிறது. அது அசைந்தாடிக்கொண்டே மீண்டும் நீரையடைய முயலுகிறது. இவ்வளவு பெரிய உடம்பை அளித்த பிரமன் அதற்கு ஏற்ற கால்களையும் தர மறந்துவிட்டான்! அது நடப்பதே பெரும்பாடாக இருக்கையில் விரைந்து செல்வது எப்படி? ஒலி கேட்ட திசையில் இன்னொரு பயங்கர உருவம் தோன்றுகிறது. ஒரு வீட்டின் உயரமுள்ள அவ்விலங்கு குட்டைக்கால் பூதத்தைவிடச் சிறியது. அது உடலை உயரத் தூக்கிக்கொண்டு இரண்டு கால்களால் நடந்து வருகிறது. அதன் முன்னங்கால்கள் குட்டையாக முடவனது கைகளைப்போல் தொங்குகின்றன. ஆனால் அதன் கால்களிலுள்ள கூரிய நகங்களையும், வாயிலுள்ள நீண்ட பற்களையும் கண்டாலே குலை நடுக்கம் விளைகிறது. அசைந்தாடிக்கொண்டு நடக்கும் பூதத்தை அது பிடித்துவிடுகிறது. அதன் கொடிய பற்கள் பூதத்தின் கழுத்தில் பதிகின்றன. பூதத்தின் கழுத்து முறிகிறது. அது துடிதுடித்து இறக்கிறது. இறந்த பூதத்தை அவ்விலங்கு வயிறார உண்கிறது.

இச்சம்பவம் மதுவெறி மயக்கத்தால் பிதற்றும் எழுத்தாளனின் பயங்கரக் கற்பனையோ, 'திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த சிறுவர் கதை'யோ அல்ல. இது பதினைந்து கோடி ஆண்டுகளுக்கு முன் புவியில் நடைபெற்றிருக்கவேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆகையால் அலெக்ஸாந்தரின் படையெடுப்பும், அக்பரின் படையெடுப்பும் எத்தகைய உண்மைகளோ இதுவும் அத்தகைய உண்மைதான்.

பதினைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்னால்! சிருஷ்டியின் சிகரமெனத் தற்பெருமை அடித்துக்கொண்டு வாழ வழி தெரியாது தவிக்கும் மானிடன் அப்போது தோன்றவில்லை. அவ்வளவேன்? இப்போது புவியில் காணப்படும் விலங்குகள் யாவும் அப்போது தோன்றவே இல்லை. மேற்கூறிய விலங்கு வகைகள் மட்டும் அப்போது புவியில் வாழ்ந்தன. ஊர்வன என்ற விலங்குத் தொகுதியைச் சேர்ந்த பல்லிகளின் மூதாதையர் இவை என விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர். ஆகையால் இவற்றைப் பயங்கரப் பல்லிகள் (Dinosaurs) என அவர்கள் அழைக்கிறார்கள். இவை தற்காலத்திலுள்ள முதலைகளின் நெருங்கிய உறவினம் ஆகும். புவியின் பரப்பு முழுவதையும் தமதாக்கிக் கொண்டு இவை அக்காலத்தில் ஆட்சி புரிந்தன.

நான் குறிப்பிட்ட சம்பவம் வட அமெரிக்காவில் தற்போது ராக்கி மலைத் தொடராக உள்ள பகுதியில் நிகழ்ந்தது. ஆனால் இதுவே ஆப்பிரிக்காவிலோ, ஆஸ்திரேலியாவிலோ, மத்திய ஆசியாவிலோ நிகழ்ந்திருக்கக்கூடும். ஏனெனில் எப்போதோ வாழ்ந்து மறைந்தொழிந்த இவ்வுயிர்களின் சடலங்கள் உலகின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. பயங்கரமான இருகாற் பல்லியின் சடலமும் அதனருகே அதற்கிரையான பூத விலங்கின் சடலமும் அமெரிக்காவில் பழைய பாறைகளில் தோண்டி எடுக்கப்பட்டன. பூதத்தின் முதுகெலும்பில் அதன் எதிரியின் பல் வரிசை பதிந்த அடையாளங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன. இச் சடலங்களிலிருந்து அவை எத்தகைய வடிவுள்ளவை என்றும், அவை எவ்வாறு வாழ்ந்தன என்றும் ஊகிக்கமுடிகிறது.

இந்த விலங்குகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இவற்றுள் முதல்வகை விலங்குகள் நீண்ட கத்தி போன்ற கூர்மையான பற்களை உடையவை. ஆகையால் இவை மாமிச பட்சணிகளாக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். இவற்றுள் பெரும்பான்மையானவை தமது பின்னங் கால்களால் பறவைகளைப்போல் அசைந்தாடி நடந்தன. மேற்கூறிய இருகாற் பல்லி இவ்வகையைச் சேர்ந்தது. இதற்கு மாறுபல்லி (Aelosaur) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் நீளம் சுமார் 35 அடி. இது உடலைவிட நீண்ட வாலையுடையது. இவ் வால் இதன் உடலின் எடையை ஈடுசெய்து இது நிமிர்ந்து நடக்க உதவியது. அக்காலத்தில் வாழ்ந்த விலங்குகளினிடையே இது ஓர் அசகாய சூரனாக விளங்கியது. வலிமை வாய்ந்த இவ் விலங்கு மந்த புத்தியுள்ள தனது தோழர்களை வேட்டையாடி நிம்மதியாகக் காலங் கழித்தது.

ஆனால் இதைவிடப் பெரியதும், கொடியதுமான விலங்கொன்றும் இதன்பின் புவியில் தோன்றியது. கொடும் பல்லி (Tyrannosaur) என்று விஞ்ஞானிகள் இதற்கு இட்ட பெயர் முற்றிலும் பொருத்தமானது. இது சுமார் 50 அடி நீளமுள்ளது. இதன் உயரம் சுமார் 20 அடி. உடலுடன் ஒப்பிட்டால் இதன் தலை சிறிதெனினும் அது நான்கடி நீளம் இருந்தது. பெரிய கத்திகள் போன்ற வளைவான பற்களைக்கொண்ட இதன் வாயின் தோற்றம் அச்சந் தருவதாகும். இப்பற்களும், வலிவான நகங்களைக் கொண்ட இதன் கால்களும் இதை இணையற்ற வேட்டை விலங்காக்கின. எக்காலத்திலும் புவியில் இத்தகைய ராட்சஸ மிருகம் வாழ்ந்ததில்லை என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

பயங்கரப் பல்லிகளில் இரண்டாம் வகையைச் சேர்ந்தவை பறவைகளை யொத்த இடுப்பை உடையவை. அநேகமாக இவை சாக பட்சணிகள். ஆகையால் இவற்றின் பற்கள் இலைகளை உண்ண ஏற்றவாறு மெலிந்தும் நீண்டும் இருந்தன. மாறு பல்லியினால் கொல்லப்பட்ட மிருகம் இவ்வகையைச் சேர்ந்ததே. இதற்கு இடி பல்லி (Brontosaur) எனப் பெயரிடப்பட்டுள்ளது. உலகில் வாழ்ந்த மிகப் பெரிய விலங்குகளில் இதுவும் ஒன்று. இதன் நீளம் சுமார் 70 அடி இதன் நிறை சுமார் நூறு டன் வரை இருந்திருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது? இதன் உறவினனை இணைத்தூண் (Diplodocus) என்ற விலங்கு இதைவிடப் பெரியது. இதன் நீளம் சுமார் 80 அடி. இதை விடப் பெரிய பூதப் பல்லி (Gigantisaur) என்ற விலங்கின் சடலமும் கிடைத்துள்ளது. இது 120 அடிக்குக் குறையாது வளர்ந்திருக்கவேண்டும். மிகச் சிறு தலையும், அதற்குள் அதைவிடச் சிறிய மூளையும் கொண்ட இந்த விலங்குகளின் மந்த புத்தியால் இவை மாமிச பட்சணிகளுக்கு எளிதில் இரையாயின.

வேறு வகை சாகபட்சணிகளின் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இருவாப் பல்லி (Iguanodon) என்பது தற்காலத்திலும் வாழும் பெரும் பல்லிகள் சிலவற்றின் தோற்றமுள்ளது. இது மிக வலிமையான விலங்கு. இது 30 அடி நீளம் வரை வளர்ந்தது. இது பின்னங்கால்களின் உதவியால் நிமிர்ந்து நடந்தது. வலிமை வாய்ந்த இதன் வால் இதற்குச் சிறந்த தற்காப்புச் சாதனமாகப் பயன்பட்டது. இதனால் அடிவாங்கிய மற்ற விலங்குகள் தப்புவது அரிது. கொடிய மாமிச பட்சணிகளுங்கூட இதனருகே வர அஞ்சி

இருக்கவேண்டும். இதன் வாலின் உதவியால் இது நீரில் நீந்தவும் முடிந்தது.



இகுவாப் பல்லி

இதுவரை விவரிக்கப்பட்ட விலங்குகள் தகுந்த தற்காப்புச் சாதனங்கள் இல்லாதவை. ஆனால் கூரைப்பல்லி (Stegosaur) என்ற ஒருவகை விலங்கு வாழ்ந்தது. இதை, 'நடக்கும் சண்டைக் கப்பல்' என அழைக்கின்றனர். சிறிய தலையையும், குட்டையான கால்களையும் கொண்ட இதன் முதுகின்மேல் வரிசை வரிசையாக அகலமான எலும்புத் தகடுகள் இருந்தன. வாலின் முனையில் இது இரண்டடி நீளமுள்ள நீண்ட தடிகளைப் பெற்றிருந்தது. தடிகளைக்கொண்ட இவ்வால் இவ்விலங்கிற்குக் கதாயுதம் போல் பயனாகியது.

இதைவிட விசித்திரமான அமைப்புக்கொண்ட பல பல்லிகளும் உலகிலே வாழ்ந்து மடிந்துவிட்டன. உருவம் எவ்வளவு மாறுபட்டாலும் இவை அனைத்திற்கும் ஒரு விஷயத்தில் மட்டும் ஒற்றுமை இருந்தது. பிரம்மாண்டமான உடலை இவற்றிற்கு அளித்த பிரமதேவன் மூளையைக் கொடுப்பதில் மட்டும் சிக்கனம் பார்த்துவிட்டான் போலும்! பல டன் நிறை இருந்த பயங்கரப் பல்லியின் மூளை மனிதனது மூளையைவிடச் சிறிது! ஒரு காலத்தில் உலகெங்கும் திரிந்த இந்த உயிரினத்தின் அழிவிற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இவற்றின் பெரிய அளவும் சிறிய அறிவும் இவற்றை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதியற்றவையாக்கிவிட்டன.

பாம்புகளையும் பல்லிகளையும்போல் இவை குளிர்ந்த ரத்தப் பிராணிகள். உச்ச நிலையை எய்தியிருந்த காலத்தில் இவை அடியோடு அழிந்துபட இதுவே முக்கிய காரணமாக வாய்த்தது. ஏனெனில் அக்காலத்தில் புவியின் வானிலையில் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்தன. வெப்பப் பிரதேசங்களாக இருந்தவை குளிர் நாடுகள் ஆயின. கடல் மட்டத்திலிருந்த பகுதிகள் உயர்ந்து மலைகள் ஆயின. இந்த மாற்றங்களுக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொள்ள இயலாத இப்பூத விலங்குகள் அழிந்துபோயின.



நடக்கும் சண்டைக் கப்பல்

ஆனால் இப்பயங்கரப் பல்லிகளே தற்காலத்திய பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் மூதாதையர் என்பது வியக்கத் தக்கதோர் உண்மை. புவியில் வாழ்ந்த பல்லிகளின் எண்ணிக்கை பெருகவே இவற்றுள் சில வகைகள் நீரையும், வானையும் தம் வாழ்விடமாகக் கொண்டன. காலப்போக்கில் இவை பறவைகளாகவும், மீன்களாகவும் பரிணமித்தன. இவை இதே பரிணாமப் பாதையில் முன்னேறி மனிதனையும் தோற்றுவித்தன. சிருஷ்டி என்னும் ஆராய்ச்சிச் சாலையில் இயற்கையன்னை செய்யும் சோதனைகளுக்குக் கணக்கே இல்லை.

உல்லாசப் பிச்சை

ஸ்ரீ

பிச்சை ஏற்கச் செல்லுவோம்,
பிரிய மான கண்மணி!
'பிச்சை அம்மா! பிச்சை!' என்று
பிச்சை கேட்போம் வீதியில்!

வாழும் வாழ்க்கை நூறு கோடி
வையகத்தில் உண்டு. நாம்
வாழும் பிச்சை வாழ்க்கை போல
வசதியான தேது சொல்?

பிச்சை ஏற்கச் செல்லுவோம்
பிரிய மான கண்மணி!
'பிச்சை ஐயா, பிச்சை!' என்று
பிச்சை கேட்போம் வீதியில்!

இச்சையாயின் பிச்சை ஏற்போம்,
இல்லை யேல் துயிலுவோம்!
பிச்சைவாழ்வு போல வேறு
பிரபுவின் வாழ்வும் ஆகுமோ?

பிச்சை ஏற்கச் செல்லுவோம்,
பிரிய மான கண்மணி!
'பிச்சை அம்மா, பிச்சை ஐயா!
பிச்சை போடு தட்டிலே!'

மண் தரை, மணல் வெளி,
மலைக்குகை – நம் மாளிகை!
வண்ண மீன்கள் கோடி சூழ்ந்த
வானமே நம் கூரையாம்!

பிச்சை ஏற்கச் செல்லுவோம்,
பிரிய மான கண்மணி!
பிச்சை கேட்டுப் பிச்சைகேட்டுப்
பிச்சை வாழ்க்கை வாழுவோம்!

எம் உடைமை என்று கூற
எதுவு மில்லை, ஆதலால்
எம் முடைய எதிரி என்றே
எவரு மில்லை உலகிலே!

பிச்சை ஏற்கச் செல்லுவோம்,
பிரியமான கண்மணி!
பிச்சை அம்மா, பிச்சை! என்று
பிச்சை கேட்போம் வாசலில்!

பன்ன லங்கள் கொண்ட இந்தப்
பழைய வாழ்க்கை அன்றி, ஓர்
மன்ன னுகை வாழ எந்த
மடையன் ஆசை கொள்ளு வான்?

பிச்சை ஏற்கச் செல்லுவோம்,
பிரியமான கண்மணி!
'பிச்சை அம்மா, பிச்சை, ஐயா!
பிச்சை போடு தட்டிலே!'

துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 186-50 TM

சங்கீத ரஸிகர்கள்!

R.P. மல்லாரி

(ராஜு: மிகச் சிறந்த வயலின் வித்வான்-சபைக் கச்சேரிக்கு வரும் பலரும், வெறும் பகட்டுக்காக வருபவர்கள் என்று தீர்மானமாக நம்பி, கச்சேரிகளை வெறுப்பவன். ஆத்மார்த்தமாக அவன் சங்கீதத்தை ரஸிக்க ஒரு ரஸிகன் இருந்தால் போதும்!

ராமு: அவன் நண்பன்; ராஜுவின் உண்மையான திறமையை அறிந்து, எப்படியும் சபைக் கச்சேரிகள் மூலம் அவன் பெயரைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்று விரும்புபவன்.

மங்களம்: ராஜுவின் மனைவி. தன் கணவன் புகழ் ஓங்க வேண்டுமென்று விரும்புபவள்.

லக்ஷ்மி: ராஜுவின் தங்கை. தன் சகோதரன் பிரசித்தி பெற்ற சங்கீதக்காரர்களில் ஒருவனாகத் திகழ வேண்டுமென்று தினம் கனவு காண்பவள்.

மற்றும் பத்திரிகை ஆட்கள், "ரஸிகாள், "சபைக் காரியதரிசி, அவர் நண்பன் முதலானோர்)

காட்சி—1

[வயலினில், தன்னையும் மறந்து ராஜு மிகவும் அற்புதமான ஆலாபனை செய்கிறான், அவன் சகோதரி லக்ஷ்மி வந்து நின்றதும் தெரியவில்லை.]

லக்ஷ்மி; அண்ணா! அண்ணா!

[மீண்டும் வயலின் – ஆனந்த பைரவி]

லக்ஷி: அண்ணா! நான் வந்திருக்கேன்.

ராஜு: [தூங்கி விழித்தது போல] என்ன லக்ஷ்மி! நீ வந்திருக்கிறாயா? என் தங்கைதானே! .... சரி......... [வயலின் வாசிக்கிறான்.]

மங்களம்: ம்......எப்பொ பார்த்தாலும் ஓயாத உழைப்பு......... அசுர சாதகம்.

லக்ஷ்மீ: ம்......... யாருக்குப் பிரயோஜனம்? கானிலே காய்ந்த நிலவு...... இந்தச் சின்ன கிராமத்திலே இவ்வள உயர்ந்த முறையிலே வாசிக்கக்கூடிய என் அண்ணா இருக்குதுன்னு உலகத்துலே யாருக்குத் தெரியும்?

மங்க: நானும் என்னாலே முடிஞ்ச வரைக்கும் எவ்வளவோ சொல்லிப் பாத்துட்டேன். அவருக்குப் புகழ் வேண்டாம். தம் ஆத்ம திருப்திக்காக வாசிக்கிறாராம்.

[ராஜுவைத் தேடி அவன் நண்பன் ராமு வருகிறான்.]

ராமு: ராஜு! ராஜு!

லக்ஷ்மீ: இதோ ராமு மாமாவும் வந்தாச்சே!

ராமு: (உள்ளே வந்து) ம்...... கலைஞனுக்கு இருக்கிற அலக்ஷிய பாவம் அவன் விருத்திக்கே தடையா இருக்குதே......

ராஜு. [வயலின் சட்டென்று நிறுத்தி] என்ன ராமு! நீயும் அர்த்தமில்லாமே பேச ஆரம்பிச்சுட்டியா?

ராமு; (கண்டிப்பாக) இதோ பார் ராஜு! நான் உன்னை இனி சும்மா இருக்க விடப் போறதில்லே.

ராஜு: நீ பேசறதைப் பாத்தா எனக்கு உன் மேலே இரக்கந்தான் உண்டாறது.

லக்ஷ்மி: அண்ணா! கொடியிலே மலருங்க குலுங்குமதாலே தானே — அது தன் ஜன்மப் பயனை அடையுது?

ராஜு: வாஸ்தவம். ஆனா மலர்ற புஷ்பங்களை புழுங்க அரிச்சுடுதே, அதைவிட அதுக உண்டாகாமலே இருப்பதிலே என்ன? பெசகு?

ராமு: நீ எது வேணுமானாலும் சொல்லு. அடுத்த சபைக் கச்சேரிலே நீ வாசிக்கத்தான் வேணும்.

ராஜு: சபைலே என் கச்சேரியா? (சிரிக்கிறான்) வாழ்க்கை யோசிக்கிறவனுக்கு இன்ப நாடகமா இருக்கலாம் .... உணர்றவனுக்குத் துன்ப நாடகந்தான்,

ராமு: ராஜு! இதையெல்லாம் கேட்டுக்கிட்டு, இனியும் நான் சும்மா இருக்கப் போறதில்லே. நீ பொதுக் கச்சேரிலே வாசிக்கத்தான் வேணும். உன்னோட இந்த அபாரத் தெறமை வெளியுலகத்திலே தெரியத்தான் வேணும்.

ராஜு: ஆனா ராமு, தெரியாதுன்னு உணர்றது தான் அறிவு அடையப் பெரிய வழி. நீ சரியா உணரலே. அறிவை விலைக்கு வாங்க முடியும் .... கலாரசனை, அந்த மங்கிய உணர்ச்சி, அந்தத் துல்லிய அன்பு, ஒரு நாளும் சந்தைக்கு வர்றதில்லே.

லக்ஷ்மி: அப்படியானா, சங்கித ரசனையுள்ளவர்களே இல்லைங்குறியா அண்ணா?

ராஜு: கச்சேரிக்கு வர்றவங்கள்ளே ரொம்ப பேர் அப்படியில்லைனு தான் சொல்றேன்,

லக்ஷ்மி: இருக்கட்டுமே; ஆனா, ரோஜா மலர் முள்ளில்லாமே மலர முடியுமா?

ராஜு: அதுக்கு? ம்......நீ சொல்றதும் நிஜம். நரகத்துக்குள்ளே வழி எளிது......... கண்களை மூடிக்கிட்டே போகணும்.

ராமு: (கண்டித்து) ராஜு!

ராஜு: (சிரித்து) என்ன ராமு?

ராமு: நீ விகாரமான முசுக்கட்டைப் பூச்சியல்ல. பட்டு இழைகளைக் கொடுக்குற பட்டுப் பூச்சி. என் நண்பனை நான் எப்பவும் இப்படியே அந்தகாரத்துலே வச்சிருக்க முடியாது.

ராஜு: ஒளிலே இருக்குறப்போ உண்டாகுற நிழல் தான் வாழ்விலேயே அதிக இருள் உள்ளதா இருக்குது.

ராமு: இல்லை, முடியாது. நீ ஒரு இணையில்லாத கலைஞன், கலா சேவகன். உன் திறமை உலகத்துக்குத் தெரியணும். உன் உண்மையான வாசிப்பிலே ஜனங்க மயங்கித் திளைக்கணும். உன்னோட நாத வெள்ளத்திலே எல்லாரும் தங்கள் கவலையை மறக்கணும்.

லக்ஷ்மி: நதியோட முகத்துவாரத்துலே அணை கட்டி அதை சமுத்திரத்திலேருந்து பிரிச்சு வைக்க யாராலும் முடியாது.

ராஜு: ராமு! லக்ஷ்மி! பதட்டப்படாதிங்க. பாவம் செய்றவன் மனுசன்...... பாவத்துக்காவ வருத்தப்படுறவன் ஞானி. பாவத்துக்காவப் பெருமை கொள்றவன் சைத்தான். இதுலே நான் யாரா இருக்கணும் சொல்லுங்க?

லக்ஷ்மி: ஜனங்களோட ஆத்ம த்ருப்திக்காக ஆண்டவன் உனக்குக் கொடுத்திருக்கும் இந்த அற்புதமான வாசிப்பை நீ ஒளிச்சு வச்சிருக்கிறது பாவமில்லியா? அதெ பெருமையா எடுத்துச் சொல்லுறியே, நீ சைத்தானா?

ராஜு: (சிரித்து) நான் சைத்தான் தான். அதான் சொல்றேன். கலாகூடம் ஒரு தேவாலயம்......... நாட்டிய அரங்கமல்ல.

ராமு: நீ என்ன வேணுமானாலும் சொல்லு. உனக்கு கச்சேரிக்கு நான் ஏற்பாடு செஞ்சுட்டு உன்னை வந்து பார்க்குறேன்.

ராஜு: ஹூம்......... உண்மை கசப்பாத்தான் இருக்கும். போலி சௌந்தர்யம். போக்கிரித்தனத்தையும், பாசாங்கையும் அனுசரிக்கிற வரைக்கும்; சத்தியம் கசப்பாத் தான் இருக்கும்.

[வயலினில் மற்றொரு இசை வாசிக்கிறான்— சாமா ராகம்]

ராமு: ராஜு! நான் உணர்ச்சி மிகுதியாலே ஆங்காரமாப் பேசினதுக்கு மன்னிச்சிடு. கண்டிக்க அறியாதவன் கருணை காட்ட முடியாது,

ராஜு: கோபமா? (சிரித்து) உன் அறியாமைக்குத் தான் பரிதாபப்படுகிறேன், இமயமலை உச்சியிலே உள்ள பனிக்கட்டிக்கு, உச்சி மேலே இருக்குற வரைக்குந் தான், தன் அழகைப் பத்தி கர்வம். அது கரஞ்சா கடல்லே விழ வேண்டிய நீர் தானே?

லக்ஷ்மி: தாழ்ந்த லக்ஷியத்திலே ஜயம் அடையறதை விட, உயர்ந்த லக்ஷியத்துலே தோல்வி அடைறது சிலாக்கியமல்லவா?

ராஜு: லக்ஷ்மீ! இதை மாத்திரம் இன்னொரு தடவை சொல்லாதே. என் லக்ஷியமா தாழ்ந்தது?

லக்ஷ்மி: நான் அப்படிச் சொல்லலை அண்ணா. ரொம்பவும் தன்னலமுள்ளதுன்னு சொல்றேன். பகிர்ந்து கொடுக்கவே நீ விரும்பலியே!

ராமு: ராஜு! எனக்கு நேரமாச்சு. இன்னும் ரெண்டு நாளிலே நல்ல சபைக் கச்சேரியோட வருவேன். (சொல்லிக்கொண்டே போதல்)

ராஜு: சபையில் இசை......ஹூம்......தனிமை யோட இனிமையிலே கட்டில்லாம ஜனிக்கிற சங்கீதம் எங்கே? சபையோட ஆரவாரத்திலே பலவந்தமாய் பிழியப்படுற சரக்கு எங்கே? ஐயோ!...... ஆண்டவனே...... இந்த உயர்ந்த லக்ஷியம்—இசையோட மகிமை, அடியோடு வியாபாரமாவா மாறி வருது?

[எல்லோரும் ராஜுவைக் கோபமாகப் பார்க்கிருர்கள்]

காட்சி—2

மங்க: இண்ணக்கி நீங்க சபைலே வாசிக்கணு மில்லியா?

ராஜு: ஓஹோ!......... இருக்கலாம்.

மங்க: நீங்க அசிரத்தையா இருக்கிங்களே? அவுங்க எவ்வளவு விளம்பரப்படுத்தி யிருக்காங்க?

ராஜு: அப்படியா?

மங்க: உங்களுக்கு ஒரு பெரிய தொகையும் சன்மானமாகக் கொடுக்க ஏற்பாடாகி இருக்குது போல இருக்குது.

ராஜு: நான் சன்மானம் கேக்கலியே.

மங்க: இப்படியே இருந்தா என்ன ஆறது? நம்மோட வாழ்க்கைக்கு அத்யாவசியமா வேண்டிய பொருள்கூட நம்மகிட்டே இல்லேங்குறதை நீங்க அறியாமே.........

ராஜு: பைத்தியமே......... அறிவோட முதல் பாடம் என்ன தெரியுமா? ஐசுவரியத்தை வெறுப்பது.

மங்க: இதை மறைக்கிறீங்களே......அன்போட முதல் பாடம் ஐசுவரியத்தை அனைவருக்கும் கொடுப்பது இல்லியா.

ராஜு: மங்களம்! உன் அறிவு லக்ஷ்மி அறிவு போல மழுங்கி வருதா? அழகான மலர்களை விட அழகான பொருள் உலகத்திலே உண்டா?

[லக்ஷ்மி வருகிருள்]

லக்ஷ்மி: (வந்து கொண்டே) ஏன்? பழம்.

ராஜு: லக்ஷ்மியா?

லக்ஷ்மி: ஆமாம் அண்ணு. வெறும் அழகுக்காக புஷ்பங்களை உபயோகிக்கலாமே தவிர ....

ராஜு: உன்னைச் சொல்லி என்ன பயன் லக்ஷ்மி?

மங்க: [கொஞ்சம் வெறுப்பாக] இல்லேன்னு உங்களிடம் சொல்லித்தான் என்ன பயன்?

லக்ஷ்மி: அண்ணுவுக்கு மகிழம்பூக்கள்ன்னு பிடிக்கும்.

ராஜு: மகிழம்பூக்கள் ஒரு நாளிலா உலர்ந்து போவுது? ஆனு, நீங்க அகங்காரத்தோட உபயோகிக்கிற ரோஜாப்பூவோட கதி என்ன வாகுது? கொஞ்ச நேரங்கழித்துப் பாத்தா சருகு – மண், அப்படி மகிழம்பூ உலர்ந்தே போகட்டுமே, அதோட நறுமணம் போகுதா?

மங்க: உங்களோட பேச எனக்கு வராது, மகிழம்பூவைப் பாத்தாலே எவ்வளவு அசுத்தமா இருக்குது?

ராஜு: அது அசுத்தமாத் தோற்றமளிக்குதுங் குறதாலே தான் அதை விரும்புகிறேன். தூய்மையைப் பத்தி நீங்க பேசுறதைப் பாக்க எனக்கு ஆத்திரமா வருது. தூய்மை! ...... எங்கிருக்குது? உலகத்துலே தூய்மை உண்டா? தெய்வீகம் பொருந்திய இசையிலே கூடமாக ஏற்பட்டுப் போச்சு.

ராமு: (வந்து கொண்டே) ராஜு! ராஜு! புறப்படுவோமா?

ராஜு: ம்...... இப்போ என் திறமையைச் சோதனை போட விரும்புறுங்களே, அந்த சபைக்காரங்க கிட்டே நீ தூய்மையை எதிர் பார்க்கிறியே... அவங்க மனசு நிஜ சங்கீதத்தை அனுபவிக்க புடம் செய்யப்பட்டிருக்கா? .... உன்னதமான சங்கீதத்தை அனுபவிக்கணும்னு அவுங்க வர்ருங்க? மன சாக்ஷியைத் தொட்டுச் சொல்லட்டும்.

ராமு; ராஜு! இண்ணக்கி கச்சேரிக்கு வர்ற வங்க எல்லாரும் சிறந்த கலாரசிகருங்க. உன் பொருட்டு, நான் எங்கெல்லாமோ அலஞ்சு வைரங்க, மாணிக்கங்க போல ரஸிகர்களைக் கொண்டு வந்திருக்கேன்.

ராஜு: வைரம், மாணிக்கம்...... ம்...... பசி வேளைக்கு இந்தக் கற்களிலே ஒன்றும் பிரயோஜனப்படப் போறதில்லே.

லக்ஷ்மி: அண்ணுவோட தர்க்கமோ, தத்துவமோ பேச இப்போ அவகாசமில்லே.

ராமு: சரி...... உம் சீக்கிரம் கிளம்பு. சாயந்திரமாய் போவுது.

ராஜு: அந்தி வேளைக்குப் பின்னுலே கன்னங்கரிய ராவு ஒளிஞ்சிருக்கிறதை நீ எண்ணிப் பாக்க மறந்துட்டே போலிருக்குது. ம்......

SCISSORS

1900 1925 1952

5½ அணாவுக்கு 10
உள்ளூர் வரி
சரிப்படுத்தலுக்
குட்பட்டது.



ஸி ஸ ர் ஸ்

சிகரெட்டுகள்

மூன்று தலைமுறைகளாக

பிரசித்தி பெற்றவை

இதோ உன்னிஷ்டம் போல வர்றேன். எனக்கென்னமோ ஒண்ணு நிச்சயம். அங்கே வர்றவங்கள்ளே, நிஜ சங்கீதத்தை அனுபவிக்க ஒருத்தர் இருந்தா, அது என்னோட அதிர்ஷ்டம்.

ராமு : என்ன ?......

ராஜு : தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக்கத் தானே சங்கீத கச்சேரிக்கு வர்றாங்க. படாடோபம் நிறைஞ்சு வர்றவங்க எத்தனை பேரோ ? நாளைக்கு ஒரு பெரிய மனுஷர் கேட்பார் – அதுக்கு ஒரு வேளை பதில் சொல்ல வேண்டியிருக்கும் — அதுக்காக சிலர். தன்னோட சங்கீத ஞானத்தை மத்த ஆசாமிங்க அறிய வேண்டாமா—அதுக்காவ ஒரு கோஷ்டி.

ராமு : ராஜு ! நீ அனாவசியமா, அர்த்தமில்லாத யோசனை செஞ்சு மனசைப் புண்படுத்திக்குறே.

ராஜு : இந்தா கிளம்பிட்டேன் ! தண்ணீரிலே வாழ ஒப்புத்துகிட்டு மீனோட விரோதம் செஞ்சுக்க முடியுமா ? (பெரு மூச்சு) ஹூம் .... மருந்து, பல சமயம் பலிக்காமலிருக்கலாம்...... ஆனாலும்...... (புறப்பட ஏற்பாடு செய்கிறான்)

காட்சி 3

[கும்பல் ஆரவாரம் குறைந்து கச்சேரி ஆரம்பமாகிறது.— ராஜு நன்றாக வயலின் வாசிக்கிறான்.]

ராமு : (மெதுவாக) மகா அற்புதம். ஜனங்க எவ்வள உற்சாகமா கச்சேரியை ரசிக்கிறாங்க பார். ம்... வாசி. இன்னும் நல்லா வாசி.

[கச்சேரி தொடர்கிறது — ராகமாலிகை]

குரல் 1 வாங்க...வாங்க... எங்கே காணவே காணும் சுகமா?

குரல் 2 அம்பீ......, சாருக்கு மொதல் ஸீட்லே எப்படியாவது கொஞ்சம் காலி செஞ்சு தர முடியுமா ?

குரல் 3 மன்னிக்கண்ணும். நெருப்புப்பெட்டி இருக்கு......... சிகரெட் பத்த வைக்க.

குரல் 1 ஆத்துலே நம்ம பெண் என்னமா பாடுந் தெரியுமா ?

பெண். 1 ஹூம்...... கிரகச்சாரம்...... என்ன செய்றது ? (தும்மல்)

குரல் 2 இந்தா கண்ணம்மா, இங்கே அழாதே.

குரல் 1 அந்த பிடில்காரர் அழற மாதிரி.

பெண் 1 ஒனச்சா ...... (விக்கல்)

குரல் 2 இதேதடா வம்பாய் போச்சு !

[ராகமாலிகையில் மோஹனம் வாசிக்கப்படுகிறது.

குரல் 1 மோஹன சுந்தரம் ஸார் ! எனக்கென்னமோ இந்தக் கச்சேரிலேயே ஒண்ணும் சரிப்படவில்லை. காபியை இப்படியா வாசிக்கிறது?

குரல் 2 குடிக்கிறதப் போல ஸ்பெஷல் டிக்ரியா இல்லை போலிருக்கு.

குரல் 3 இது காபியா ? ப்ரமர குஸுமம் இல்லே ? ஏதோ ஸிம்ஹேந்த்ர மத்யமம் ஜன்யமாமே.

[மோஹனம் முடிந்து செஞ்சுருட்டி முடிகிறது]

குரல் 2 செஞ்சுருட்டி வாசிக்கவே இல்லியே – அது ஒண்ணு அப்படியே நடக்கட்டுமே.

[ராஜு டக்கென்று நிறுத்துகிறான்.]

ராமு : (தாமதம்) ராஜு ! ராஜு ! என்ன இது ? ...... ஏன் ?

ராஜு : மன்னிக்கணும். இனி என்னாலே வாசிக்க முடியாது.

ராமு : ஏன் என்ன... தந்தி ஏதாவது அறுந்து போயிடுச்சா ?

ராஜு : இனி, இந்த ரசிகசிகாமணிகளுக்கு என்னாலே வாசிக்க முடியாது. இப்ப துண்டிச்சுப் போனது என்னோட நரம்புங்க தான்.

பெண் 1 என்ன வித்வான் எழுந்து போயிட்டாரே ?

குரல் 2 போயிட்டாரா நான் கவனிக்கவே இல்லை...... சரி கை தட்டுவோம்.

[கை தட்டல் – எல்லோரும் சேர்கிறார்கள்]

குரல் 1 ரொம்ப அபாரமா வாசிச்சார். ஆஹா! அற்புதம் !

குரல் 3 பாடின மாதிரி கூட இருந்துதுன்னு சொல்லலாம்.

குரல் 2 எல்லாம் அவர் வாத்திய மகிமை...... அதுலே எவ்வள தந்தி போட்டிருக்கு தெரியுமா ? 13 தந்தியாக்கும். 9 தந்தி இருக்குற இடமே தெரியாது.

குரல் 1 எவ்வள இருந்தா என்ன ? ஏ. ஒன்னு இருந்துச்சு. இந்த மனோ ரஞ்சித ராகம் ஒண்ணுக்கே காசு......

பெ. 1 வாங்க போகலாம்.

[கூட்டம் கலைகிறது.]

காட்சி—4

[ராஜு வயலினில் சுத்த சாவேரி கீர்த்தனை ஒன்று வாசித்துக் கொண்டிருக்கிறான்.]

ராமு: ராஜு!

ராஜு: ராமுவா? வா·

ராமு: உண்மையை உணர்ந்து கொள்ளாமே அவ்வள கோபமா ரஸிகர்களை மதிச்சு இருந்தியே. இப்பொ என்ன சொல்றே?

ராஜு; போதும். என்னைத் துரத்தின ரஸிகத் தன்மை தானே.

ராமு: ராஜு! உன்னை என்ன சொல்றதுன்னே தெரியலை. இதோ பார் பத்திரிகை விமர்சனங்களை.

[பத்திரிகையைப் படிக்கிறான்.]

இந்த நூற்றாண்டில் மிக உயர்ந்த வித்வான்....

ராஜு: ராமு! அதுகளெ நான் தெரிஞ்சுக்க விரும்பலெ.

[பத்திரிகையை ராமு தொடர்ந்து படிக்கிறான்.]

எதிர்பாராத மேதை. பிரமாதமான வாசிப்பு. அன்று. பூர்வி கல்யாணியை வாசிக்கும் போது ஸந்தியா தேவியின் பூரண ஜொலிப்பை நம் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். அந்த வசீகரத்தில் மெய் மறந்து நிற்கும் போது மற்றொரு பேரழகி காட்சியளிக்கிறாள். யார்? உஷா தேவியா? இல்லை ரேவகுப்தி ஆலாபனை செய்கிறாரா? இல்லை உஷை தான். பறவைகள் கல்லென்று ஒலித்துக் கிளம்பும் இனிய ஓசையை நாமறியாமலேயே கேட்கிறோம். காலைத் தூக்கம் மதுரக் கனவுகளோடு கலையும் விடியும் நிலைமையில் இருக்கிறோம்.

ராமு: என்ன ராஜு! காதுகளை மூடிக்கிட்டே?

ராஜு: ராமு! எனக்கு இதெல்லாம் வேண்டாம்.

ராமு: இதோ பார்! எவ்வள புகழுரைங்க பாராட்டுங்க.

ராஜு: ம்... இந்தக் கூட்டத்துலே ஏதோ ஒரு ரஸிகரிருக்கலாம். மத்தவர், பின்னே ஓடி அர்த்தமில்லாமே தாவிக் குதிக்கிற செம்மறியடுங்க தான்.

ராமு: உன்னை வாயாறத்திட்டாமே விட்டாங்களே, அவங்க நிஜமான மடையங்க தான்.



ராஜு : ம்... இவங்களோட இந்த விமர்சனத்துக்கும், சமுத்திரக் கரையிலுள்ள சிப்பி சோழிகளுக்கும் என்ன வித்தியாசம்? எவ்வள வேணுமானாலும் கிடைக்கும், குவிச்சு தள்ளலாம். பார்வைக்கு ரம்யமாவும் காட்சி அளிக்கும். ஆனா அவைகளோட மதிப்பு — செல்லாக் காசுக்குப் போகுமா?

[ராஜு கிண்டலாகச் சிரிக்க, ராமுவின் முகத்தில் எல்லையற்ற கோபம்,]

காட்சி—5

மங்க : உங்களைக் காண இந்தப் பத்திரிகைக்காரங்க எவ்வள நாளா அலையுருங்க.

ராஜு : என்னைப் பேட்டி காண இவங்களை யார் அலையச் சொன்னது?

லக்ஷ்மி ; நீ செய்றது, உனக்கே நல்லா இருந்தா சரி அண்ணா. ஏதோ ஒரு சபைக் கச்சேரிக்குப் போனே. அதுவும் ராமு மாமா தொந்தரவைப் பொறுக்க முடியாமே. முடிஞ்சுதோ இல்லியோ பறந்து வந்துட்டே.

மங்க : இவ்வள அருமையா வாசிக்குற சிறந்த வித்வானைப் பத்தித் தெரிஞ்சுக்க ரஸிகங்களுக்கு ஆர்வமிருக்காதா?

ராஜு : இந்த ரசிகர்களைக் கண்டே எனக்கு அஜீரணமாயிடுச்சு,

லக்ஷ்மி : அண்ணா! போதும். நான் எல்லாரையும் உள்ளே அழைச்சுட்டு வந்துட்டேன். இதோ பின்னாலே வர்ருங்க. நீ அவுங்களோட பேசியே ஆகணும்,

ராஜு ; ம்... என்னிஷ்டப்படி என்ன நடந்து வருது?

(தாமதம்)

பத்திரிகை ஆட்கள் 1, 2, 3 (உற்சாகமாக) நமஸ்காரம்.

ராஜு : நமஸ்காரம்.

பத்ரி 1. ; உங்களை பேட்டி காண இண்ணைக்கி சந்தர்ப்பம் கிடச்சுதே, நாங்க செஞ்ச பாக்கியம்.

பத்ரி. 2 : உங்களைப் போலுள்ள ஒரு சிறந்த வித்வானோடே பேச எங்களுக்கு நேர்ந்ததிலே எங்களோட மனசு எவ்வளவு பூரிக்கிறது தெரியுமா?

பத்ரி. 3 வேட்கை கொண்ட மரங்களுக்கு மேகத்திலேருந்து அவசியம் வேண்டிய தண்ணீர் கிடைக்கும்னு எங்களுக்கு நம்பிக்கை இருந்தது.

ராஜு : அங்கேருந்து தான் அந்த மரம் மேலே இடியும் விழுங்குறதை மறந்து விட்டீங்க.

2, 3: என்ன?

ராஜு : ம்... நீங்க எதுக்காக இங்கு வந்திருக்கீங்கன்னு தயவு செஞ்சு சொல்ல முடியுமா?

3. சங்கீதக் கச்சேரியைப் பத்தித் தங்கள் அபிப்பிராயங்களை......

2. பொது மக்களோட சங்கித ரசனையே சமீபத்திலே ரொம்ப ஒசந்துவிட்டதுங்குறது எங்களபிப்பிராயம்.

1. எல்லாம் தங்களால்தான்னும் சந்தேகமில்லை.

ராஜு : அவுங்கள்ளே ரொம்ப பேருக்கு உண்மையான சங்கீதத்தை அனுபவிச்சு ரஸிக்கும் ஞானம் கிடையாதுன்னு எனக்குத் தெரியும். என்னோடே ஆற்றலைத் தெரிஞ்சு நீங்க என்னை மதிக்கலை. எனக்கு எப்படியோ பெயர் கிடச்சுப் போச்சு. எல்லாரும் புகழ்ந்து பேசுருங்க. நீங்களும் கும்பல்லே சேரப் பாக்கிறீங்க.

2. இது பொய். இதை நாங்க கட்டாயம் எதிர்க்கிறோம்,

3. ஒரு பெரிய கலாசேவகனிடத்திலிருந்து இப்படிப்பட்ட முரட்டுப் பேச்சுக்களை நாங்க எதிர்பார்க்கவே இல்லை.

1. நான் இத்தோட விடத்தயாரா இல்லை. நாங்க ரசிகத் 'தன்மையில்லாத கசடர்னு சொன்ன உங்களோட அர்த்தமற்ற பேச்சை ரூபித்துக் காட்டணும்.

ராஜு . நான் அவசியம் செய்வேன். இன்னும் சில நாளிலே உங்களேயே நான் நேரா வந்து பார்க்குறேன். அப்போ தெளிவா உணர்வீங்க ரஸிகத்தன்மையைவிட காலத்தோட ஒத்துப் போற இயற்கை-கடமை உங்கள்ளே அவ்வள இருக்குதுன்னு.

3. (முணுமுணுத்தவாறு) எவ்வள சிறந்தவனா என்ன ?

2. (முணுமுணுத்தவாறு) மரியாதை கெட்ட மனுஷன்.

1. (உரக்க) நாங்கள் வரோம். உங்களோட வார்த்தையை ஞாபகத்திலே வச்சு மறக்காமே ரூபித்து மறு காரியம் பாக்கணும்.

ராஜு : எந்தப் பொய்யும் தன் வாழ்நாள் முழுதும் வாழ்ந்ததில்லே.

[பத்திரிகை ஆட்கள் கோபமாகப் போகிறார்கள்.]

காட்சி—6

[ராஜு தனியே பிச்சைக்காரன் போல் மறுவேடமணிந்து, மரத்தடியில் உட்கார்ந்து வாசிக்கிறான். ஒருவரும் திரும்பிப் பார்க்கவில்லை.]

ராஜு, ராமு! இந்தப் பொது இடத்திலே இதுவரை எவ்வள நேரம் வாசிச்சிருப்பேன். எத்தனை பேர் ஒரு நிமிஷமாவது கிட்ட வந்து கேட்டாங்க, [சிரித்து] எவ்வள காலணாங்க கிடச்சிருக்குது பாரு.

ராமு : [வருத்தத்துடன்] 10, 12 செப்புக்காசுங்க.

ராஜு : பெருந்தொகைங்க கொடுத்துமுன்னிடத்திலே உக்கார்ந்து சங்கீதம் கேக்குற சங்கீதரஸிகருங்க இப்பொ எங்கே பொயிட்டாங்க?

ராமு ' ராஜு ! என்னை மன்னிச்சிடு. உன் மேதை தெரியாமே......

ராஜு : மனுசன்னாலே இப்படித்தானே! பறவையோட துடிதுடிப்பை கண்டப்புறந்தானே அதை கல்லாலே அடிச்சுட்டோம்னு பச்சாதாபம் ஏற்படுது.

[இன்னும் நன்றாக வாசிக்கிறான். சபை செகரடரியும் நண்பரும் போகிறார்கள்.]

நண்பன் ; அப்பா...... பாத்தா பிச்சைக்காரன் போலிருக்குதே ...... சங்கிதம் தெரிஞ்சவங்க கிட்ட சாதகம் செஞ்சா, நீ கூடிய சீக்கிரம் முன்னுக்கு வரலாம்.

செக்ரட்ரி : பிச்சைக்காரங்கிட்ட திறமையைக் கண்டுட்டான். ம்... சீக்கிரம் வா. கச்சேரிக்குப் போக வேண்டாமா ?

ராஜு : (தாமதம்) ம்...ராமு... இப்போ பாத்து கிட்டியா உண்மையை. என்சபைக் கச்சேரிக்காக டிக்கட் வாங்க க்யூ முண்டியடித்துச் சண்டை போடும் இந்த ரஸிகருங்க நான் ஏழ்மையாக் காட்சியளிக்குறப்போ சாதகம் செய்யச் சொல்றாங்க. இவர் தான் சபை செக்ரடரி! சபையின் இசைக்கு மதிப்பு...... ஏழையோட வாசிப்புக்கு சாதகம். விளக்கு எங்கே? சூரியன் எங்கே ?

[மேல் ஸ்தாயி வரையில் வாசித்து நிற்கிறது. ஒருவரும் திரும்பியே பார்க்கவில்லை.]



19933





நீங்கள் எங்கிருந்தாலும்...

ஹிமாலயா புக்கெ ஸ்னோ

உபயோகியுங்கள்.

ஏனென்றால் இது பிரத்தியேகமாக இந்தியாவின்
சீதோஷ்ணத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டது

சீதோஷ்ண நிலை எப்படி இருந்தாலும்—இந்தியாவில் நீங்கள் எங்கிருந்தாலும், ஹிமாலயா புக்கெ ஸ்னோ உங்கள் சருமத்தை அதிக மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்கிறது. இதன் நறுமணத்தை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்.

இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு

HBS. 7-X30 TM   இராஸ்மிக் கம். லிட். லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.

லக்ஷ்மி

- கிருஷ்ணன் பாலா -

"லக்ஷ்மீ! லோகமாதா, அன்னபூர்ணேச்வரீம்' என்று லக்ஷ்மி ஸ்தோத்திரம் படித்துக் கொண்டிருந்தார் மகாதேவய்யர். மழை பெய்து கொண்டிருந்தது. தினமும் கண்சிமிட்டும் தாரகைகள் எங்குப் போய் ஒளிந்துகொண்டனவோ! இடியின் உறுமல் இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்தது, ஊர் அடங்கிவிட்டது. இருளைவிடக் கரியதொரு அந்தகாரம் சூழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில், மாயனூர் அக்கிரகாரம் ஐந்தாம் நம்பர் வீட்டில் மட்டும் மங்கலாக வெளிச்சம் தெரிந்தது. வீட்டின் சொந்தக்காரர் மகாதேவய்யர் புகை ஏறிய லாந்தர் விளக்கு வெளிச்சத்தில் ஸ்தோத்திரம் வாசிக்கிறார். வீட்டில் இருந்த மற்றொரு விளக்கு அடுத்த அறையில் இருந்தது. மகாதேவய்யரின் தாயார் கிழவி; குளிரில் நடுக்கிக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். ஐயரின் ஐந்து பெண் பிரஜைகளும் மூலைக்கொருவராக ஒடுங்கித் தூங்கிக்கொண்டிருந்தனர்.

ஏன் இப்படி இந்த நேரத்தில் இவர்கள் விழித்துக்கொண்டிருக்கிறார்கள்? ஒன்றுமில்லை. மகாதேவய்யரின் தர்மபத்தினி, மற்றொரு குழந்தைக்குத் தாயாகப்போகிறாள்; நோவு கண்டுவிட்டது. மருத்துவச்சியைக் கூப்பிடப் பணம் இல்லை. ஐயர் மனமிடிந்து உட்கார்ந்திருந்தார். தம்மால் அவளுக்கு ஒரு சுகமும் இல்லாவிட்டாலும் உபத்திரவம் இல்லாமல் இருக்கக்கூடாதா? லக்ஷ்மி தேவி! உன் கடாட்சம் என்மீது சிறிதாவது இருந்தால், உன்னைப்போன்ற ஒரு பெண் வலியால் துடித்துக்கொண்டிருக்கும்போது சும்மா இருப்பாயா?... இந்த லட்சணத்தில் மழை வேறு கொட்டுகிறது. இந்தப் புண்ணிய வேளையில் எந்த உயிர் பிறக்கப் போகிறதோ? அல்லது...... அல்லது...... ஐயரால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை.

"ஆவீன மழை பொழிய, இல்லம் வீழ,
அகமுடையாள் மெய்நோக, அடிமை சாக,
மாஈரம் போகுதென்று விதை கொண்டோட,
வழியிலே கடன்காரர் மறித்துக்கொள்ளக்,

கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்,
குருக்கள் வந்து தக்ஷிணைக்குக் குறுக்கே நிற்கப்,
பாவாணர் கவிபாடிப் பரிசு கேட்கப்,
பாவிமகன் படுந்துயரம் பகரொணாதே''

என்ற பழைய பாட்டு அவர் நினைவுக்கு வந்தது... கண்களைத் துடைத்துக்கொண்டு மீண்டும் சொல்லலானார்; ''மாதா அன்னபூர்ணேச்வரீம்! லக்ஷ்மீ! லக்ஷ்மீ! லக்ஷ்மீ!!''

* * *

அண்ட பகிரண்டங்களுக்கும் அப்பால் காலத்தின் முகட்டில், ஸ்ரீ தேவி இருந்தாள். வருத்தத்தால் அவள் முகம் வாடியிருந்தது. காக்கும் கடவுளுக்கு இதன் காரணம் புரியவில்லை. "தேவா! உலகைக் காப்பதுதானே உம் வேலை? அப்படியிருக்க, எத்தனை பேர்கள் நலிந்து வாடுகிறார்கள்! இது நியாயமா?''

நாராயணன் சிரித்தார்: ''லக்ஷ்மி! உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். அனுபவம் இல்லை உனக்கு... உம்... நீதான் யாருக்காவது உதவி செய்து பாரேன்... மனித வர்க்கத்துக்கே தன்னிடம் உள்ள தனத்தை அறிந்து அனுபவிக்கத் தெரியாது.''

திடீரென்று ஒரு அபயக் குரல் ஒலித்தது மாதாவின் செவிகளில்.

''உன் கடாட்சம் சிறிது இருந்தால், உன்னைப் போன்ற பெண் வலியால் துடிக்கும்போது சும்மா இருப்பாயா?''

சட்டென்று எழுந்தாள் தேவி. கூர்ந்து எதையோ பார்த்தாள். அவள் நோக்கிலிருந்து ஒரு ஆச்சரியமான ஒளி, கண்ணைப் பறிக்கும் எழிலுடன் பாய்ந்து சென்றது.

அதே சமயம் மாயனூர் ஐந்தாம் நெம்பர் வீட்டின் மேல் ஒரு அசாதாரணமான ஒளி தோன்றியது. ''அப்பப்பா! என்ன மின்னல்!'' என்றார் அய்யர். அவர் மனைவி ஒன்றும் அறியாமல் மயங்கிக் கிடந்தாள். ஒளிக்கதிர் அவள் உடலில் பாய்ந்தது. வயிற்றினுள் சிசு உலகைக் காண வேதனைப்பட்டுக்கொண்டிருந்தது. ''குழந்தாய் உன் இடத்தில் நான் இருக்கிறேன்...'' குழந்தை புரண்டது, அம்மா என்று அலறினாள் தாய். ''நீ திரும்பு... நான் வந்துவிட்டேன்... போ... போ!...'' தாயின் உடல் துடிதுடித்தது; வேதனையால் துவண்டது; தூக்கிப் போட்டது; கத்தவும் முடியாமல் சீவனற்றுக் கிடந்தாள் அவள். ஐயரின் தாயார் உள்ளே ஓடினாள். ஐயரின் மூச்சுத் துடிப்பு நின்றுவிடும்போல் இருந்தது. சிறிது நேரம் நெஞ்சைப் பிழியும் நிசப்தம். கிழவி ஓடி வந்தாள். பெண்! ''அவளுக்கு...'' என்று இழுத்தார் ஐயர். ''அதெல்லாம் ஒன்றுமில்லை...ஆனால் இதுவும் பெண்! ஆறு பெண்கள்'' என்றாள் கிழவி.

''சே! என்ன இது! இவளைக் கட்டிக்கொண்டு இததான் கண்ட பலன். வருஷம் தவறாமல் ஒரு பெண்...'' ஐயரின் மனம் இப்படி எண்ணலாயிற்று. சற்று நேரத்துக்கு முன் வரை இருந்த கவலை, இரக்கம் எல்லாம் பறந்துவிட்டன. லக்ஷ்மி ஸ்தோத்திரத்தை மடக்கி வீசி எறிந்தார். ஆனால் கிழவி மட்டும் முணுமுணுத்துக் கொண்டே இருந்தாள்...... லக்ஷ்மீ! லக்ஷ்மீ!! லக்ஷ்மீ!!!

* * *

குழந்தை கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் இருந்தது. குழந்தையின் தாயார்கூட இந்த அபூர்வ அழகைக்கண்டு அதிசயிக்கவில்லை. ஏழைக் கணக்கப்பிள்ளை வீட்டில் ஆரும் பெண்ணைப் பிறந்தால் அழகையா கவனிப்பார்கள்! ஐயர் யாருக்கும் சர்க்கரை வழங்கவில்லை. யாரையும் கூப்பிட்டுக் குழந்தையைக் காட்டவில்லை. அதன் தாயார்கூட அதற்குப் பாலூட்டுவதுடன் சரி. குழந்தை எல்லாரையும் பார்த்துச் சிரித்தது. குழந்தை — அப்போதுதான் பிறந்த குழந்தை—குலுங்கக் குலுங்க, பொக்கை வாயைக் காட்டிக்கொண்டு சிரித்தது. அழவே இல்லை. கிழவி சொன்னாள்: ''ஏதடி அதிசயம், பிறந்த குழந்தை அழாதோ? ஆறும் பெண்ணாய்ப் பிறந்துவிட்டு இது இளிக்கிறது. மற்றவர்களை அழவைக்கும்.'' தாய் பதில் சொல்லவில்லை. அவளுக்கும்தான் இது ஒரு பாரம்... மனச்சலிப்புடன் ஒருநாள் சொன்னாள்: "என்ன சிரிப்பு திடீர் திடீர் என்று? எந்தக் குடியைக் கெடுக்கவோ தெரியவில்லை...''

குழந்தையின் அப்பா மறுபடி ஸ்தோத்திரம் படிக்கலானார். தினம் இரண்டுதரம் படிப்பார். ''லக்ஷ்மீ! லோகமாதா...... அன்னபூர்ணேச்வரீம்!......''

இதே சமயத்தில், பண்ணை சுந்தரேசய்யர் வீட்டில் ஒரு சம்பவம் நடந்துகொண்டிருந்தது. அவரது மகன்—ஆறுமாதக் குழந்தை—இறந்துவிட்டான். பெற்றோர்கள் கல்லாய்ச் சமைந்து போனார்கள். ஐந்தாவது முறை இப்படி...... குழந்தை பிறக்கும்; தங்கச் சிலை மாதிரி; ஒரு வயதுக்குள் தூளிகட்டித் தூக்கிக்கொண்டுபோக வேண்டியதுதான்... ஐயர் விசும்பினார். அவர் மனைவி ஒரு வாரம் வரை சாப்பிடவில்லை; பேசவில்லை; தூங்கவில்லை. பண்ணையார் அன்று ஏங்கி உட்கார்ந்திருந்தார் வாசலில். காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பினார். காரியஸ்தர் மகாதேவய்யர் நின்றுகொண்டிருக்கிறார்! என்ன என்றார் எஜமானர், கடுகடுப்புடன். ''இல்லை...ஆத்திலே... பெண் பிறந்தது...ஆறுவதும் பெண் சுவாமீ! முன்பணமாக ஏதாவது......''. பண்ணையார் முகம் மாறியது. ''அப்படியெல்லாம் அலுத்துக்கொள்ளாதேயும். ரூ. 50 தருகிறேன். திருப்பிக் கொடுக்க முடிந்தால் கொடும். இல்லாவிட்டால் வேண்டாம்...'' காரியஸ்தருக்குத் தம் காதுகளை நம்ப

முடியவில்லை. கொஞ்ச நாளுக்கு முன்புகூட ஒரு பத்து ரூபாய் கேட்டதற்கு என்ன பேச்சுப் பேசினார்! கடைசியில் கொடுக்கவும் இல்லை!... ஏதோ, "க்ஷண சித்தம் க்ஷண பித்தம்"...... வீட்டுக்குப் போய், பணத்தை மனைவியிடம் தந்தார். இளங் குழந்தை சிரித்துக்கொண்டே கையை நீட்டியது. "சீ... கழுதை... கைநீட்டறதைப் பார்; அழிக்கத்தான் பிறந்திருக்காயே" என்றாள் தாயார். குழந்தை சிரித்தது......

பண்ணையாரிடம் அவர் மனைவி சொன்னாள்: "இதோ பாருங்கோ! நம்ம காரியஸ்தருக்குப் பெண் பிறந்திருக்காம்; ரொம்ப லட்சணமாயிருக்காம்; போய்ப் பார்த்துவிட்டு வருவோமா?... இன்னும் ஒன்று... நாமேகூட அதைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டால் என்ன?"... பண்ணையார் திகைத்துப் போனார். காரியஸ்தர் வீட்டுக்கு நாம் போவதா! சே! என்ன அந்தஸ்துக்குறைவு! இருந்தாலும் என்ன செய்ய? மாட்டேன் என்றால் மனைவிக்கு 'ஹிஸ்டீரியா' வந்துவிடும்...

மறுநாள் காலை. காரியஸ்தர் வாழைப் பட்டை சீவிக்கொண்டிருந்தார். ஜல்ஜல் என்ற சதங்கைச் சத்தம் கேட்டு வாசலுக்கு வந்தார், என்ன அதிசயம்! மிராசுதாரின் வில்வண்டியல்லவா அது! இங்கு எதற்காக வருகிறது! அட! எஜமானரா வருகிறது?... "வாங்கோ... வரணும்... வரணும்" என்றார் காரியஸ்தர் நாக்குழற. சிரித்த முகத்துடன் உள்ளே வந்தனர் இருவரும். வேலையாள் ஒருவன் அரை மூட்டை அரிசி, ஒரு தாறு வாழைக்காய். ஒரு பரங்கிப் பழம். வேஷ்டி, புடவை எல்லாம் உள்ளே கொண்டுவந்து வைத்தான். மகாதேவய்யர் ஒன்றும் புரியாமல் நின்றார். இதற்குள் எஜமானி அம்மாள் உள்ளே சென்று குழந்தையை எடுத்துக்கொண்டு வந்தாள். "எத்தனை அழகா இருக்கா குழந்தை! லக்ஷ்மிதேவி மாதிரி! என் தங்கம் லக்ஷ்மியேதான்... என் கண்ணு!"... அவ்வளவுதான்... குழந்தை எஜமானியின் முத்தமாரியைத் தாங்காமல் திணறியது. இதுதான் சமயமென்று, பண்ணையார் மெல்லப் பேச்சைத் தொடங்கினார்... "ஸ்வீகாரமா" என்று இழுத்தார் மகாதேவய்யர்.

"ஆமாம்; ஒன்றும் யோசனை பண்ணாதங்கோ. நீங்க என் சகோதரன் மாதிரி. குழந்தை அங்கேதான் வளரட்டுமே. 'அவளு'ம் குழந்தை இல்லாமே ஏங்கிப்போரு. எங்கள் குழந்தையை ஏந்தி வளர்க்க அதிர்ஷ்டமில்லாவிட்டாலும், பிறர் குழந்தையைச் சொந்தமாகப் பாவித்தாவது வளர்க்கிறோம்."

காரியஸ்தர் உள்ளே சென்று மனைவியையும் தாயாரையும் கேட்டார். அவர்களுக்கு ஏது ஆட்சேபனை? ஏழைக்குப் பணம்தானே பெரிது? மகாதேவய்யர் வெளியே வந்து தம் இஷ்டத்தை வெளியிட்டார். குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள் 'புதிய' தாயார். என்ன ஆச்சரியம்! பிறந்ததுமுதல், முதல் தடவையாக வீறிட்டழுதது குழந்தை. அதன் அழகிய முகத்தில் சிடுசிடுப்புப் பொங்கியது. எஜமானியம்மாள் திகைத்துப்போய் அழும் குழந்தையைப் பார்த்துக் கொண்டே நின்றாள். ஏதோ ஒரு குரல் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. "என்ன அற்ப எண்ணம் உனக்கு! உன்னிடம் குழந்தை தங்காவிட்டால், பிறர் குழந்தையை விலைக்கு வாங்குவதா? உன் அதிர்ஷ்டம் அதுவும் போய்விட்டால்! வேண்டாம்; அன்பை விலைக்கு வாங்காதே..." அவள் உடலில் வியர்வை பெருகிற்று. தன் கணவரைப் பார்த்தாள். அவரும் சிலையாகி நின்றிருந்தார். ஒரு அசாதாரணமான அமைதி அங்கு நிலவியிருந்தது. திடீரென்று அம்மாள் சொன்னாள்: "அண்ணா! குழந்தையைத் தரவேண்டாம்; என்னிடம் வந்தாலே அது அழுகிறது பாருங்கள்; அவள் உங்களிடமே இருக்கட்டும். அடிக்கடி வந்து பார்க்கிறேன்." சட்டென்று போய் வண்டியில் ஏறிக்கொண்டாள் அவள். எஜமானரும் பின் தொடர்ந்தார்... காரியஸ்தர் தம் குழந்தையை எரித்துவிடுவது போலப் பார்த்தார். "ஏ துக்குறி! என் அதிர்ஷ்டத்தைத் துடைத்துவிட்டாயே! எப்போதும் இளிப்பாயே, இன்று என்ன கேடு உனக்கு?" என்று சீறினார். "என் சத்துரு நீதான்" என்று முத்தாய்ப்பு வைத்தார். பிறகு ஸ்நானம் செய்துவிட்டு "கனகதாரா ஸ்தோத்திரம்" வாசிக்கலானார். "மாதான்ன பூர்ணேச்வரீம்! லக்ஷ்மீ! லக்ஷ்மீ!! லக்ஷ்மீ!!!"...

* * *

குழந்தை வளர்ந்துகொண்டே வந்தது. தாய் தந்தையர்களுக்கு, அது பிறந்தபோது



அதன்மீதிருந்த வெறுப்பு இன்னம் மாறவில்லை. ஆனால் மகாதேவய்யர் இப்போது முன்போல இல்லை. மாயனூரிலேயே மிகப்பெரிய வீடு அவருடையதுதான். முன்பெல்லாம் அவரது எஜமானி அடிக்கடி குழந்தையைப் பார்க்க வருவாள். தனது சிதன சொத்து ஐந்து காணி நிலத்தையும், ஒரு வீட்டையும் அவள் குழந்தையின் தகப்பனாருக்கே தந்துவிட்டாள். குழந்தையின் காந்தம் பணத்தை அவளிடமிருந்து ஐயரிடம் சேர்த்தது. ஆனால் அவர் இதை உணரவில்லை. யாருமே உணரவில்லை. அவர் தாயார் சொன்னாள்: "என் பிள்ளை ஓடாய் உழைத்துச் சம்பாதித்தது இது" என்று. ஐயரின் மனைவி நினைத்தாள், "என் அதிர்ஷ்டம்தான் இது. எங்க ஊர் ஜோசியன், நாலில் சுக்கிரன் வரும்போது என்றால் ஆத்துக்காரருக்குப் பணம் வரும் என்று சொல்லவில்லையா" என்று. ஐயர் இரண்டுமே சரி என்று நினைத்தார். அப்போது ஒருநாள் குழந்தை லக்ஷ்மி தாயின் மடியில் உட்கார்ந்துகொண்டு, "அம்மா! பட்டுச் சட்டை வாங்கித்தாம்மா" என்றாள். "ஆமாம்; பணம் வந்தவுடன் செலவுக்கு அடிபோட்டு விட்டாயா... சரி சரி, போ" என்றாள் அம்மா. கிழவி சொன்னாள்: "அப்பா, தேவு! நாளையிலிருந்து லக்ஷ்மி ஸ்தோத்திரம் படிப்பா." 'ஆகட்டும்' என்றார் தனயன் வினயத்துடன். லக்ஷ்மீ! தேவி! லோகமாதா......

காலம் ஓடியது. மகாதேவய்யர் இப்போது மிராசுதார் மகாதேவய்யராகிவிட்டார். அவர் தொட்டதெல்லாம் பொன்னாயிற்று. கடன் வாங்கிக் காணி வாங்கினார். பொன் விளைந்தது அவர் நிலத்தில். கடனை அடைத்தார்; வீடு வாங்கினார். அடுத்த நிலம் சாவியாகப் போனாலும், அவர் நிலத்தில் பயிர் குறையவே குறையாது. மேலும் மேலும் பணம் சேர்த்தார்; கிணறு தோண்டினார்; புதையல் கிடைத்தது...... மூன்று பெண்களுக்குச் சிறப்பாக கல்யாணம் பண்ணி வைத்துவிட்டார். ஒரே குறைதான் அவருக்கு இப்போது. தனக்குப் பின்பு சொத்தை ஆள ஆண் பிள்ளை இல்லையே என்று... இந்தச் சனியன் பிடித்த லக்ஷ்மி ஆணாகப் பிறந்திருக்கக்கூடாதா? இதற்கப்புறம்தான் குழந்தையே பிறக்கவில்லை. முன்பெல்லாம் வருஷத்துக்கு ஒரு குழந்தை பிறந்ததே; இப்போது ஓர் ஆண் குழந்தை பிறக்கக் கூடாதோ; இந்த லக்ஷ்மி பிறக்கும்போதே தாய் வயிற்றைத் துடைத்துக்கொண்டு பிறந்திருக்கிறது... எப்போது பார்த்தாலும் சிரித்துக்கொண்டு... சே! என்ன வேண்டியிருக்கிறது!"... இப்படி நினைவை ஓட்டினார் ஐயர் ஒருநாள்.

அவர் மனைவி உள்ளே வந்தாள். "என்ன யோசனை பண்ணறேள்" என்றாள் கொஞ்சிய படியே.

"இல்லே; உன் அதிர்ஷ்டம் பார்; எப்படியெல்லாம் நாம் முன்னுக்கு வந்துவிட்டோம் என்று... உம்ம்..." என்று இப்போது கொழுவியிருந்த அவள் கன்னத்தில் தட்டினார் ஐயர்.

"போங்கன்னா" என்று மகிழ்ந்துபோனாள் அம்மாள்.

இந்த அயனான சந்தர்ப்பத்திலே, உள்ளே வந்த அவர்களது ஐந்தாம் பெண்—கல்யாணத்துக்கு நிற்பவள்—"அப்பா, அப்பா! இந்த லட்சுமியைப் பாரு அப்பா! என் 'ப்ரூச்'சை எடுத்துக்கொண்டு...என்றாள். ஐயருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "சே, சனியன்...பீடை" என்று முணுமுணுத்தார். கோவிலில் மணி அடித்தது. என்ன அது? என்றாள் அம்மாள்; "ஒன்றுமில்லை இன்றைக்குத் தை வெள்ளிக்கிழமை; லக்ஷ்மி-தேவிக்கு அர்ச்சனை செய்து, கோயிலில் ஸ்தோத்திரம் சொல்லச்சொன்னேன்" என்றார் ஐயர், "ஆமாம்; அந்த விக்கிரகத்துக்குத்தான் எத்தனை அழகு... என்ன சாந்தம்" என்று பக்தியில் மெய் மறந்து சொக்கிப்போனாள் அம்மாள்...

ஐயரின் ஐந்தாவது பெண்ணுக்குக்கூட கல்யாணமாகி அவள் புக்ககம் போய்விட்டாள். லக்ஷ்மி ஒருத்திதான் பாக்கி... இதை ஒரு தொல்லை என்றே நினைத்தார் ஐயர்... ஆனால் அவருக்கென்ன. மாப்பிள்ளையா கிடைக்காமல் போய்விடும்? இப்படி எண்ணங்களில் அவர் லயித்திருக்கும்போது, பண்ணை வேலையாள் எதையோ சுமந்து போவதைப் பார்த்தார். "டேய் முருகா! என்னடா அது கையிலே?"...

"இல்லீங்க அம்மா கொடுத்தாங்க; சின்னம்மா"

"என்னடா அது என்கிறேன்"

"ஒரு மரக்கால் அரிசிங்க...என் பெண்சாதிக்கு உடம்பு சொகமில்லேன்னு. எஜமானி அம்மாவைக் கேட்டேன் ... கொடுக்கமாட்டேன்னுங்க...

ஜண்டு பார்மஸூடிகல் வொர்க்ஸ் லிமிடெட்.



"ஜண்டு கேஸரி ஜீவன்"

சகல ஆயுர்வேத மருந்துகளையும், இங்கிலீஷ் மருந்துகளையும் ஏராளமாக, சாஸ்திரோக்தமாக, தயாரிப்பவர்கள்

இது சாதாரண இருமல், ஜலதோஷம், ஆஸ்த்மா தொண்டைக் கம்மல், சுவாசகோச அழற்சியால் தோன்றும் இருமல் முதலிய வைகளுக்குச் சிறந்தது. மேலும் இது வக்கீல்கள், உபாத்தியாயர்கள், நூல் ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு மூளைக்குத் தெளிவையும், ஞாபக சக்தியையும் அளிப்பதோடு தேகத்திற்கு, தேஜஸூம் வீரியவிருத்தியும் அளிப்பதில் சிறந்தது.

1 பவுன் 6—8—0   ½ பவுன் 3—6—0   ¼ பவுன் 1—13—0

எல்லா மருந்து வியாபாரிகளிடமும், அல்லது ஜண்டு பார்மஸி ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

சென்னை ராஜதானி ஏஜண்டுகள்:

தாமோதர் அண்டு கோ,

113, நயனியப்பநாயக்கன் தெரு சென்னை, 3.

அப்புறம் வந்துங்க... நம்ப சின்னம்மா, வந்துங்க..."

"சீ கழுதை! கீழே வைத்துவிட்டு நட. இது என்ன தர்ம சத்திரமா!..."

"வேண்டாம்; நீ எடுத்துக்கொண்டு போ அப்பா"... திரும்பினார் ஐயர்... லக்ஷ்மி! "அப்பா! ஏழைகளுக்கு உபகாரம் செய்தால்தான் நம் செல்வம் வளரும். நீ போ முருகா...பயப்படாமே எடுத்துக்கொண்டு போ..." அவள் குரலில் பார்வையில், ஏதோ ஒரு சக்தி இருந்து முருகனின் நெஞ்சைத் தொட்டது, வெறும் நன்றி உணர்ச்சி மட்டும் இல்லை அது... அரிசியை எடுத்துக் கொண்டு மெல்ல அகன்றான்.

"என்னை அவமானப்படுத்த எத்தனை நாட்கள் திட்டம் போட்டாய்! தகப்பனார் என்கிற மரியாதை இல்லாமல்..." கோபத்தில் கொதித்தார் மிராசுதார். அதன் மிகுதியில், என்ன செய்கிறோமென்று தெரியாமல், பெண்ணை அடித்துவிட்டார்.

லக்ஷ்மி சிரித்தாள்; அண்டசராசரங்களை ஒடுங்க வைக்கும் சக்தி உள்ள அந்தச் சிரிப்பு, ஐயரின் காதுகளில் மெல்லிய ஒலியாகத்தான் விழுந்தது.

இதற்குப் பிறகு ஐயர் தம் பெண்ணுடன் அதிகம் பேசுவதே இல்லை. அவள் தாயாரும் அப்படியேதான். லக்ஷ்மி மட்டும் எப்போதும் போலவே இருந்தாள். மிராசுதாரான பின்பு ஐயர் பழைய விலையை மறந்தேபோனார். வேலையாட்களைக் கொடுமைப்படுத்தினார். லக்ஷ்மி தன்னாலானவரை அவர்களுக்கு உபகாரம் செய்வாள். அவர்கள் அவளை வாயார வாழ்த்தினர். இது வேறு ஐயரின் கோபத்தைக் கிளறியது...

அன்று ஒரு நாள்! ... ஆற்றங்கரையிலிருந்து வீடு திரும்பினாள் லக்ஷ்மி. அவள் தாயார் பத்ர காளி ரூபம் எடுத்துக் கொண்டு கூடத்து 'ஸோபா'வில் உட்கார்ந்திருந்தாள். லக்ஷ்மி உள்ளே நுழைந்த உடன் "ஏ கழுதே! இங்கே வாடி! இத்தனை நேரம் ஆத்தங்கரையில் என்ன வேலை! நான் கேள்விப்படுவது நிஜமா" என்று சீறினாள்.

"கேள்விப்படுவது என்ன அம்மா! நானே சொல்கிறேனே! 'அவரு'டன் பேசிக்கொண்டிருந்தேன்...... 'அவர்' தான் அம்மா, கோடி வீட்டு ......"

"சீ வாயை மூடு... அந்த நாராயணன் ...... தரித்திர நாராயணன் தான் அவன்... போயும் போயும் அவனையா..."

"அப்படி யெல்லாம் பேசாதே அம்மா. அவர் ஏழை தான்; ஆனால் நல்லவர், நான் அவரையே தான்......"

"கல்யாணம் பண்ணிப்பாயோ! அநாதைப் பயல் அவன்; அவனை இந்த 'அன்றாடங்காய்ச்சிகள் வளர்க்கிறார்கள்...... ஐய! என் வயிற்றில் பிறந்தாயே நீ! போடி உள்ளே! இன்னொரு தரம் அவனைப்பற்றிப் பேசினால் பல்லைத் தட்டி விடுவேன்... மறுமுறை அவனைப்பார்க்கப் போனால் காலை ஒடித்து விடுவேன்... ஆமாம்."

லக்ஷ்மி இப்போதும் முகம் வாடவில்லை...... நாட்கள் சென்று கொண்டிருந்தன. நாராயணனை ஒரு நாள் திடீரென்று காணவில்லை ...... லக்ஷ்மி பெருமூச்சு விட்டாள்......

* * *

அன்று மகாதேவய்யரின் வீடு அமர்க்களப் பட்டது. காரியஸ்தர்கள் இங்கும் அங்கும் ஓடிவேலை செய்த வண்ணம் இருந்தனர். வாழைக் குலைகளும், தோரணங்களும், அற்புதமாய் விளங்கின. மந்திர கோஷம் முழங்க. ஓமப்புகையின் இடையே மகாதேவய்யர், தம் பெண் லக்ஷ்மியை மைனர் ராமலிங்கத்துக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்....... கல்யாணம் முடிந்ததும் ஐயருக்கு ஒரு பாரம் குறைந்தது... இனி வேலைக்காரர்கள் கொட்டம் அடங்கும் என்று சந்தோஷப்பட்டார்.

மறுநாள் லக்ஷ்மி ஊருக்குப்புறப்பட வேண்டும். அவள் தாயார் அவளிடம் சிறிது பரிவு காட்டினாள். பிறகு "லக்ஷ்மி! தவறாமல் கனகதாரா ஸ்தோத்திரம் சொல்லு: பணம் பெருகும்" என்றாள். அடுத்த அறையில் ஐயர் சொல்லிக்கொண்டிருந்தார்: "லோக மாதா, அன்ன பூர்ணேச்வரீ! லக்ஷ்மி! லக்ஷ்மீ! லக்ஷ்மீ!"...

லக்ஷ்மி புக்ககம் வந்து விட்டாள். மைனர் ராமலிங்கம், மைனராகவே தான் இருந்தான். புக்ககம் வந்த மறு நாளே அவள் மாமியார் அவளுடன் சண்டைக்குத் தவக்கினாள். மறு நாள் வீடே அதிரும்படி கூச்சல் போட்டான் அவள் கணவன்.

"எண்டி! உங்க ஊரிலே, யாரோடேயோ நீ கள்ளக் காதல் வைச்சிண்டிருந்த யாமே, வாஸ்தவமா!"

"கள்ளத்தனம் ஒன்றும் இல்லை; ஒருத்தரோடு அடிக்கடி சந்தித்துப் பேசியிருக்கிறேன்; அவ்வளவுதான்."

"எச்சிற் பாண்டம் நீ! சீ!" என்று அவளை நோக்கிக் கையை வீசினான் அவன். அவன் கை விளக்கின்மேல் பட்டு அது விழுந்தது. "என்ன அபசகுனம் இது... இந்தத் துக்குறி" என்று ஆரம்பித்தாள் மாமியார்க்காரி.

"மாமி!" என்றாள் லக்ஷ்மி. அவள் முகம் பார்க்கப் பயங்கரமாயிருந்தது. "என்னைத் திட்டினவர்களை—இதுகாறும் அனுவசியமாகப் பழித்தவர்களை—இதுவரை மன்னித்தேன். ஏனென்றால்

அவர்களைக் கைதூக்கிவிடத்தான் நான் வந்தேன். இனி நீங்கள் சொன்னால் வீட்டை விட்டுப் போய் விடுவேன்.''

'போ' என்றான் கணவன். அவள் போய்விட்டாள். ''ஏதோ பைத்தியத்தை நம் தலையில் கட்டிவிட்டான் அவன்'' என்றான் ராமலிங்கம்.

லக்ஷ்மி நடந்தாள்... நடந்துகொண்டே இருந்தாள்...மனிதர்கள் எத்தனை சுயநலக்காரர்கள்... எங்கோ சொப்பனம் கண்டதுபோல் நினைவு வந்தது அவளுக்கு... ''நீதான் உதவிசெய்துபாரேன் அனுபவம் இல்லை உனக்கு...'' அவள் கண்கள் பிரகாசம் பெற்றன. பேய் வேகத்தில் நடந்தாள். வானம் இருட்டிக்கொண்டு வந்தது. மழை மேகங்கள் சூழ்ந்தன, மகாதேவய்யர் வீட்டில் இருந்தார். ''அப்பா! என்ன இடி! இதேபோல, அந்த லக்ஷ்மி பிறந்தன்னிக்குத்தான் இடித்தது'' என்று நினைத்துக்கொண்டார்.

திடீரென்று காது செவிடுபடும்படியான சத்தம் கேட்டது. அவரது பெரிய வைக்கோல் போரில் இடி விழுந்து எரிந்துகொண்டிருந்தது. நல்ல காலம் பக்கத்திலிருந்த வீட்டில் விழவில்லை. நடுங்கினார் ஐயர். ஐயோ! லக்ஷ்மி பிறந்த நாளா இது? சனியன்! இருந்தும் தொல்லை... போயும் தொல்லையா'' என்று எண்ணினார் அவர். கார் மேகங்கள் லக்ஷ்மீ லக்ஷ்மீ லக்ஷ்மீ என்று உறுமுவதுபோல் இருந்தது அவருக்கு.

அதே சமயம், லக்ஷ்மி நின்றுகொண்டிருந்த இடத்தின் அருகே ஒரு ஒளி தோன்றியது. பாய்ந்து சென்று அதில் ஒன்றிப்போனாள் அவள். ஒளி மறைந்தது. இடி நின்றது. மழை ஓய்ந்தது. ஆனால் உலகத்தை ஓர் அடர்ந்த அந்தகாரம் போர்த்துக்கொண்டிருந்தது.

* * *

சில மாதங்கள் சென்றன. பண்ணை மகாதேவய்யரின் சொத்துக்கள் எப்படி அத்தனை சீக்கிரம் கரைந்தன என்று ஊரார் அதிசயப்பட்டனர். அவர் பழையபடி கணக்கப்பிள்ளையாகி விட்டார். அவர் பழைய ஹரிக்கேன் விளக்கடியில் உட்கார்ந்து திரும்பவும் ஸ்தோத்திரம் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

ஆனால் ஒரு வித்தியாசம்.

அவர் மனைவி தாயாகும் நிலையில் இல்லை. ●

அது உல்லாசமான வேட்டைக் காலம். ஒருநாள் இரவு மார்க்விஸ் அவர்களின் வீட்டில், பலரகமான பழங்களும் பூக்களும் வைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய வட்ட மேஜையைச் சுற்றிலும் பதினொரு வேட்டைக்காரர்களும் எட்டு இள மங்கையர்களும் அடுத்த ஊர் டாக்டரும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அது சாப்பாட்டுச் சமயம்.

காதலைப்பற்றிய பேச்சு எப்படியோ அங்கே கிளம்பி விட்டது! தொடர்ந்து முடிவில்லாத காரசாரமான வாதம் எழும்பி விட்டது. ஒருவன் ஒரே நபரைக் காதலிப்பானா என்பதைப் பற்றிய விவாதம். ஒரே காதலனையோ, காதலியையோ கொண்டிருந்தசில உண்மைக் காதலர்களையும் பலரைக் காதலித்தவர்களையும் அவர்கள் உதாரணத்திற்கு இழுத்துப் பேசினார்கள்.

காதலுணர்ச்சி மனிதனைப் பலமுறை, பலரிடம் இழுத்துச் செல்லக்கூடும் என்பது ஆண்களின் கட்சி.

அவர்கள் சொல்வது எதிர்ப்புக்கு இடம் கொடுக்காததாகத் தோன்றினாலும், நடைமுறைக் காதலை அதிகமாக அறியாமல் புத்தகக் காதலிலேயே ஊறிப்போயிருந்த அந்தச் சீமாட்டிகள், உண்மையான காதல்—தெய்வீகக்காதல் ஒரு நபரை ஒருவரைத்தான் காதலிக்கச் செய்கிறது; அது தாழ்ப்பாளைப் போல அந்தக்காதலுள்ளத்திற்கு அமைந்து நின்று வேறு யாரைப் பற்றிய கனவையும் மனசினுள்ளே நுழையவிடாமல் தடுக்கிறது என்று வாதித்தார்கள்.

காதல் அனுபவம் கொண்ட மார்க்விஸ், "ஒருவன் பலரைப் பலமுறை தன் முழு மனதோடும், பலத்தோடும் காதலிக்க முடியும்...

அழியாக் காதல்

மூலம்: மாப்பஸான்....
தமிழில்: வேலா. வில்லவன்.



காதலர்கள் குடிகாரர்களைப் போல! குடித்துப் பழக்கப்பட்டவன் குடித்துக் கொண்டே போவதைப் போலக் காதலித்துப் பழக்கப்பட்டவன் காதலித்துக் கொண்டே போவான்!" என்றார்.

அவர்களெல்லாரும் அங்கு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்த டாக்டரை நடுவராகப் பாவித்து அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டார்கள்.

"எனக்குத் தெரிந்த வரையில்...ஆமாம், ஐம்பதது ஐந்து வருஷங்கள் தடம் விலகாமல் ஒரு நபரின் காதல் ஓடியிருக்கிறது! கடைசியில் மரணம்தான் அதன் ஓட்டத்தை நிறுத்திற்று!" என்று உணர்ச்சி ததும்பச் சொன்னார்.

மார்க்விஸ் கை தட்டினார்.

"ஆஹா, அபாரம்! அந்த வாழ்வு எவ்வளவு இன்பமானதாக இருந்திருக்கும்!" என்று சப்புக் கொட்டினாள் ஒரு அழகி.

டாக்டர் சிரித்தபடி பதில் சொன்னார்:

"இல்லை. நீங்கள் நினைப்பது தவறு! இன்ப வாழ்வு அங்கே கிடையாது! காரணம் காதலிக்கப்பட்டவன் ஆண் பிள்ளை! ஏன், உங்கள் எல்லோருக்குமே அவரைத் தெரியும்! இந்தக் கிராமத்திலுள்ள மருந்துக் கடைக்காரர் சோக்கெட் தான் அவர்! அந்தப் பெண்ணையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த வீட்டிற்குங்கூட வருஷா வருஷம் வந்து பிரம்பு நாற்காலிகளைப் பழுது பார்த்துக்கொண்டிருப்பாளே அந்த ஏழைக் கிழவிதான்! இதை நீங்கள் நம்புவீர்களோ என்னவோ!"



அந்தப் பெண்களுக்குப் பொங்கிக்கொண்டு வந்த உற்சாகம் மங்கிவிட்டது. வெறுப்புத் தோய்ந்த முகத்துடன் 'பூ!' என்றார்கள். ஏதோ காதல் என்பது செல்வமும் அழகும் நிறைந்தவர்களின் சொந்தச் சொத்து என்ற நினைப்பில்!

டாக்டர் தொடர்ந்தார்:

"மூன்று மாதங்களுக்கு முன்னால் நான் இந்தக் கிழவியின் மரணப் படுக்கைக்கு அழைக்கப்பட்டேன். அவள் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருந்தாள். பாதிரியாரும் அங்கு நின்று கொண்டிருந்தார். அவள் தன்னுடைய சொத்து யாருக்குச் சேரவேண்டுமென்பதைச் சொன்னாள். அதன் காரணத்தை விளக்கவே அவள் தன் வரலாறு பூராவையும் கூறினாள். இவ்வளவு உணர்ச்சிகரமான வரலாற்றை நான் இதுவரை கேட்டதே கிடையாது!

"அவளுடைய தகப்பனுக்கு நாற்காலிகளுக்குப் பிரம்புப் பின்னல் அமைக்கும் வேலை. அவள் தாயும் அவனுக்கு ஒத்தாசையாயிருந்துவந்தாள். அவர்கள் வீடென்று ஒன்றை இந்தப் பூமியில் அறிந்தவர்களல்ல. அவள் சிறுமியாயிருந்தபோது அழுக்கும் கந்தலுமான உடுப்புகளை அணிந்துகொண்டு ஊர் சுற்றுவாள். அவள் பெற்றோர் நகர வாசலிலே தங்கள் வண்டியை நிறுத்துவார்கள். குதிரையை மணலிலே புரள விட்டு விடுவார்கள். நாய்களைத் தூங்கவிட்டு விடுவார்கள். அவள் பிரம்புகளை வைத்துக் கொண்டு விளையாடுவாள். புருஷனும் பெண் சாதியும் மும்முரமாகத் தங்கள் வேலையிலீடு பட்டுவிடுவார்கள்.

"வேலை முடிந்ததும் வீதிகளில், 'நாற்காலி ரிப்பேர்!' என்று கூவிச் செல்வார்கள். ஒட்டை நாற்காலிகள் கிடைத்ததும் வேலையில் முனைந்து விடுவார்கள்."

"சிறுமி எங்காவது துஷ்டப் பிள்ளைகளுடன் விளையாடப் போனால் அவள் தகப்பன், 'போக்கிரிப் பெண்ணே, இங்கே வா!' என்று சத்தம் போட்டு அவளைக் கூப்பிடுவான். அந்தக் காலத்திலே அவள்மீது பொழியப்பட்ட அன்பு வார்த்தைகள் அவைகள்தாம்!

"அவள் கொஞ்சம் பெரியவளான பிறகு, ரிப்பேர் செய்யப்படவேண்டிய நாற்காலிகளை வாங்கி வர ஊருக்குள்ளே அனுப்ப ஆரம்பித்தார்கள் அவள் பெற்றோர். தெருப் பிள்ளைகளோடு பேசவும் விளையாடவும் அவளுக்குக் கொள்ளை ஆசை. அப்படியெங்காவது அவள் பேசி விளையாடுவதைத் தெருப் பிள்ளைகளின் பெற்றோர்கள் பார்த்துவிட்டால் போதும்! 'முட்டாளே, இங்கே வா! இன்னொருமுறை உன்னை நான் அந்தப் பன்றிக் குட்டியுடன் விளையாடுவதைப் பார்த்தால் நன்றாக அடிப்பேன்?' என்று தங்கள் பிள்ளைகளை வைது அவளிடமிருந்து தங்கள் பிள்ளைகளைப் பிரிப்பார்கள் பெற்றோர்கள்.

"அடிக்கடி சுட்டிப் பயல்கள் அவள்மேல் கற்களை எறிவார்கள். சில வேளைகளில் சீமாட்டிகள் சிலர் அவளுக்குக் காசு கொடுப்பார்கள்.

"அப்பொழுது அவள் பதினோரு வயதுச் சிறுமி. ஒருநாள் அவள் கல்லறைத் தோட்டத்தின் பக்கத்திலே நமது சோக்கெட் அழுது கொண்டிருந்ததைப் பார்த்தாள். வறுமையோ, பட்டினியோ, கடினமான உழைப்போ ஏதுமறியாத பெரிய இடத்துப் பிள்ளை அழுது கொண்டிருந்தது அவளைத் திகைக்க வைத்தது. இளம் சோக்கெட்டிடமிருந்து அவன் போக்கிரி நண்பர்கள் இரண்டு செப்புக் காசுகளைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். சிறுமி அவனை நெருங்கி விஷயம் என்னவென்பதைத் தெரிந்துகொண்டதும் தான் சேர்த்து வைத்திருந்த ஏழு செப்புக் காசுகளை அவன் கைகளிலே வைத்து அழுத்தினாள். சோக்கெட் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவைகளை வாங்கிக்கொண்டான். இனம் விளங்காத குதூகலம் சிறுமியின் கனிந்த பூமனசிலே பொங்கியெழுந்து அவனை அணைத்துக் கொள்ள வேண்டுமென்ற இன்ப வெறியை அவளுக்குண்டாக்கியது! காசுகளை எண்ணிக் கொண்டிருந்த அவன் அவளை அப்படிச் செய்ய அனுமதித்து விட்டான். தான் திட்டப்படாமலும் அடிக்கப்படாமலும் இருப்பதைக் கண்ட அவள் மறுபடியும் மறுபடியும் அவனை இறுக மார்போடு அணைத்துக் கொண்டாள். பிறகு ஓடிவிட்டாள்.

"அவள் மனசிலே அதற்குப் பின்னால் என்னென்ன உணர்வுகள் ஏற்பட்டனவோ! தன்னை அந்த முட்டாள் சிறுவனோடு இணைத்துப் பார்த்துக் கொண்டாளா? அப்படியானால் அது அவனுக்குத் தன் செல்வம் முழுவதையும் கொடுத்ததனாலா அல்லது தன்னுடைய முதல் முத்தத்தைத் தந்ததினாலா?

"மாத காலமாக அந்தக் கல்லறைத் தோட்ட நிகழ்ச்சியைப் பலவாறு சித்திரித்த கனவுகளைக் கண்டு கொண்டிருந்தாள். மீண்டும் சோக்கெட்டை அதேயிடத்தில் சந்திப்போம் என்ற நம்பிக்கையோடு அவனுக்குப் பணம் கொடுக்கத் தன் தகப்பனின் பணத்தை அவ்வப்போது திருடித் திருடிச் சேர்த்துவந்தாள்.

"மறுபடியும் அவள் இந்த ஊருக்கு வந்தபோது அவளிடம் இரண்டு பிராங்குகள் இருந்தனவென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்! சோக்கெட் புது உடையணிந்து கொண்டு தன் தகப்பனாரின் மருந்துக் கடையில் பலநிற மருந்துகளைக் கொண்ட புட்டிகளுக்கிடையிலே நின்று கொண்டிருந்த அந்தக் காட்சி அவளை வெகுவாகக் கவர்ந்தது. அவள் பிஞ்சு மனசிலே பெண்மை மேலோங்கி நின்றது. அவனை அவள் முன்னைவிட அதிகமாக வெறிகொண்டு காதலித்தாள்.

"அடுத்த வருஷத்திலே ஒரு நாள் சோக்கெட் தன் தோழர்களுடன் பள்ளிக்கூடத்தின் பக்கத்திலே கோலி விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டாள். பார்த்ததுதான் தாமதம். ஒரே ஓட்டமாக அவனிடம் ஓடினாள். அவன்மீது பாய்ந்து அவனை இறுக அணைத்துக்கொண்டு ஆசை தீர முத்தமாரி பொழிந்து தள்ளினாள். அவன் மருண்டு போய் ஊளையிட ஆரம்பித்தான். அவனைச் சரிப்படுத்த அவள தன்னிடமிருந்த மொத்தத் தொகையான எழுபது செண்ட்களையும் அவன் சட்டைப்பையிலே கொட்டினாள். பணத்தைக் கண்டதும் கண்களை அகல விரித்து ஆச்சரிய மிகுதியுடன் அதை வாங்கிக் கொண்டான் அவன். தன்னை அவள் தன் இன்பவெறி தணியும் மட்டும் அணைத்து முத்தமிட்டுக்கொள்ள அனுமதி கொடுத்துவிட்டான்!

"அடுத்த நாலு வருஷ காலமாக அவள் தன்னுடைய வருமானத்தையெல்லாம்—தன் தகப்பனிடமிருந்து திருடிய தொகை முழுவதையும், அவனுக்கு அவ்வப்போது கொடுத்துவந்தாள். அவன் அவைகளைப் பெற்றுக்கொண்டு பதிலாகத் தன்னை அவள் அணைத்துத் தன் முகத்திலே முத்தங்களைப் பதிக்க அனுமதி தந்து வந்தான்.

"அவளுக்கு அவனைத் தவிர வேறு நினைவு இடையாது! அவள் வருகைக்காக அவன் பொறுமையிழந்த நிலையில் காத்துக்கொண்டிருப்பான். அவள் தூரத்தில் வருவதைக் கண்டதும் ஓடி அவளிடமிருந்து தொகையைப் பெற்றுக்கொள்வான். அவள் மனத்திலே அப்பொழுது பொங்கிப் பாயும் இன்பம்......! ஆஹா!

"சில நாட்களுக்குப் பிறகு சோக்கெட்டை ஊரிலே காணோம்! கல்லூரிப் படிப்புக்காக அவனை அவன் பெற்றோர் வெளியூருக்கு அனுப்பி விட்டார்கள். அவள் அதை யூகித்துத் தெரிந்து கொண்டாள். இரண்டு ஆண்டுக்காலம் அவள் அவனைப் பார்க்கவேயில்லை! அந்த இரண்டாண்டுக் காலமாக மன அரிப்புடன் நிம்மதியே இல்லாமல் இருந்து வந்தாள் அவள்.

"அன்று அவள் அவனைப் பார்த்தாள்! அவன் உருவத்திலே பெருத்த மாற்றம்! மிகவும் வளர்ந்து அழகாக ஆடையுடுத்தியிருந்தான். அவளுக்குப் பூரிப்புத் தாளவில்லை. ஆனால் அவன் அவளைப் பார்த்தும் பார்க்காதவன் போலப் போய்விட்டான்.

"இரண்டு நாட்கள் விடாமல் அதற்காக அழுது தீர்த்தாள் அவள். வேதனை அவளை இறுகப் பிடித்துக்கொண்டது.

"ஒவ்வொரு வருஷமும் அவள் இந்தக் கிராமத்திற்கு வந்தாள். சோக்கெட் அவளைச் சட்டை செய்யவேயில்லை. வேதனையினூடே அவள் விடாப்பிடியாக அவனை வெறி கொண்டு காதலித்தாள். மரணப் படுக்கையிலே படுத்துக்கொண்டிருக்கும் போது கூட அவள் என்னிடம், 'டாக்டர், நான் இந்த ஒரு மனிதனைத தவிர வேறு யாரையும் கண்ணெடுத்துப் பார்க்க விரும்பியதும் கிடையாது; பார்த்ததும் கிடையாது!' என்று உணர்வு பொங்கச் சொன்னாள்!

"அவள் தகப்பனும் தாயும்கூட இறந்துவிட்டார்கள். பரம்பரைத் தொழிலை விட்டுவிடாமல் அவள் செய்ய ஆரம்பித்தாள். அதே வண்டியில் தான் ஊர் ஊராகச் சுற்றினாள். முன்பு ஒரே நாய் இருந்தது இப்பொழுது இன்னொரு நாயையும் வைத்துக்கொண்டாள்.

"ஒருநாள் அந்தி சாயும் நேரத்திலே இந்தக் கிராமத்திலே அவள் நுழைந்த சமயம் சோக்கெட்டின் பருந்துக்கடையிலிருந்து ஒரு சீமாட்டி தன் ஆசை நாயகனின் கையைப் பிடித்தபடி படியிறங்கி வருவதைப் பார்த்தாள். அவள் அவன் மனைவி! அவனுக்குக் கல்யாணம் நடந்துவிட்டது!

"அன்று பொழுது சாயும் அந்த நேரத்திலே அவள் தன் உயிரை மாய்த்துக்கொள்ள ஒரு குட்டையிலே குதித்துவிட்டாள். குடித்து வெறித்திருந்த ஒருவன் அவளைக் காப்பாற்றிச் சோக்கெட்டின் கடைக்குக் கொண்டுவந்து வைத்தியம் செய்ய வைத்தான். சோக்கெட் அவளைத் தான் அடையாளம் தெரிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவளுக்குச் செயற்கைச் சுவாசம் தந்தான். 'இப்படி முட்டாள் தனமாக நீ நடந்துகொண்டிருக்கக்கூடாது?' என்று அலுத்துக்கொண்டான்.

"அந்த ஒரு வார்த்தையே அவளைச் சுகப்படுத்தப்போதுமானதாயிருந்தது! அவளிடம் அவன் பேசினானே! வெகுநாட்கள் மகிழ்ச்சியுடனேயே இருந்தாள்.

"சோக்கெட் தன்னுடைய வைத்தியத்திற்கு ஏதும் பணம் வேண்டாம் என்று சொல்லியுங்கூட அவள் பலவந்தமாகப் பணத்தை அவன் கையிலே வைத்து அழுத்தினாள். அதிலும் அதிகப் பணம் தந்தாள்! அவள் வாழ்க்கையில் இதை ஒரு இன்றியமையாத அம்சமாக்கிக் கொண்டாள். சோக்கேட்டிடமே தனக்கு வேண்டிய மருந்துகளை வாங்குவாள். அளவுக்கு மிஞ்சிய பணம் கொடுப்பாள். மருந்துக் கடையில் அவனை மிகவும் சமீபத்தில் நேருக்கு நேராகப் பார்க்க முடிகிறதென்றே அங்குப் போவாள். அப்படி அவனைப் பார்த்துப் பார்த்தே தன் வாழ்நாளை ஓரளவு இன்பத்தோடு ஓட்டினாள்.

"நான் முதலிலே சொன்னபடி அவள் இந்த மாரிக்காலத்திலே தான் இறந்து போனாள். தன் கதை பூராவையும் சொல்லி முடித்த அவள்

தான் சேமித்து வைத்திருந்த பணம் முழுவதையும் சோக்கெட்டிடம் கொடுத்துவிடும்படி என்னிடம் மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள், அவள் இவ்வளவு காலம் வாழ்ந்ததே அவனுக்காகவேதானென்றும் தான் செத்துவிட்ட பிறகாவது ஒருவேளை அவன் அவளின் அன்பின் ஆழத்தையும் காதலின் சக்தியையும் உணர்ந்து கொள்வானென்றும் கூறினாள் அவள்.

'அப்புறம் அவள் என்னிடம் இரண்டாயிரத்து முந்நூற்று இருபத்தேழு பிராங்குகளைக் கொடுத்தாள். இறுதிச் சடங்குகளுக்காகப் பாதிரியாரிடம் அந்த இருபத்தேழு பிராங்குகளைக் கொடுத்து விட்டேன். அவள் இறந்துவிட்டாள்!

"அடுத்த நாள் காலை நான் சோக்கெட்டின் வீட்டிற்குப் போனேன். சோக்கெட் தம்பதிகள் அப்போதுதான் சிற்றுண்டியருந்தி முடித்திருந்தார்கள்.

"என்னை உட்காரச் செய்தார்கள். நான் வந்த தன் காரணத்தை — கிழவியின் மரணத்தைப் பற்றி—உணர்ச்சியோடு சொல்ல ஆரம்பித்தேன், அவர்கள் மனமுடைக்து அழுதுவிடுவார்கள் என்ற எண்ணத்தோடு.

"ஆனால் அந்த நாடோடிக்கிழவி அவனை முழு மனதோடு காதலித்தாள் என்பதைச் சோக்கெட் அறிந்ததும் ஒரு திருடியின் மேல் உண்டாகும் கோபம் அவனுக்கு அவள் மேல் பொங்கிக் கொண்டு வந்தது.

"அவன் மனைவியும் கோபக் கொதிப்புத் தாளாமல் 'பிச்சைக்காரி! நாடோடி!' என்று முணுகினாள்.

"சோக்கெட் நாற்காலியிலிருந்து உதைத்துக் கொண்டு எழுந்து மேசையைச் சுற்றிச் சுற்றி நடந்து, 'டாக்டர், இதைப்பற்றி நன்றாக எண்ணிப்பாருங்கள்! ஒரு நாடோடி என்னைக் காதலிப்பதா? இந்த விஷயம் எனக்கு அந்தக் கழுதை உயிரோடிருக்கும் போதே தெரிந்திருந்தால் நான் மான நஷ்ட வழக்குத் தொடுத்து அவளைச் சிறைக்கனுப்பியிருப்பேன். ஆமாம்' என்று அந்த அறையே அதிரக் கொக்கரித்தான்,

"எனக்குக் குழப்பமாகிவிட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தேன். என் வேலையை நான் முடித்தாகவேண்டுமல்லவா! நான் சொன்னேன்: 'அவள் தன்னுடைய சேமிப்புப் பணமாகிய இரண்டாயிரத்து முந்நூறு பிராங்குகளையும் தங்களிடம் தரும்படி என்னைக் கேட்டுக்கொண்டாள். உங்களுக்கு அவள்மீது இருக்கும் வெறுப்பைப் பார்த்தால் அந்தப் பணத்தைச் சீண்டக்கூட மாட்டீர்கள் போலிருக்கிறது. ஆகவே இந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்தால் நலமாயிருக்குமென்று நான் நினைக்கிறேன்,'

"அந்த மனுஷனும் மனுஷியும் எவ்வளவு அதிர்ச்சியடைந்துபோனார்கள் தெரியுமா? கண்களை அகல விரித்து என்னைப் பார்த்தார்கள். 'உங்கள் தீர்மானம் என்ன?' என்றேன்

'முதலில் அந்தமனுஷிதான் பேசினாள்.' இது அந்த மனுஷியின் கடைசி வேண்டுகோளாயிருப்பதால் நாங்கள் அதை நிராகரிப்பது நலமாயிருக்காது!'

'சோக்கெட் குழப்பமடைந்தவனாய், தடுமாறும் குரலில் சொன்னான்: 'நாங்கள் அந்தப் பணத்தைக்கொண்டு எங்கள் குழந்தைகளுக்குப் பொருட்கள் வாங்கிக்கொள்கிறோம்!'

நான், 'சரி உங்களிஷ்டம்' என்று கூறிப்பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டு வீடுதிரும்பினேன்.

"அடுத்த நாள் காலை சோக்கெட் வழக்கத்திற்கு மாறாக என்னிடம் வந்தான். 'அவள் ...அந்த நாடோடி ஒரு பழைய வண்டியை இங்கே விட்டுச் சென்றிருக்க வேண்டுமே,...ம்...அதை என்ன செய்யப் போகிறீர்கள் ?' என்று கேட்டான்.

'ஒன்றும் செய்யப்போகவில்லை; உங்களுக்குவேண்டுமானால் எடுத்துக்கொண்டுபோங்கள்!' என்றேன்.

" 'ஆமாம், அது எனக்குவேண்டும். அதைக் கொண்டு என் வீட்டுச் சமயலறைக்கு ஒரு புகைக்கூண்டு அமைத்துக் கொள்ளலாமென்று பார்க்கிறேன்!' என்றான்.

" அவன் நடந்தான். நான் மீண்டும் அவனைக் கூப்பிட்டேன். 'அவளுடைய குதிரையும் இரண்டு நாய்களுங்கூட இருக்கின்றன. அவை கூட உமக்கு வேண்டுமா?' என்று கேட்டேன்,

" 'அவைகளை வைத்துக்கொண்டு என்ன செய்வது? யார் அவைகளுக்குத் தீவனம் போட்டுக் காப்பது? யாருக்காவது அவைகளைக் கொடுத்து விடுங்கள்!' என்று கூறினான்.

"சிரித்தபடி கைகுலுக்க என்னிடம் தன்கையை நீட்டினான். நானும்கையைக்கொடுத்தேன். என்ன செய்வது? நம் நாட்டிலே ஒரு டாக்டரும் மருந்துக் கடைக்காரனும் விரோதிகளாயிருக்கக் கூடாதே!

"கிழவியின் அந்த இரண்டு நாய்களையும் நான் எடுத்துக் கொண்டேன். பாதிரியார் குதிரையை எடுத்துக்கொண்டார். சோக்கெட் தனக்குக் கிடைத்த பணத்தைக்கொண்டு புதிதாக இரும்பு வியாபாரம் ஆரம்பித்திருக்கிறான். அந்தப் பழைய வண்டியை வண்டியாகவே இப்போதும் உபயோகித்து வருகிறான்!

" என் வாழ்நாளிலேயே இதைப்போன்ற உன்னதமான காதலை நான் கண்டதே கிடையாது! அந்தக் கிழவியின் காதல் தெய்வீகக் காதல்! அழியாத காதல்!"



டாக்டர் கதை முழுவதையும் சொல்லி முடித்து அமைதியாயிருந்தார், மார்க்விஸ் தம் கண்களில் கண்ணீர் கலங்கப் பெருமூச்செறிந்தவாறேசொன்னார்.

" பெண்களுக்குத் தான் விடாப்பிடியாகக் காதலிக்கத் தெரிகிறது. இதில் சந்தேகமேயில்லை!"

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

காங்கிரஸின் அடுத்த அக்கிராசனர் யார்? சில தினங்களுக்கு முன்வரைகூட காங்கிரஸ் வட்டாரங்களில் பண்டித நேருவையே திரும்பவும் அக்கிராசனராகச் செய்து விடலாம் என்ற நம்பிக்கை இருந்து வந்தது. ஆனால், ஸ்ரீ நேருஜி தாம் மறுபடியும் அக்கிராசனராக இருக்கப் போவதில்லை என்று தெரிவித்த பிறகு, யாருக்கு இந்தக் கிரீடத்தை அளிக்கலாம் என்ற பிரச்னை எழுந்திருக்கிறது.

உண்மையில் தேர்தல் களேபரத்தை உத்தேசித்து, காங்கிரஸ் அக்கிராசனர் பதவியை மேற்கொண்டாரே ஒழிய, நேருஜிக்குத் தம் அளவு மிகுந்த பிரதமர் பாரத்தைத் தாங்கிய பிறகு மற்ற அலுவல்களுக்கு நேரமில்லை. ஆனால் நேருஜியால் மட்டுமே ஸ்தாபனத்துக்குப் புத்துயிர் கொடுக்கமுடியும் என்று நம்பும் காங்கிரஸார் மட்டும் பண்டித நேரு மறுபடியும் அக்கிராசனராவதை மிகவும் விரும்பினார்கள்; இன்னமும் அவர் மறுக்கமாட்டார் என்று நம்புகிறார்கள்.

நேருவை விட்டால் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று ஒரு பலமுள்ள சாரார் விரும்புகிறார்கள். ஆனால் மௌலானா அபுல்கலாம் ஆஜாதைத் திரும்பவும் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று நேரு விரும்புவதாகத் தெரிகிறது. இதைக் காங்கிரஸில் மிகவும் விரும்புவதாகத் தெரியவில்லை. ஆஜாத்துக்கு வேண்டிய பலம் கிடைக்காவிடில் ஸ்ரீ காட்கிலேயோ அல்லது ஸ்ரீ ஹரி கிருஷ்ண மகதாப்பையோ தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற முயற்சியும் நடக்கிறது. இவ்விருவர்களும் மாஜி மந்திரிகள். ஸ்ரீ மகதாப்புக்கு ஸ்தாபன நிர்மாண வேலையில் அனுபவம் உண்டு. ஆகவே அவருக்குப் பதவி இல்லாத குறையை நீக்க அவருக்கு அக்கிராசனர் பதவி அளிக்கப்படலாம் என்ற நம்பிக்கையும் இங்குள்ள வட்டாரங்களில் நிலவுகிறது.

தற்சமயம் மிகவும் உறுதி வாய்ந்த அக்கிராசனர் தேவை என்பதில் சந்தேகமில்லை. மாகாணப் பிரிவினை, பீஹார்–வங்காள எல்லைச் சண்டை, கிஸான் தகராறு எல்லாம் காங்கிரஸ் மேலிடத்துக்கே கடைசியில் தீர்ப்புக்கு வரும். அதில் வஞ்சனையில்லாமல் வழ வழா கொழ கொழா வென்றில்லாமல் தீர்ப்புக் கொடுக்கவல்ல அக்கிராசனர் தேவை.

* * *

“**அ**கமுடையான் அடித்தாலும் அடித்தான். கண் அழுக்குக் கரைந்தது” என்று ஆனந்தித்தாளாம் ஒரு தர்மபத்தினி. அதை ஒத்திருக்கிறது காங்கிரஸ் வட்டாரங்களில் தேசப்பிரச்னைகளைத் தீர்ப்பதில் உள்ள அக்கறை. நாம் செய்யாவிட்டால் அதைப் பற்றித் தமுக்குத் அடிப்பார்களே கம்யூனிஸ்ட்கள், வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல் அகப்பட்டது போல் ஆகிவிடுமே நிலைமை, என்று பறந்து கொண்டே காங்கிரஸ்காரர்கள் ஒவ்வொரு அலுவல்களையும் கவனிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பண்டித நேரு எவ்வளவுதான் கரடியாகக் கத்தினாலும் சாதாரணமாகக் கொஞ்சமும் அசைந்து கொடுக்காத காங்கிரஸ் தலைவர்களும் இப்பொழுது கொஞ்சம் சிரத்தையுடன் விஷயங்களைக் கவனிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்,

சமீபத்தில் காங்கிரஸ் மேலிடத்தார் டில்லியில் கூடின கூட்டத்தில் விவசாய விஷயத்தை எடுத்துக்கொண்டு கவனித்து, நில விஷயத்தில் என்னென்ன சீர்திருத்தங்கள் உடனே அவசியம் என்று ஆலோசித்தார்கள். குறிப்பாகக் காங்கிரஸ் மேலிடத்தில் ஒப்புக்கொள்ளும் விஷயம் அடுத்த தேர்தலில் மேலோங்கி நிற்கக் கூடிய ராஜீய சக்தி கிராமாந்தரங்களில் உள்ள விவசாயிகளின் லக்ஷக்கணக்கான வோட்டுகளே. இந்த வோட்டர்கள் இந்தத் தேர்தலில் யார் வலையிலும் அதிகமாக விழவில்லை—அதாவது எந்தக் கக்ஷிக்கும் அவர்களைத் தங்கள் கக்ஷியின் சார்பில் உறுதியாகச் சேர்க்க அவகாசமோ அல்லது ஸ்தாபன பலமோ இல்லை. ஆனால் அடுத்த தேர்தலுக்குள் மற்றக் கக்ஷிகளின் கவனம் இந்தக் கிஸான் வோட்டர்களைத் தங்கள் பங்கில் சேர்ப்பதிலேயே செலுத்தப்படும். இதற்காகக் கம்யூனிஸ்ட்கள் என்ன பறையடிப்பார்கள்? ‘‘நிலம் உழுபவனுக்கே சொந்தம்,’’ ‘பாட்டாளிக்குப் பகிர்ந்து கொடு’ முதலிய கோஷங்களைக் கிளப்புவார்கள். அதற்குள் நிலப் பிரச்னைகளை கூடியவரை

தீர்க்கவேண்டும் என்று அபிப்பிராயப் படுகிறார் பண்டித நேரு.

சமீபத்தில் கூடிய காங்கிரஸ் அலுவல் கமிட்டி விவசாயிகளின் முக்கிய கஷ்ட நிஷ்டூரங்கள் என்ன, அவைகளை எப்படித் தீர்க்க வேண்டும், எதற்கு முந்திய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பவைகளைக் கவனித்தது. கமிட்டியில் தனிப்பட்ட நபர்கள் மிகவும் ஜாஸ்தியாக எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம், அதாவது நிலச் சொந்தம் என்பதிற்கு என்ன வரை அறுக்க வேண்டும் என்பதைக் கவனித்துவிட்டு இறுதியில் இது சம்பந்தமான முடிவை இந்தோரில் கூடும் அகில இந்திய காங்கிரஸிற்கு விட்டு விட்டார்கள்.

காங்கிரஸ் வட்டாரங்களில் நிலவும் பரபரப்பிலிருந்து தெளிவாகும் விஷயம் என்னவென்றால் நில சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்க்க, காங்கிரஸ் சில தீர்மானங்களை மேற்கொள்ளும், அத்தீர்மானங்களும் எவ்வளவு சீக்கிரம் சட்டரூபம் எடுக்க வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் மாகாண சட்ட சபைகளில் எடுக்கும். பிரச்னைகளைத் தீர்க்கத் தீவிர தீர்மானங்களை மேற்கொள்ளுமா காங்கிரஸ், அல்லது மிதவாதத் தீர்மானங்கள் செய்யுமா என்பது காங்கிரஸில் வலது சாரியாருக்கு உள்ள பலத்தைப் பொறுத்தது. ஆனால் காற்று அடிக்கும் திக்கு இடது சாரியாக இருப்பதால், இவர்கள் அபிப்பிராயமே மேலோங்கும் என்று தோன்றுகிறது.

* * *

ஹைதராபாத்தில் தெலங்கானா இப்பொழுது உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. காரணம் அங்கு நிலச்சொந்தக்காரர்களிடமிருந்து பலாத்காரமாக நிலங்களை ஸ்வீகரித்து அடிதடியைக் கிளப்பிவிட்டுப் பலாத்கார சித்தாந்தத்தை வேரூன்றச் செய்தார்கள் கம்யூனிஸ்ட்கள், ஹைதராபாத்தில் ரஜாக்கர்கள் என்று உறுமினார்களே சில ஆயிரம் குண்டர்கள், அவர்களுக்கு நிஜாம் சர்க்கார் அளித்த ஆயுதங்கள, கம்யூனிஸ்டுகள் கையில் சிக்கியது. அவைகளை வைத்துக்கொண்டுதான் இன்னமும் படாசு செய்கிறார் தோழர் சுந்தரய்யா போன்ற கம்யூனிஸ்ட்கள்.

ஹைதராபாத்தில் உள்ள நிலைமை இப்பொழுது பெப்ஸூ மாகாணத்தில் ஏற்பட விருக்கிறது. அங்குக் காங்கிரஸ் மந்திரிசபை சரிந்து கம்யூனிஸ்ட்கள் கொண்ட ஐக்கிய முன்னணி சர்க்கார் அமைத்ததும் யாவரும் அறிந்தது. கம்யூனிஸ்ட்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு பெப்ஸூவில் மற்றொரு தெலங்கானா செய்யப் போவதாக ஆர்ப்பரிக்கிறார்கள். சமீபத்தில் பெப்ஸூவைச் சுற்றிப் பிரயாணம் செய்து திரும்பிய இரு பார்லிமெண்ட் காங்கிரஸ் அங்கத்தினர்கள் அங்கு அராஜகம் தாண்டவம் ஆடுவதாகவும், உயிர் சொத்துக்கு யாதொருவிதமான பாதுகாப்பும் இல்லையென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இதைக் குறித்தே நேரிடையாகத் தெரிந்துகொள்வதற்காகச் சென்றிருக்கிறார் இந்திய உள்நாட்டு வியவகார மந்திரி டாக்டர், கே. என். காட்ஜூ. மத்திய சர்க்கார் சரியானசமயத்தில் நடவடிக்கை எடுத்தால் ஒழிய, அங்கும் தெலங்கானா நடக்கக்கூடும் என்று டில்லி சிக்கிய வட்டாரங்களில் கருதுகிறார்கள்.

* * *

இந்தோரில் காங்கிரஸ் கூடும் பொழுது காங்கிரஸ் மேலிடத்தாருக்குப் பல தலைவலிகள் கட்டாயம் ஏற்படும். முக்கியமாக, பம்பாய் குட்டிச் சிங்கம், ஸ்ரீ எஸ். கே. படீல் மேலிடத்தார் மேல் பாய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீ படீல் சம்பந்தப்பட்டவரை அவர் பம்பாய் மாகாணத்தில் காங்கிரஸ் வெற்றிக்கு முக்கிய காரண பூதர் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். ஸ்ரீ கேர் பம்பாய் பிரதமர் பதவியை இனி ஏற்பதில்லை என்று தீர்மானித்த பிறகு, பம்பாயை நடத்துவதற்கு இருவரே உண்டு என்று தெரிந்தது. ஆனாலும், ஸ்ரீ படீலுக்கு மாகாணத்தில் சில்லறைப் பேர்வழியாக இருப்பதாவது என்ற என்ற எண்ணம் தோன்றியிருக்க வேண்டும்! ஆதலால்தான் அவர் மத்திய அரசாங்கத்துக்கு மெம்பராக முயற்சி செய்து வெற்றி பெற்றார். ஆனால் அவர் தாம் மந்திரி ஆகலாம் என்று கண்ட கனவு வீணாயிற்று. ஸ்ரீ படீலுக்கு முதலாளிகளின் நண்பர் என்ற பெயர் ஏற்கனவே உண்டு. அது தவிர அவர் பேரில் பம்பாய் பத்திரிகைகளுக்கும் காரம், என்ன தோன்றியதோ பண்டித நேரு ஸ்ரீ படீலுக்குமந்திரிப்பதவி கொடுப்பதில்லை என்று தீர்மானித்துவிட்டார். டில்லியில் கொஞ்சம் ஆட்டம் போட்டுப் பார்த்துவிட்டு ஸ்ரீ படீல் பம்பாய்க்குத் திரும்பிச் சென்று விட்டார். அறிந்த வட்டாரங்களில அவர் தம் பார்லிமெண்ட் மெம்பர் பதவியைக் கூடிய சீக்கிரம் ராஜிநாமா செய்வார் என்று நம்புகிறார்கள்.

பம்பாயில் ஸ்ரீ படீல் சென்ற சமயம் விற்பனை வரி உயர்வைக் குறித்துப் பலமான இயக்கம் உருவாகிக்கொண்டு இருந்தது. வரி உயர்வு கூடாது என்று ஸ்ரீ படீல், பிரதமர் மொரார்ஜி தேசாய்க்குப் புத்திமதி கூறினர். ஆனல் பட்ஜெட்டைச் சமம் செய்ய அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ தேசாய் ஸ்ரீ படீலின் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. பம்பாய் காங்கிரஸ் தலைவர் என்ற ஹோதாவில் தம் வார்த்தையை மதிக்கவில்லை என்ற ஆத்திரம் ஸ்ரீ படீலுக்கு ஏற்பட்டு,பம்பாய் சர்க்காரைத் தாக்க ஆரம்பித்திருக்கிறர். சர்க்காருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்ல அபிப்பிராயம் இல்லை. அதனல் காங்கிரஸுக்குப் பெயர் கெட்டுப் போகிறது என்று படீல் குறை கூறிப் பகிரங்கமாக மாகாண சர்க்கார்களையும் மத்திய சர்க்காரையும் கண்டிக்க ஆரம்பித்திருக்கிறர். தேர்தலை ஜயிக்கப் பெரிதும் பாடுபட்டு வெற்றியடைந்த காங்கிரஸுக்குச் சர்க்கார்களைக் கண்காணிக்கும் அதிகாரம் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ படீலின் கக்ஷி. சாதாரணமாகப் பண்டித நேரு இந்தச் சவாலுக்கு அசையமாட்டார். ஆனல் காங்கிரஸ் தேர்தலை ஜயித்துத் தந்தவர் என்பதற்காக, ஸ்ரீ படீல் விரும்பும் மாகாணப் பார்லிமெண்டரி போர்டு சிருஷ்டி செய்ய ஒப்புக்கொள்ளலாம் என்று காங்கிரஸ் வட்டாரங்களில் நம்புகிறர்கள். இது தவிர, ஸ்தாபன சம்பந்தமான மாறுதல்கள் பல கூட இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

* * *

சென்ற மாதத்தில் நடைபெற்ற ஸோஷலிஸ்ட் — கிஸான் மஜ்தூர் பிரஜா கக்ஷிகள் ஐக்கியம் மிகவும் முக்கியமான சம்பவமாகும். காங்கிரஸுக்கு அடுத்தபடியாக அதிகப்படி ஓட்டுக்களைப் பெற்ற கக்ஷி ஸோஷலிஸ்ட் கக்ஷி. அப்படி இருந்தும் தேர்தலில் ஓட்டுகளைப் பிரிக்கக் கையாண்ட முறையாலும் கே. எம். பி. கக்ஷி வேறு வந்து மோதியபடியாலும் ஸோஷலிஸ்டுகளுக்கு அவர்களுக்குக் கிடைத்தக் ஓட்டுகள் விகிதாசாரத்துக்கு வேண்டிய ஸ்தானங்கள் கிடைக்கவில்லை. ஆகவே முற்போக்குள்ள கக்ஷிகள் நம் நாட்டில் வேர்கொண்டு நம் தேசத்தை உய்விக்க எண்ணும் கக்ஷிகள் ஒன்று சேர்ந்தன என்பதில் யாவரும் சந்தோஷம் அடையவேண்டும். கே. எம். பி. கக்ஷித்தலைவர்கள் ஸ்ரீகிருபளானி முதல் கடைசித் தலைவர்கள் வரை தேசத்தில் தலைசிறந்தவர்கள், காங்கிரஸ் பிரயோஜனம் இல்லை என்று வெளியே வந்தவர்கள். ஆகவே அவர்கள் இடது சாரிகளோடு சேர்ந்து உழைப்பதால் இடதுசாரிக்கக்ஷியான ஸோஷலிஸ்ட் கக்ஷிக்குப் பலம் பெருகுவதுடன், ஸோஷலிஸத்துறையில் மிகத்தேவையாக இருந்த தலைமை கிடைக்கும்.

ஸ்ரீ கிருபளானி தம் கக்ஷியை ஆரம்பித்த பொழுதே விஷயம் தெரிந்தவர்கள் "இவ்வளவு கக்ஷிகளிடையே இன்னும் ஒரு கக்ஷியா? இவர்கள் ஸோஷலிஸ்ட்களுடன் சேரக் கூடாதா" என்று தலையிலடித்துக்கொண்டார்கள். ஆனல் குடும்பத்தை விட்டுப் பிரிந்து செல்லும் பிள்ளை ஆத்திரத்தில் புதிய வீடு கட்டத் தானே கட்டுகிறன். அதேபோலத்தான் ஸ்ரீகிருபளானியும் தம் புதுக்கக்ஷியைக் கூட்டினர். ஆனல் தேர்தலுக்குச் செலவு என்று வந்ததும் தம் வெறும் கை முழம் போடாது என்ற ஞானேதயம் அவருக்கு உண்டாயிற்று. கே. எம். பி. தனியாக நின்று எதையும் சாதிக்க முடியாது என்று தெரிந்தே அவர் ஸோஷலிஸ்ட்களுடன் ஐக்கியமாக இணங்கினர்.

சில முந்திரிக் கொட்டைகள் "ஐயையோ, இது என்ன கூத்து? சென்னையில் கே. எம். பி கக்ஷி செங்கொடித் தோழர்களுடன் குலாவுகிறதோ, அது எப்படி மாஸ்கோ பிராண்டு ஸோஷலிஸத்தை எதிர்க்கும், இந்திய பிராண்டு ஸோஷலிஸ்ட்களுடன் இணங்க முடியும்" என்று பிரலாபிக்கிறர்கள். சரித்திர வேகங்கள் என்பதை இவர்கள் அறியார்கள் போலும். தேர்தலில் காங்கிரஸை மூர்த்தண்யமாக எதிர்த்தவர்கள் கே.எம்.பி. கக்ஷியார். அந்தச் சூட்டில் அவர்கள் சைத்தானுடன்கூடச் சேர்ந்து சர்க்கார் அமைக்கத் தயாராய் இருந்தார்கள். குறிப்பாக, ஆந்திர கேசரி பிரகாசம்காரு "கஞ்சி வரதப்பா" என்று எங்கே கூவப்படும் என்று காத்திருந்தார். ஆகவே, தற்பொழுதுள்ள மாறிய நிலையைத் திரும்பப் பரிசீலனை செய்வார்கள், கே. எம். பி. காரர்கள் என்றே நம்புகிறேன். ஆற்றில் பாதி, சேற்றில் பாதி என்பது கம்யூனிஸ்ட்கள் சித்தாந்தமே ஒழிய ஸோஷலிஸ்ட்கள் சம்பந்தப்பட்ட வரை அவர்கள் சில முக்கியக் கொள்கைகளை இன்னும் கடைப்பிடிக்கிறர்கள். முடிவு நல்லதாக இருக்கும் வரை ஆதாரம் நல்லதா கெட்டதா என்று ஏன் கவலைப்படவேண்டும் என்பவர்கள் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் அல்ல அவர்கள்.

* * *

சென்னையில் சென்ற வாரம் பிரகடனமான தஞ்சை ஜில்லா குடிகள் பாதுகாப்பு

அவசரச் சட்டம் இங்குப் பொதுஜனப் பத்திரிகைகள் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. அவசரச் சட்டம் வரும்வரை, தஞ்சை ஜில்லாவில் கிஸான் தகராறுகள் எவ்வளவு மோசமான நிலைமையை அடைந்திருக்கின்றன என்று இங்குத் தெரியாது. ஆகவே, அவசரச் சட்டம் ஏன் உருவாகிறது என்று சர்க்கார் கொடுத்திருக்கும் விளக்கத்துக்கு இங்கு வேண்டியமட்டும் அனுதாபம் கிடைத்திருக்கிறது.

அவசரச் சட்டம் இல்லாவிடில் இந்த வருஷத்துக் கார் வெள்ளாமை கிடையாது என்ற விஷயம், இந்திய சர்க்கார் வட்டாரங்களில் விசேஷ கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. இவர்கள் கருத்து என்னவென்றால், அவசரச் சட்டம் அமுல் செய்தது சரிதான், ஆனால் விவசாயம் சம்பந்தப்பட்டவரை இந்தியாவில் பல நூற்றுக்கணக்கான சம்பிரதாயங்கள் இருக்கின்றன. இந்தத் துறையில் பழக்க வழக்கம் தாலூகாவுக்குத் தாலூகா முற்றும் மாறாக இருக்கிறது. ஆதலால் கிஸான்—மிராசுதார் தொடர்பு சம்பந்தமாக ஸ்திரமான சட்டம் இயற்றும் பொழுது வாரம் குத்தகை முதலியவைகளில் அந்தந்தப் பிராந்தியத்தில் உள்ள பழக்கத்தை ஒட்டி, சட்டத்தின்கீழ் விசேஷ சட்டங்கள் இயற்ற வேண்டும்.

மேலும், காவேரிப் பாசனத்தில் தலைப்பில் உள்ள இடங்களில் விளைவு அதிகம், வால் பக்கம் மாசூல் குறை. இந்த மூலக் குறிப்பை உணர்ந்து பண்ணையார்கள் கூலி இடத்திற்கு இடம் மாறும்படி செய்ய வேண்டும். கடைசியாக, கம்யூனிஸ்ட் சங்கங்களை வேலையில்லாமல் திண்டாடும்படி காங்கிரஸ் ஊழியர்கள் செய்ய வேண்டும். அவசரச் சட்டத்தின் வாசகம் எல்லாத் தவறுகளும் மிராசுதார் பேரில் இருப்பதாகத் தோன்றுகிறது. இது தப்பான மார்க்கம். உண்மையில் மிராசுதார்கள், குறிப்பாக, கீழ்ப்பாகத்தில் உள்ளவர்கள், காலப் போக்கை அனுசரித்து ஆட்கள் கூலி, விளைச்சலில் பங்கு முதலியவைகளில் எவ்வளவு விட்டுக்கொடுக்க வேண்டுமோ அவ்வளவு விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இதைக் குறிப்பாகக் கொண்டு, கிஸான்களுக்கு நியாய அநியாயத்தை எடுத்துரைக்கக் காங்கிரஸ் ஊழியர்கள்—தலைவர்கள் பாடுபட வேண்டும் என்று இங்குக் கருதப்படுகிறது.

அவசரச் சட்டம் உருவாகி ஒரு வாரத்துக்குள் ஹைதராபாத்திலும் அதே போன்ற சட்டத்தை அமல் செய்திருக்கிறார்கள். ஆகவே வைக்கோல் போரில் நெருப்பு என்றவுடன், அது எப்படி ஏற்பட்டது என்று சர்ச்சைசெய்யாமல், அதை அணைக்க ஒரு வாளித் தண்ணீரைத் தூக்கிக் கொட்டும் முயற்சியை ஒத்தது அவசரச் சட்டம். நடைமுதலில் உள்ள கஷ்ட நிஷ்டூரங்களை நீக்க முயற்சி செய்வார் ராஜாஜி என்று யாவரும் நம்புகிறார்கள்.

* * *

வடக்கே, சங்கீதத்துக்குக் கொஞ்சம் நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று சொல்லவேண்டும். ஏனென்றால் செய்தி—ஒலிபரப்பு மந்திரி, டாக்டர் கேஸ்கர் தமக்கு முந்தி இருந்தவர்களைப்போல இல்லாமல் அசல் அபிவிருத்திசெய்ய முன்வந்திருக்கிறார்.

வடக்கே சங்கீதத்துக்குப் பொதுஜன பலம் கிடையாது. அதாவது பாமரர்கள் ரஸிக்கும்படி சங்கீதத்தை அபிவிருத்தி செய்யாமல், அதை மகாராஜாக்களும் ஜமீந்தார்களுமே ரஸிக்கும்படி செய்துவிட்டார்கள். பலன், ஜனங்கள் மட்டமான சினிமாப் பாட்டுகளைத்தான் சங்கீதம் என்று மதிக்கிறார்கள். இதை மாற்றவே, டாக்டர் கேஸ்கர் ரேடியோவில் சினிமாப் பாட்டுகளைக் குறைக்கவும் அகில இந்தியாவில் உள்ள, குறிப்பாகத் தென்னாட்டில் உள்ள, சங்கீதத்தை ஒவ்வொரு வாரமும் தேசியக் கச்சேரிகள் மூலம் ஜனங்களுக்குச் சாஸ்திரீய சங்கீதப் பிரியம் ஏற்படத் திட்டமிட்டுக் கச்சேரிகள் நடந்து வருகின்றன.

டாக்டர் கேஸ்கருக்கு உள்ள தாராள மனப்பான்மை கீழே உள்ள சிப்பந்திகளுக்குக் கிடையாது. கர்நாடக சங்கீதம் வடக்கே பேர் வாங்கி, புகழ் அடைய வேண்டியதில்லை. ஆனால் முதன்முதலில் வட இந்தியர்களுக்கு, "இதுதான் எங்கள் உயர்வான சங்கீதம்" என்று பெருமைப்பட முன்னணி வித்வான்களைக் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தினால் அது ரேடியோ அதிகாரிகளுக்கு ஆத்திரத்தை உண்டாக்குகிறது. நிலைய வித்வான்களில் வெகு சிலர் உண்மை யோக்யதை உள்ளவர்கள். ஆனால், அவர்கள் முன்னணிப் பிரபலஸ்தர்களுக்குச் சரிசமானம் என்பது மயிலுக்கு அருகே வான்கோழி ஆடப்புகுவதை ஒத்தது.

டாக்டர் கேஸ்கர் உண்மையில் ரேடியோ ஒரு சேவை ஸ்தாபனமாவதை விரும்பினால் தமிழ் நாட்டுத் தலை சிறந்த வித்வான்களை அவர்களுக்குகந்த பக்க வாத்தியங்களுடன் ஏற்பாடு செய்யவேண்டும். அரியக்குடியையும், மகாராஜபுரத்தையும் இங்கு அழைத்து நிலைய வித்வான்களைப் பக்கரம்பம் அறுக்கச் சொன்னால் வட இந்தியர்களுக்கு ரம்ப அறுப்புக் காதில் பாண்டு வாத்திய இனிமையுடன் ஒலிக்குமே தவிர, உள்ளம் புளகாங்கிதம் அடையும் உணர்ச்சி உண்டாக்காது.

மறைந்த மாயம்

ஏ. எஸ். ராகவன்

வருஷங்கள் பல ஓடிவிட்டன. முன்பு ஒவ்வொருவர் நாவிலும் அடிபட்ட காட்டூர் ஜமீனின் அற்புத வைரத்தின் திடீர்க் களவு இப்போது அநேகமாக மறக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந்தக் களவை மறைத்திருந்த சில மர்மங்களை இப்போது வெளிப் படுத்தலாம் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்வதால் எவருக்கும் கெடுதலில்லை. ஏனெனில் அந்த மர்மங்களை மறைத்து வைத்தவரும், உண்மையாகவே அதில் சம்பந்தப்பட்டவருமான ஒரு நபர் இப்போது இறந்து இரண்டு வருஷங்களாகி விட்டன. அவருக்கு உறவினர் கூட யாரும் இல்லை.

காட்டூர் ஜமீனைச் சார்ந்த பிரசித்தி பெற்ற அந்த வைரக்கல் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டது. அதிலிருந்து வீசிய ஒளி எவர் கண்ணையும் எளிதில் கவர்ந்து விடும். அத்தகைய கற்கள் மிகச் சொற்பம் தான். இந்த அற்புதக் கல் வட இந்தியாவில் போபாலைச் சேர்ந்த ஒரு வர்த்தக ஏஜெண்டுக்கு அதிர்ஷ்டவசமாகக் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு அந்த ஏஜெண்ட் அவசர, அவசரமாகச் சென்னைக்கு வந்தார். அங்கு அவருடைய உறவினரான கியால் சந்த் என்பவர் பிரபல வைர வியாபாரியாக இருந்தார். அவரிடம் தாம் கண்டெடுத்த புதையலைக் காட்டினார். கயால் சந்த் கெட்டிக்காரர். அவருடைய அனுபவமடைந்த கண்கள் கல்லை நன்றாகக் கணக்கிட்டு விட்டன. உடனே அதை விலை பேசி வாங்கி விட்டார். கமிஷனைத் தவிர ரொக்க விலையைக் கண்டிராத ஏஜெண்டு திருப்தியுடன் புறப்பட்டு விட்டார்.

இதன்பிறகு காட்டூர் ஜமீன்தார் அந்தக்கல்லைப் பார்த்து விட்டார். அவ்வளவு தான். அதை வாங்காமல் தம்மால் வாழ முடியாது என்று தீர்மானித்து, "என்ன கயால்சந்த், எவ்வளவு வேணும் இதற்கு?......... சீக்கிரம் சொல்லும்," என்று கேட்டார்.

கயால் சந்த் சிரித்தபடியே, "தாங்கள் தருவதை வாங்கிக் கொள்கிறேன். ஸாகிப்...இதிலே நமக்குள்ளே பேரமே வேணும்" என்றார்.

ஜமீன்தார், "பத்தாயிரம்" என்றார். கயால் சந்த் ஒன்றும் எதிர்த்துப் பேசவில்லை. வாஸ்தவமாகவே அந்த விலையை அவர் எதிர்பார்க்கவில்லை தான். ஜமீன்தார் வைரத்தைத் தம் பங்களாவில் வைத்திருந்தார். நண்பர்களும், பிரமுகர்களும் பார்த்து வியந்தவண்ண மிருந்தனர். சில நாட்கள் கழித்து அந்தக் கல்லைக் கயால் சந்திடம் கொடுத்து நன்றாகச் சுத்தம் செய்த பிறகு ஜமீனுக்கு அனுப்பிவிடவேண்டுமென்று தாம் விரும்புவதாகக் கூறிச் சென்றார். கயால் சந்த் நகையை வாங்கிக்கொண்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு கயால் சந்தின் கடை உடைக்கப்பட்டு வைரம் களவாடப் பட்டது.

இதுதான் வைரம் தொலைந்த கதை. திருட்டு நடந்தபோது சூழ்நிலைகள் வருமாறு: முதல் நாள் இரவில் எட்டு மணிக்குக் கடைசியாகக் கடையை மூடிக்கொண்டு கயால் சந்த் தான் வீட்டுக்குப் போனவர். அவருக்கு ஒன்றரை மணி நேரம் முன்னதாக (அதாவது ஆறரை மணிக்கு) அவருடைய உதவியாளர் மாதவன் போய்விட்டார். கயால் சந்த் போனபொழுது எல்லாம் ஒழுங்காகத்தான் இருந்தன. வழக்கம் போல எதிரே 'பீட்' இருந்த போலீஸ்காரன் அவருக்கு ஸலாம் செய்தான். இரவு பூராவும் வேறு எதுவும் குறிப்பாகப் போலீஸ்காரன் கண்ணில் பட்டதாகத் தெரியவில்லை.

காலையில் கடைக்கு ஒன்பது மணிக்கு வந்த மாதவன் களவு நடந்துவிட்டதைக் கண்டார். வாசற்புறக்கதவு சாத்தியபடியே இருந்தது. அதன் ஒரு சாவி மாதவனிடம் எப்போதும் இருக்கும். ஆனால் கடைக்குப் பின்புறமிருந்த கயால் சந்தின் அறையில் அவருடைய மேஜை உடைக்கப்பட்டுக் கிடந்தது. மேஜைக்குள்ளிருந்தவை தாறுமாறாகக் கிடந்தன. அறையிலிருந்து மாடிக்குச் செல்லும் கதவு உந்தித் திறக்கப்பட்டிருப்பது தெரிந்தது. மாடிக்குச் சென்றதில் மற்றொரு கதவும் திறந்து கிடந்தது. இந்தக் கதவின் உட்புறப் பூட்டு 'ஸ்குரூ' வால் கழற்றப்பட்டிருந்தது. அறையின் மேல் தளத்தில் ஒரு கதவு உண்டு. அதன் பூட்டு மேல் புறமிருந்து இரும்புக் கடப்பாரையால் நெம்பப் பட்டதைப் போல உடைந்து காணப்பட்டது.

ஆகவே திருடன் அல்லது திருடர்கள் இந்த வழியாகத்தான் வந்திருக்கக் கூடும். இவ்வழியாக

நுழைந்து இரண்டு கதவுகளையும் பிளந்து கொண்டு மேஜையைச் சூறையாடி யிருக்கிறார்கள். எவை எவை திருட்டுப் போயிருக்கக் கூடும் என்று மாதவனால் அப்போது திட்டமாகக் கூறமுடியவில்லை. வைரத்தைச் சுத்தம் செய்வதைத் தம் சொந்தப் பொறுப்பில் கயால் சந்த் ஏற்றுக் கொண்டிருந்தார்.

பத்து மணிக்குக் கயால் சந்த் வந்தார். வைரம் தொலைந்ததைக் கேட்டதும் அவர் கலங்கி விட்டார். அவரால் சரிவரப் பேசக்கூட முடியவில்லை. வார்த்தைகள் புரண்டன. முதல் இரவில் தாமே கல்லைச் சுத்தம் செய்து கொண்டிருந்ததாகவும், வேலை முடிந்த பிறகு அதை எடுத்துக் கொண்டு வாசற்புறமிருந்த இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டுவதற்குச் சோம்பேறிதனப்பட்டு அங்கேயே வைத்து விட்டதாகவும் கூறினார். தம் அஜாக்கிரதைக்காக அவர் தம்மையே நொந்து கொண்டார்.

போலீஸுக்குத் தகவல் பறந்தது. மாலை செய்தித் தாள்களில் கொட்டை எழுத்துகளில் செய்தி வெளியாயிற்று. விஷயம் தெரியாதவர்கள்கூட இதைப்பற்றிப் பேசலானார்கள்.

அன்று மாலைதான் காட்டூர் ஜமீன்தார் குஞ்சிதபாதத்தைப் பார்த்தார். குஞ்சிதபாதம் சிறந்த துப்பறியும் நிபுணர். ஜமீன்தார் படபடப்புடன் ஆரம்பித்தார்.

"நான் வந்த காரியம் உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். மிஸ்டர் குஞ்சிதபாதம்... பேப்பர்களில் பார்த்திருப்பீர்கள்......... விஷயம் இதுதான். அற்புதமான வைரம் களவாடப் பட்டுவிட்டது........... எப்படியாகிலும் அது எனக்குக் கட்டாயம் வேண்டும். போலீஸார் விடாமல் தேடுகிறார்கள். ஆனால் அவர்களுக்குத் திருடன் மீதுதான் எப்போதும் கண்.........திருட்டுப் போன பொருளைப்பற்றிக் கவலையில்லை. எனக்கு அந்த வைரம் தான் பெரிது. திருடன் யாராயிருந்தாலும் பரவாயில்லை." என்றார் அவர்.

"ஆமாம், இது பெருத்த நஷ்டம் தான் உங்களுக்கு. ரூபாய் பத்தாயிரம் இல்லையா!"

"பணத்திற்காக அல்ல, ஸார்......... அது ஒரு பொருட்டல்ல...... மேலும் கயால் சந்தே இது பற்றி மிக வருந்தி எனக்கு ஒரு கடிதம் எழுதி, அத்துடன் பத்தாயிரத்துக்கு ஒரு செக்கும் அனுப்பியிருக்கிறார். பாவம்! தம் அஜாக்கிரதைக்காக அவர் மிக வருந்துகிறார்."

"அப்படி என்றால் பணத்தைவிட உங்களுக்கு அந்தக் கல்லே தேவை என்று நான் எடுத்துக் கொள்ளலாமா?"

"நிச்சயமாக... அது என் கையை விட்டுப் போவதை நான் விரும்பவே இல்லை. இது விஷயமாக இன்னொரு ஆயிரம் செலவழிந்தாலும் நான் கவலைப்படமாட்டேன். கயால் சந்தின் பேரில் என்ன பிசகு?... அவர் அனுப்பிய பணத்தைக் கூட நான் திருப்பித் தந்துவிடுகிறேன்......ஆனால் இப்போது அது கூடாது...... சுரத்துக் குறைந்து போகும்."

"ஆமாம் ஜமீன்தார்வாள், இந்தக் கேஸை நானே தனியாகக் கவனிக்கலாம் அல்லவா?"

"தாராளமாகக் கவனியுங்களேன்... இதிலே வேடிக்கை என்னவென்றால் இதைத் திருடுவதால் எவருக்கும் ஒரு பயனுமில்லை. இந்த வைரம் பிரசித்தி பெற்றது. இதை விற்க முடியாது. எந்த வியாபாரியும் துணிந்து வாங்கமாட்டான்... வாழ்நாள் பூராவும் ரகசியமாக அழகு பார்த்து விட்டுத்தான் இறந்த பிறகு உலகம் அறிய இதைப் பிறர் அறியட்டும் என்று விரும்பும் அற்புதக் கலை ரஸிகன் எவனாவது இருந்தால் அதிசயம்தான்...........இல்லையென்றால், யாரோ ஒரு சாமானியத் திருடன் இதன் விலையறியாது திருடியிருப்பான் என்று தோன்றுகிறது."

"அது சாத்தியமில்லை," என்றார் குஞ்சிதபாதம் தீர்க்கமாக. "ஒரு சாதாரணத் திருடன் விஷயமறியாமல் நேராக மேஜைக்குச் சென்று இதை மட்டும் திருடுவானா என்ன?"

"உண்மை...........போலீஸ் என்ன நினைக்கிறதென்றால், இந்தக் களவு பழக்கமான பக்காத் திருடர்களால்தான் நடந்திருக்கிறது என்று."

"அதுசரி........... கயால் சந்த் சந்தேகிக்கும் இரண்டு நபர்களைப் பற்றி ஏதாவது தகவல்?"

"தெரியும்...... ஆனால் அவர்களைக் கயால் சந்த் சந்தேகிப்பதாகச் சொல்ல முடியாது. ஒருவேளை இருக்கலாம் என்று நான் நினைத்தேன்......இதில் ஒருவன் நகையை விற்ற ஏஜெண்ட்...அவன் ஒரு நாடோடி........அவனுக்கு வைரத்துக்காக எவ்வளவு கொடுத்தார் என்பதைச் சொல்லமாட்டேன் என்கிறார். சொன்னால் நான் கொடுத்த தொகைக்காக வருந்துவேன் என்று நினைக்கிறார் போலிருக்கிறது!........அந்த ஏஜெண்ட் இன்று அவரை பார்ப்பதாகச் சொல்லிவிட்டுப் போனானாம்........ தனக்கு இன்னும் பணம் வேண்டும் என்று கேட்டானாம்........ அவர் தருவதாகச் சொன்னாராம்...... ஆனால் அவன் ஏனோ வரவேயில்லை..."

"சரி........அடுத்த மனிதரைப் பற்றி?"

"அதுவா?...... அவர் ஒரு கவுரவமான மனிதர். கலா ரஸிகர்.........சங்கரலிங்கம் பிள்ளையை உங்களுக்குக்கூடத் தெரிந்திருக்குமே? அவர் கூட இந்த வைரத்தை வாங்க முயன்றதாகக் கயால் சந்த் சொன்னார். அதைத் தமக்குத் தராததில் அவருக்குக் கோபம் கூடவாம்...நான் அதிக விலை கொடுத்து "மார்க்கெட்டையே" கெடுப்பதாக அவர் கத்தினாராம்......ஆனால் அவர் நல்ல மனிதர் மிஸ்டர் குஞ்சிதபாதம். அவரால் திருட்டைப் போன்ற ஒரு காரியம் செய்யவே முடியாது. இது உண்மை."

"இந்தச் சங்கரலிங்கம் பிள்ளையின் வீடு அருகில் தானு?"

"ஆமாம்... அவர்கள் வீட்டு மாடியிலிருந்து இந்த மாடிக்கு நடந்து வரலாம். அவர் வீட்டு ஜன்னலிலிருந்து பார்த்தால் கயால்சந்தின் அறை நன்ருகத் தெரியும்."

"சரி... கயால்சந்தின் உதவியாளர் மாதவன் எப்படி?"

"அவர், நான் கேள்விப்பட்டவரை, நல்ல அடக்கமான வேலைக்காரர்தான். நம்பகமானவர். வருஷக்கணக்காக அவரிடம் இருக்கிருர்... எத்தனையோ விலையுயர்ந்த சாமான்கள் கிடக்கும் இடம் அது. மேலும் அவர் திருடவேண்டுமானுல் பூட்டை உடைக்க வேண்டாமே?... அவர் கையிலேதான் கடைச்சாவி உண்டே!"

"ஆமாம், ஆமாம்... அப்படியானுல் நமக்குச் சம்பந்தப்பட்டவர்கள் இவர்கள்தான். கயால் சந்த், வைர வியாபாரி. மாதவன், அவருடைய உதவியாள். அந்த ஏஜண்ட். சங்கரலிங்கம் பிள்ளை, அந்தக் கல்லை விலை பேசியவர்... இல்லையா?"

"எனக்குத் தெரிந்தவரை இவர்கள்தான்."

"அப்படியானுல் இவர்களை வரிசைக் கிரமமாகப் பார்ப்போம். கயால்சந்தைப்பற்றி நாம் சந்தேகப்படவே இடமில்லை... ஏனெனில் அவர் கௌரவமான வியாபாரி. அவருடைய நாணயம் பெயர்போனது... மேலும் நகை தொலைந்ததும் அவர் பணத்தை அனுப்பிவிட்டார். அவருடைய உதவியாளர் மாதவனே நல்ல மனிதர்... அவர் அதைத் திருடி விற்பதிலுள்ள சிரமத்தைக் கட்டாயம் உணர்ந்திருப்பார்... கல்லை விற்ற ஏஜெண்ட் சம்சயமான மனிதர்தான். இன்று பணம் வாங்க அவர் வராதது சந்தேகத்துக்கிடமாகிறது. கடைசியாகச் சங்கரலிங்கம் பிள்ளை இந்த ஊரிலேயே மிகக் கௌரவமான குடும்பத்தில் பிறந்த அறிவாளி. அவர் வைரத்தை வாங்க உங்களுக்குமுன் மிகவும் முயன்றிருக்கிருர்...... மேலும் தம் அறையிலிருந்தபடியே கயால் சந்தைக் கவனிக்க அவரால் முடியும்... இவர்களைக் கவனித்த பிறகு, எதுவும் புலனுகாவிட்டால், அப்புறம் பார்ப்போம்." என்று தம் ஆராய்ச்சியை முடித்தார் குஞ்சிதபாதம்.

கயால் சந்தின் வியாபார ஸ்தலம் அன்று பூராவும் பொதுஜனங்கள் பலரின் ஆவலான பார்வையில் விழுந்து கொண்டிருந்தது. அழகான இடம் அது. தெருவின் கடைசிக் கட்டிடம். வெளிப்புறம் கண்ணுடி ஜன்னல்கள் ரம்யமாகக் காணப்பட்டன. உள்ளே கயால் சந்த் தடித்த போலீஸ் ஆபீஸர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்தார். மாதவன் தம் புத்தக அனுபவத்தைக் கொண்டு ஏதாவது கண்டுபிடிக்க முடியுமோ என்று தரையை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

குஞ்சிதபாதமும், ஜமீன்தாரும் நுழைந்தனர். கயால் சந்த் வேகமாக ஓடி வந்து, "ஜமீன்தார்வாள், நீங்கள் நேற்று விட்டுப்போன தோல் பை கிடைத்துவிட்டது...... அது மூன்ருவது வீட்டு மாடியில் கிடந்தது." என்ருர்.

"காலியாகத்தானு?"

"ஆமாம். திருடனுல் அது தூக்கி எறியப்பட்டிருக்கிற தென்னவோ வாஸ்தவம். அதுவும் ஒரு தடயம் தானே!"

"வாஸ்தவம் கயால் சந்த், இவர் தான் துப்பறியும் நிபுணர் குஞ்சிதபாதம், என்பொருட்டுப் பிரயாசை எடுக்க முனைந்திருக்கிருர்." என்று அறிமுகப்படுத்தினுர் ஜமீன்தார்.

"அப்படியா? சந்தோஷம்......நானே அவரைக் கூப்பிடலாம் என்று நினைத்திருந்தேன்... இந்தப் போலீஸ் மீது எனக்கு நம்பிக்கை குறைவுதான்" என்ருர் கயால் சந்த்.

குஞ்சிதபாதம் வணக்கமாகத் தலையசைத்து விட்டு, "நான் பூட்டு உடைக்கப்பட்ட இடங்களைப் பார்க்கலாமா?" என்று கேட்டார்.

"தாராளமாய்ப் பாருங்கள்... அது அப்படியே இருக்கிறது..." என்ருர் கயால் சந்த்.

"இங்கு யாரும் குடி இல்லையே?" என்று கேட்டார் குஞ்சிதபாதம்.

"இல்லை. அவர்களால் நமக்குத் தொல்லைதான். நம்ம 'பிஸினஸு'க்கும் அதுக்கும் ஒத்து வரல்லே..."

"சரி. உடைந்த மேஜையை நான் பார்க்கலாமா?" என்று கேட்டபடி குஞ்சிதபாதம் நடந்தார். அவருக்கு முன் கயால் சந்த் வழி காட்டியபடி சென்ருர். மேஜை அநேகமாக ஒரு சாய்வு மேஜை போலவே இருந்தது. மேஜையின் மேல்புறம் திறந்து மூடக் கூடியதாக இருந்தது. அதன் பூட்டை அழுத்தமான இரும்பால் கீழ்ப்புறமாகப் பெயர்த்திருப்பது தெரிந்தது. குஞ்சிதபாதம் மேஜையை நன்ருக ஆராய்ந்து பார்த்தார். பிறகு ஜன்னல் மூலம் வெளியே பார்த்தார்.

"வெளியே நிறைய ஜன்னல்கள் அதோ தெரிகின்றனவே, அவற்றின் மூலம் யாராவது உங்களைக் கவனிக்கலாம் அல்லவா? அங்கு வசிப்பவர் எவரையாவது உங்களுக்குப் பழக்க முண்டா?" என்று கேட்டார் குஞ்சிதபாதம்.

"அவ்வளவாகத் தெரியாது...... ஆனுல் யாராவது ஒரு அந்நியர் அங்கிருந்து நம்மைக் கவனிக்க முடியும்."

"ஆனுல் இடது புறமிருக்கும் ஜன்னல்கள் தான் அறைக்கு நேர் எதிரில் உள்ளன. அங்கு வசிப்பவர்கள்......"

கயால் சந்த் கொஞ்சம் தடுமாறினர். பிறகு சமாளித்துக் கொண்டபடியே, "அங்கு சங்கரலிங்கம் பிள்ளை வசிக்கிறர். அந்தக் குடும்பத்தின் வேலை பூரா நம்முடையது தான். கௌரவமான மனிதர்...... அவரைச் சந்தேகிப்பது முட்டாள் தனம் என்று எனக்குப் படுகிறது." என்ருர்.

"அப்படிச் சொல்லக் கூடாது, கயால் சந்த். இந்த மாதிரிக் கேஸில் எவரையுமே நாம் தள்ளி விடக் கூடாது."

இப்படிக் கூறிவிட்டு, குஞ்சிதபாதம் அறைக் கதவைப் பார்வையிட்டார். பிறகு மாடிக்கு நடந்தார். மாடியறைக் கதவு (ஸ்குரூவால் திறக்கப் பட்டது,) அடுத்து அவர் பார்வைக்கு இலக்கா யிற்று. கொஞ்ச நேரம் தான், அறையின் மூலையில் ஒரு நாற்காலி – மேல் தளக் கதவிற்கு நேராகப் போடப்பட்டிருந்தது. "இந்த நாற்காலி இங்கே தான் இருக்கிறதா?" என்று கேட்டார் அவர் கயால் சந்தை நோக்கி,

"ஆமாம்... திருடன் திரும்ப ஏறுவதற்குச் சௌகரியமாக நாற்காலியைப் போட்டுக்கொண்டிருக்கிருன் போலிருக்கிறது..." என்ருர் கயால் சந்த்.

குஞ்சிதபாதம் மாடித் தளத்தை அடைந்து அங்கிருந்து உடைக்கப்பட்ட கதவைப் பார்த்தார். மேஜையைப் போலவே இதையும் இரும்புக் கம்பியால் தான் திறந்திருக்கிருர்கள்.

தம் சோதனைகளை முடித்துக் கொண்டு குஞ்சிதபாதம் இறங்கியதும் ஜமீன்தார் ஆவலுடன் "என்ன ? ஏதாவது புலப்படுகிறதா?" என்று கேட்டார்.

புன்முறுவலுடன் தலையை ஆட்டிவிட்டு, குஞ்சிதபாதம் அறையைச் சுற்றிக் கண்ணேட்டம் விட்டார். ஒரு பழங்குல்லாய் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்தது. அதை அதிசயத்துடன் பார்த்துவிட்டு அவர் கயால் சந்தை நோக்கி, இந்தக் குல்லாய் ரொம்ப நாளாய் இங்கேயே இருக்கிறதோ?" என்று கேட்டார்.

" ஆமாம் – குறைந்தது ஆறு மாசமாவது இருக்கும் அதைத் தொட்டு, " என்ருர் அவர்.

" சரி. இருக்கட்டும்.... எதிர்ப்புறமிருக்கும் அறையை நான் பார்க்கலாமா? "

" நீங்கள் பிரியப்பட்டால் பாருங்களேன். ஆனல் அங்கே அவர்கள் நுழையவில்லை...பழைய சாமான்கள் அங்கே கிடக்கும்," என்று கூறிய படியே கதவைத் திறந்தார் கயால் சந்த்.

உள்ளே பல மரப் பெட்டிகள் கிடந்தன. பாதி உடைக்கப்பட்டு அவை அலங்கோலமாக இருந்தன. சாமான்களை அனுப்ப இவற்றை உபயோகித்திருப்பதாகத் தெரிந்தது. இவற்றிடையே ஒரு புதுப் பெட்டி கிடந்தது. மூலையில் இரும்புப் பெட்டி இருந்தது. "ஒரு சிறு கொரடா அல்லது கடப்பாரை இருக்குமா இங்கே?" என்று கேட்டார் குஞ்சிதபாதம்.

கயால் சந்த் தலையை ஆட்டி, "இங்கே ஏதும் இல்லையே," என்ருர்.

"சரி பரவாயில்லை...... இன்ெரு முறை வரும் போது பார்த்தால் போயிற்று...... மேலும் அது அவ்வளவு முக்கியமான விஷயமல்ல...... என்ன ஜமீன்தார்வாள், நான் பார்க்க வேண்டியதை எல்லாம் பார்த்தாயிற்று...... போகலாமா!" என்று கேட்டபடி புறப்பட்டார் குஞ்சிதபாதம்.

கயால் சந்த் அசட்டுச் சிரிப்புடன், "ஏதாவது புலனகுதுங்களா?" என்று கேட்டார்.

'அதற்குள்ளா?......ஆனல் இன்னும் ஓரிரண்டு மணி நேரத்தில் உங்களை நிச்சயம் ஆச்சரியமடையச் செய்கிறேன்.........அதுசரி, மாடியில் மேல் தளத்திலிருக்கும் கதவு நேற்றிரவு பூட்டப்பட்டதோ?"

"ஓ...... அந்தக் கதவைத் திறந்தே ஆறு மாதத்திற்கு மேலிருக்கும்......இல்லையா, மாதவன்?"

"ஆமாம்......ஆறு மாதத்துக்குக் குறையாது, ஸார்," என்ருர் மாதவன்.

குஞ்சிதபாதம் வெளியே வரும் நேரத்தில் சங்கரலிங்கம் பிள்ளை அவசரமாக உள்ளே நுழைந்தார் "ஓய், கயால் சந்த், இது என்ன கலாட்டா? ......உம் கடையில் ஏதாவது தொலைந்து போனல் என் வீட்டு வேலைக்காரர்களைப் போட்டுத் துளைக்கிருர்களே, இந்தப் போலீஸ்காரர்கள்...... ஏதோ நல்ல சாமானயிருந்தால் யாருந்தான் விலை கேட்பார்கள்.........இதிலே என்ன தப்பு?......... என் கௌரவத்திற்கு இழுக்காக நடக்கிறீர்கள் ......அப்புறம் நான் மான நஷ்ட வழக்குத் தொடருவேன்," என்று கத்தினர்.

அவரைச் சமாதானம் செய்வதற்குள் பெரும் பாடாகிவிட்டது. "உங்கள்மீது எள்ளளவும் சம்சயமில்லை, பிள்ளைவாள்... கோபம் வேண்டாம்," என்று மன்ருடினர் கயால்சந்த்.

சங்கரலிங்கம் பிள்ளை கோபமாக வெளியேறினர். ஜமீன்தாரும் குஞ்சிதபாதமும் நடந்த படியே பேசலானர்கள்.

"உங்களுக்கு ஏதாவது ஒரு விஷயம் புலப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்... இல்லையா, ஸார்?" என்று கேட்டார் ஜமீன்தார்.

"புலப்படுகிறது..." என்ருர் குஞ்சிதபாதம்.

"அது என்ன?"

"இந்தக் கொள்ளையின் நோக்கம்தான் அது... அதாவது இதைத் திருடியவர் இதை விற்கவேண்டுமென்றோ அல்லது தாம் ரகசியமாக வைத்திருக்க வேண்டுமென்றோ விரும்பி அதைச் செய்யவில்லை"

"அப்படி என்றால்?... எனக்குப் புரியவில்லை... ஆனால், எப்படியும் என் வைரம் கிடைத்துவிடும் அல்லவா?"

"அதை நான் கூற முடியாது... ஆனால் திருடனைக் கண்டுபிடித்துவிட்டேன்."

"அப்படியானால் வைரமும் கிடைத்ததுபோலத் தானே?" என்று துள்ளினார் ஜமீன்தார்.

"அதெப்படி சொல்வது?... நான் கொஞ்சம் போலீஸ் ஸ்டேஷன் வரை போய்விட்டு மாலையில் உங்களைப் பார்க்கிறேன்," என்று கிளம்பினார் குஞ்சிதபாதம்.

அவர் செல்லும் திசையையே பார்த்துவிட்டு ஜமீன்தார் பெருமூச்சுடன், "இந்தத் துப்பறியும் நிபுணர்களின் பேச்சும், போக்கும் எவருக்கும் புரியாது!" என்றார்.

இது நடந்த ஒரு மணி நேரத்துக்குப் பிறகு குஞ்சிதபாதம் திரும்ப, கயால் சந்தின் கடைக்குச் சென்றார். "கயால் சந்த், உங்களை ரகசியமாக ஓரிரு கேள்விகள் கேட்க வேண்டியிருக்கிறது ... உங்கள் அறையில் பேசலாமா?" என்று கேட்டார்.

இருவரும் அறைக்குச் சென்று அமர்ந்தனர். குஞ்சிதபாதம் நிதானமாகக் கேட்டார். "ஆமாம், கயால் சந்த், நீங்கள் எப்பொழுது ஜமீன்தாரின் வைரம் போலி என்பதைக் கண்டு பிடித்தீர்கள்?"

கயால் சந்த் நிஜமாகவே துள்ளிக்குதித்து விட்டார். அவர் முகம் வெளுத்தது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "என்ன – என்ன – என்ன சொல்கிறீர்கள்?...... போலியா? எது?...... நானா ஏமாந்து போய் அதை வாங்குவேன்?..." என்று கேட்டார்.

குஞ்சிதபாதம் மறுபடியும் அதே நிதானத்துடன், "போகட்டும். அது போலி இல்லை என்றால் நீங்கள் ஏன் அதை உடைத்தெறிந்துவிட்டு, களவாடப்பட்டு விட்டது என்பதாகப் பிறர் நினைக்கும் பொருட்டு மேஜையையும், மாடிக் கதவையும் உடைத்தீர்கள்?" என்று கேட்டார்.

முகத்தில் வியர்வை அரும்ப, பெரு மூச்சு வாங்க, கயால் சந்த் திணறியபடியே, "உடைத்து எறிந்தேனா?...... என்ன......ஊஹூம்... நான் ஒன்றும் உடைக்கவே இல்லை," என்றார்.

"உடைக்கவில்லை... பாழுங் கிணற்றில் எறிந்தீர்கள். எப்படி இருந்தால் என்ன?"

"இல்லை... அது பொய்.... யார் சொன்னது? ... நம்ம தொழிலுக்கே இது அவமானம்."

"ஏன், கயால் சந்த், அனாவசியமாக மறைக்கிறீர்கள்? ... எனக்கு நேற்றிரவு நடந்தது பூராவும் தெரியும்."

பாவம்! கயால் சந்தின் முகம் உடனே கவிழ்ந்தது. அவர் தோற்றுப் போனார். "மிஸ்டர் குஞ்சிதபாதம், தயவு செய்து இதை வெளிப்படுத்தி விடாதீர்கள்...நான் யாருக்கும் கெடுதல் செய்யவில்லை. ஜமீன்தாருக்குப் பூரா பணமும் திருப்பித் தந்துவிட்டேன் ......என் தொழில் இது வரை நாணயமாகவும், புகழ்பெற்றும் நடந்து வந்திருக்கிறது. அதைக் கெடுத்து விடாதீர்கள்." என்று மன்றாடினார்.

"பரவாயில்லை, கயால் சந்த். ரொம்ப நடுங்க வேண்டாம். உம் வீட்டை நீர் உடைத்தது பெரிய குற்றமல்ல...... ஆனால் என் நிலையைப் பாரும். நான் ஜமீன்தாருக்காக இதில் நுழைந்தேன். இப்போது அவருக்குப் பதில் சொல்லி ஆகவேண்டும். நீரே எல்லாவற்றையும் நேரில் அவரிடம் சொல்வது தான் நல்லது...... ஆமாம் என்னிடம் சொல்லுங்களேன். ஏன் கதவையும் பூட்டையும் நீங்களே உடைத்தீர்கள்?" என்று கேட்டார் குஞ்சிதபாதம்.

"நான் ஏமாந்து போனேன், ஸார். அந்தப் பயல் என்னை ஏமாற்றிவிட்டான். அது மட்டுமல்ல, அந்தக் கல் எல்லோரையுமே ஏமாற்றி விட்டது. யாரும் கண்டுபிடிக்க முடியவில்லையே அது போலி என்று! அதைச் சுத்தம் செய்யும் போதுதான் கண்டு பிடித்தேன். என் தொழில் பெருமையே இதில் அடிபட்டுப் போயிற்று. ஜமீன்தாரிடம் எப்படி இதைத் திருப்பித் தருவது? அவர் என்னைப்பற்றி என்ன நினைப்பார்?......... வைரத்தைப் பற்றியோ ஊர் பூராவும் வாய் ஓயாது பேசிவிட்டது. அது போலி என்றால் என்னைப் பார்த்து எல்லோரும் சிரிப்பார்கள்...... அதைவிட இது மேலல்லவா?...... கல் காணாமல் போய் விட்டது என்றால் அதன் மதிப்புக் குறையவே இல்லை...... இப்படிச் செய்ய நான் மிகவும் சிரமப்பட்டேன், மிஸ்டர் குஞ்சிதபாதம், ஆனால் இதைத் தவிர எனக்கு வேறே வழி தெரியவில்லை. போலியை விற்ற கயவன் என்ற பெயரைக் காட்டிலும் என் மரணத்தையே நான் விரும்புவேன்" என்று முடித்தார் கயால் சந்த்.

"சரிதான்...... ஜமீன்தார் உங்கள்மீது கருணை காட்டுவார் என்று நினைக்கிறேன். ஆனால் உம் நடத்தையால் ஒரு குற்றமும் செய்யாத கௌரவ மனிதர் சங்கரலிங்கம் பிள்ளையின் பெயர் ஊரில் அடிபடுகிறது. மேலும் இதை அடியோடு மறைத்துவிடுவதால் என் திறமையின்மை பலரால் ஏசப்படும் அல்லவா?"

"ஆமாம், மிஸ்டர் குஞ்சிதபாதம். ஆனால் என் நிலையைப் பாருங்கள். நான் வயதானவன்...

கயால்சந்துக்கு ஈடு எவருமில்லை என்று வியாபாரத்தில் பெயர் வாங்கியவன்...''

''சரி... சரி... பார்ப்போம்...''

''மிஸ்டர் குஞ்சிதபாதம், நான்தான் கதவுகளை உடைத்தேன் என்று எப்படிக் கண்டுபிடித்தீர்?... ஒரு தடயம்கூட இராதபடி நான் சர்வ ஜாக்கிரதையாய் இருந்தேனே!''

''அப்படியா? ஆனால் எல்லா இடங்களிலும் எனக்கு வேண்டிய தடயங்கள் கிடைத்தன. முதலாவது வைரம் தொலைந்ததும், தொலையாததுமாக நீர் பத்தாயிரம் ரூபாயைத் திருப்பி அனுப்பியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அது திரும்பக் கிடைக்காது என்று நீர் முடிவு கட்டிவிட்டீர், இல்லையா? உம்மைப் பொறுத்தவரை நீர் மிக்க நாணயஸ்தர்தான் என்றாலும், இத்தகைய செயல் கொஞ்சம் ஆச்சரியமானதுதான்... அதை நான் ஞாபகத்தில் வைத்துக்கொண்டேன்.

''அடுத்தபடி இங்கு வந்ததும் எனக்குப் பல தடயங்கள் கிடைத்தன. மாடி அறையில் இருந்த பழங்குல்லாய்தான் எனக்கு நிரந்தரமான நல்ல தடயமாக உதவியது''

''எப்படி?''

''நேற்று இரவு ஏழு மணி முதல் ஏழரை வரை மழை பெய்தது. அதற்குப் பிறகு மழையே இல்லை... இப்படி இருக்கையில் குல்லாயின் மீது மாதக் கணக்காகப் படிந்திருந்த தூசியில் பல மழைத்துளிகள் பட்டுத் திட்டுத் திட்டாக இருப்பதைக் கவனித்தேன்... நீரோ எட்டு மணிக்குத்தான் கடையைவிட்டுப் போயிருக்கிறீர். அப்படியிருக்க வேறு எவர் அந்த நேரத்தில் வந்திருக்க முடியும்?... எட்டு மணிக்குப் பிறகு நடந்திருந்தால் மழைத் துளிகள் பட ஏது இடம்?''

''ஸார், உங்க மூளையே மூளை.''

''அடுத்ததாக மாடியில் தோல் பையில் மழைத்துளியே இல்லை. திருட்டு நடந்த சமயமாயிருந்தால் இதில் மழைத்துளி பட்டிருக்க வேண்டுமே! ....மேலும் கடப்பாரை அல்லது கோடரா இருக்கிறதா என்று கேட்டபோது நீர் ''இல்லை'' என்று கூறிவிட்டீர். ஆனால் அங்கே கிடந்த பல மரப் பெட்டிகள் உடைக்கப்பட்டுக் கிடந்த நிலையில் இத்தகைய ஒரு ஆயுதம் இன்றி அது எப்படி முடிந்திருக்கும் என்று நான் சம்சயித்தேன். ஒரு வேளை அதைக் காட்டினால், அதை வைத்துக் கொண்டே கதவுகளை உடைத்திருக்க முடியும் என்று நான் கண்டு பிடித்து விடுவேன் என்று பயப்பட்டீர்கள் இல்லையா?'' என்று கேட்டார் குஞ்சிதபாதம்.

''ஸார், உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்......என் தொழில் கௌரவத்தை உத்தேசித்தே.........'' என்று திணறினார் கியால்சந்த்.

* * *

வருஷங்கள் பல மறைந்தன. குஞ்சிதபாதத்தால் கண்டு பிடிக்க முடியாமற் போன இக் கொள்ளையை ஜனங்கள் மறந்தே போனார்கள். ஆனால் இரண்டு கனவான்களின் நிரந்தரப் புகழைக் கெடுக்காமலிருக்கத் தம் புகழை அவர் தியாகம் செய்தார் என்பதை இப்போதாவது எல்லோரும் உணர்ந்து கொள்ளட்டும்.

(ஆர்தர் மோரியன் எழுதிய கதையின் தழுவல்)

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு			மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

குழந்தையும் நாமும்

ஸ்ரீ.

How shall we teach
A child to reach
Beyond himself and touch
The stars,
We who have stooped so much?

மனித நிலையிலிருந்து மிக மேலாக உயர்ந்து
விண்ணையும் தொடும் ஆற்றலை ஒரு குழந்தைக்கு
நாம் எப்படிக் கற்றுத் தருவோம்—மிகவும்
கீழான நிலையில் தாழ்ந்துவிட்ட நாம்?

How shall we tell
A child to dwell
With honour, live and die
For Truth,
We who have lived a lie?

"நாணயமாகவும் கௌரவமாயும் வாழ்ந்திரு;
உண்மையின் பொருட்டே உயிர் வாழ்ந்து,
அதற்காகவே உயிர் விடு" என்று ஒரு
குழந்தையிடம் எப்படிச் சொல்வோம்—
பொய்யோடு பொய்யாய் வாழ்ந்துவிட்ட நாம்?

How shall we say
To him, 'The way
Of life is through the gate
Of Love,'
We, who have learned to hate?

"வாழ்க்கையின் சரியான பாதை அன்பின்
வழிதான்" என்று அவனிடம் எப்படிக்
கூறுவோம்—வெறுக்கவே கற்றுவிட்ட நாம்?

How shall we dare
To teach him Prayer
And turn him toward the way
Of Faith,
We who no longer pray?

பிரார்த்திக்கக் கற்றுக் கொடுக்கவும், அவனை
ஆஸ்திகனாக மாற்றவும் எப்படித் துணி
வோம்—பிரார்த்தனையே செய்தறியாத நாம்?

MILTRED R. HOWLAND,
'Atlantic Monthly' (1949)

புத்தக விமர்சனம்

ஹிக்கின்பாதம்ஸ் வெளியீடுகள்.

அமெரிக்கா—சில உண்மைகள்

தமிழாக்கம் (D. தோத்தாத்திரி.)

விஞ்ஞான முன்னேற்றத்தால் உலகின் எப்பகு திக்கும் சில மணி நேரங்களில் சென்றுவிடக் கூடிய இந்நாளில் உலகத்து நாடுகளை அறிந்து கொள்ளுதல் மக்களுக்கு இன்றியமையாதது. அதுவும உலகத்திலேயே முக்யத்துவமடைந்த அமெரிக்காவைப் பற்றிய சில உண்மைகளை யாவரும் அறிய வேண்டியதே. இப்படிப் பல வரவேற்கத் தகுந்த உண்மைகளைக்கொண்டுள்ள இச்சிறு புத்தகம் பல விஷயங்களை ஆச்சரியப் படத்தக்க முறையில் சுட்டிக்காட்டியுள்ளது. உதாரணமாக – "அமெரிக்காவில் பொது நலச் சேவைசெய்பவர்கள் உண்மையில் காலரா, மஞ்சட் காமாலை, அம்மை, டைபாயிட் இன்னும் அநேக விதமான வியாதிகளைக் களைந்தெறிந்துவிட்டனர்; அமெரிக்காவில் 'பெரிய விளையாட்டு' என்று கூறப்படும் "பாஸ்கட் பால்" (Basket ball) 1947—48இல் சுமார் 75,000,000 டாலருக்கு மேல் வசூல் செய்துகொடுத்து 20,324,987 சபை யோர்களையும் வசீகரித்தது. அமெரிக்காவில் நான்கு நபர்களுக்கு ஒரு டெலிபோன் வீதமும் ஒவ்வொரு மூன்றும் மனிதனுக்கும் ஒரு மோட்டார் வண்டியும் உள்ளன. அமெரிக்கச் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஆண்களைவிடப் பெண்கள் ஆதிக்கம் சிறிது அதிகமாக இருக்கிறது":—

தமிழில் ஒரு நாட்டைப்பற்றி அறியக்கூடிய சில உண்மைகளை வெளியிட்டிருக்கும் புத்தகங்களில் இதுவும் ஒன்று.

பெண்

"அகிலன்" எழுதியது. கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர்-சென்னை-4

விலை ரூ. 1—8—0

பெண்! பெண்ணென்றால் என்ன? பெண்மை என்றால் என்ன? அது ஒரு விளங்காத புதிர். ஆம், ஆண்களுக்கு அது அணுவளவும் விளங்காது. அவர்களுக்கு அது தெரியுமோ என்னவோ அதுவும் விசித்திரந்தான்! பெண் அன்பின் உருவம். இல்லை, அகந்தையின் பிறப்பிடம்! பெண் அழகின் மலர்ச்சி. இல்லை. அழிவின் தொடர்ச்சி. இல்லை இல்லை பேய்! ஊஹூம், அவள் பேயுமல்ல தெய்வமுமல்ல—பெண்—வெறும் பெண்–இப்படி பல சிந்தனைத் தொடரில் சிக்கித் தவிக்கும் ஒரு மாயப்புதிரே அகிலனின் பெண். ஒரு அரிய நாவல்.

விவசாய முன்னேற்றம்:

பதிப்பாளர்:

யு. எஸ். இன்பர்மேஷன் ஸர்விஸ்-மதராஸ்.

சில வருஷங்களாகவே உணவுப் பிரச்னை நம் நாட்டினரைவெகுவாகப் பாதித்திருக்கிறது. ஏனெனில் விவசாய நாடாகிய இந்தியாவில் 6·6கோடி விவசாயிகள் விவசாய முறையில் பெரு ஊக்கத் துடன் முயற்சி எடுக்காததே காரணமாகும். இந்தியா கவர்ன்மெண்டாரின் ஐந்து வருடத் திட்டத்தின்படி விவசாயிகள் பல நன்மைகளை அடைகிறார்கள். எனினும் அவர்கள் அதை அனுபவ முறைப்படி கையாள ஒரு விவசாய நிபுணர் அவ்வப்போது யோசனை கூறி' விவசாயிகளிடையே பழகி, அவர்கள் தேவைகளை அவர்கள் வாயிலாகவே அறியப் பயிற்சி பெற்றிருக்கிறார். இப்படிப் பல அமெரிக்க விவசாய நிபுணர்கள் எப்படி இந்தியாவில் கிராமாந்தர மக்களுக்குத் தொண்டாற்றுகின்றனர் என்பதை இப்புத்தகம் நன்கு விளக்குகிறது. பல படங்களுடன் கூடிய புத்தகம் விவசாய முன்னேற்றத்திற்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பது நிச்சயம்.

'நீக்ரோ'—அமெரிக்க வாழ்க்கையில்

"சுதந்திரமும் சமத்துவமும் மனிதனின் பிறப்புரிமை" என்ற பல்லவியை அமெரிக்கக் குடியரசு பாடிக்கொண்டேயிருக்கிறது. அதே சமயம் தேசிய நிர்வாகத்தில் நீக்ரோ அடிமைத்தனம் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. சென்ற ஐம்பது ஆண்டுகளில் அமெரிக்க நீக்ரோ கல்வி, சமூகம், பொருளாதாரம் என்ற எல்லாத் துறைகளிலும் முன்னேறியிருக்கிறான். எனினும் அங்கு மாந்தர் உறவு முறை இன்னும் மாண்புறவில்லை. ஏனெனில் அமெரிக்க ஜனநாயகத்தின் வேர் புழுக்களாகிய தாரதம்மியம், பக்ஷபாதம் ஆகியவைகள் திடீரென மறையாமல் சிறுகச் சிறுக மறைவதே காரணமாகும். இன்றைய அமெரிக்காவில் நீக்ரோவின் உரிமைகள் பெற்றோர் பேச்சிலும், வேலைசெய்யும் இடங்களிலும், பள்ளியிலும் மாணவர் கல்லூரியிலும் உயர்வடைந்திருக்கின்றன. நியூயார்க் சர்வகலாசாலையில் இருப்பதைப் போன்ற இன உறவு முறைப் பள்ளிகள், சமூகக் கதி சாஸ்திரம் (Social Dynamics) இவ்வாராய்ச்சிகள் மூலமும், நீக்ரோ மாந்தர் வாழ்க்கை வரலாறுகளைக் குறிப்பிடும் பல புத்தகங்களினாலும் சினிமா படங்களினாலும் லக்ஷக்கணக்கான அமெரிக்கர் நீக்ரோக்களைப்பற்றி அதிகம் அறிந்து கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. எனவே இவ்விருபதாம் நூற்றாண்டு அமெரிக்கனுக்கும் நீக்ரோவுக்கும் ஒரு புதிய சகாப்தத்தை அளித்தது எனக் கூறலாம்.

இப்படி அமெரிக்க வாழ்க்கையில் "நீக்ரோ"வைச் சித்திரித்திருக்கும் இப்பதிப்பகத்தார் "உலக வாழ்க்கையில்—நீக்ரோ" என்று பெயரிட்டு உலகத்தில் வசிக்கும் நீக்ரோக்களின் வரலாறுகளை எடுத்துக் காட்டினால் மிகவும் சிறப்புவாய்ந்ததாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

கலைக் கோவில்

புத்தகாலயக் கலையை விளக்கும் நூல்

ஆசிரியர்: த. கிருஷ்ணமூர்த்தி,
கலைமகள் காரியாலயம்–சென்னை-4
விலை ரூ. 1—0—0

படிப்பதற்கே புத்தகம் என்பதும் வெறும் அலங்காரத்திற்காக அல்ல என்பதும் அனைவருக்கும் தெரியும். இருந்தாலும் பழைய வாசனையின் சாயல்கள், இன்னும் நீங்கினபாடில்லை. படிக்காதவர்களும்,ஏன் படித்தவர்களில் அநேகர்கூடப் படித்த முட்டாளாக உள்ளனர். படிக்காதவர்களில் பாதிப் பேர் வசதி இல்லாமலும் மற்றும் பலர் படிப்பது எட்டிக்காயைச் சுவைப்பதுபோன்றதாகும் என்றும் அது அறிவாளிகளுக்கே உரியது என்ற அலக்ஷிய மனப்பான்மையோடு கூடியுள்ளனர். படித்தவர்களில் பலர் நாம் படித்தது போதும் என்றும் அறிந்துகொள்ளாத விஷயங்களை அறியவேண்டும் என்ற ஆவல் இல்லாதவர்களாயும் உள்ளனர். கும்பகோணம் வெற்றிலை டில்லியிலும், பங்களூர் மாம்பழம் லண்டனிலும் கோழிக்கோடு முந்திரிப் பருப்பு வாஷிங்டனிலும் விற்கும் இக்காலத்தில் கல்வி அறிவும் பொது அறிவும் இல்லாமலிருப்பது என்பது சிரமமான காரியம். ஏன், முடியவே முடியாது. கோடிக்கணக்கான ரூபாய்களைப் பலதரப்பட்ட ஆராய்ச்சிகளில் செலவிட்டு அதன் பலன் ஆராய்ச்சிக் கூடத்துடனே நின்றுவிடாமல் இருக்கும் வழி என்ள்? முதியோர்கல்வியும் சர்வ ஜனக் கல்வியுமே. இதை எப்படி நடைமுறையில் கொண்டுவருவது, நாடெங்கும் ஆங்காங்கே அமைந்துள்ள புத்தகாலயங்களை எப்படிச் சிறந்த முறையில் திருத்துவது, அனைவருக்கும் புத்தகம் என்றும் படிப்பதற்கே என்ற எண்ணத்தை சாத்தியமாக்கவும் ஊர்தோறும் கலைக்கோவில்களான புத்தகாலயங்களை உண்டாக்கவும் ஆன வழிகளை இந்நூலாசிரியர் தமது பரந்த அனுபவத்துடன் மணிமணியான சொற்களில் அருமையான விஷயங்களைத் தொகுத்துக் கொடுத்துள்ளார். சிறுவர்களுக்கு நூல்களினிடம் ஆர்வம் உண்டாகும். விதம் கடைசி அத்தியாயம் அற்புதமாக அமைந்துள்ளது. அனைவரும் படித்து மகிழவேண்டிய நூல்.

சந்திரா

எஸ். எஸ். சர்மா எழுதியது விலை ரூ. 1—0—0
கிடைக்குமிடம்:—மாலா பப்ளிகேஷன்ஸ், 3/4
எல்டாம்ஸ் ரோடு, சென்னை-18.

நாவல் எழுத வேண்டும் என்று நினைத்தால் அவ்வெழுத்தாளர் சிறந்த கற்பனைத்திறனும் அனுபவமும் உயரிய கருத்துடன் கூடியதாயுள்ள ஒரு சிந்தனையே உருவாக்க வேண்டும். மழைக் கால வருகையைக் குறிக்கும் இரட்டைத் தவளைகள் போல் காதல் நாடகங்களும் ஆபாசமான புத்தகங்களுமே தமிழ் நாடெங்கும் தோன்றியிருக்கின்றன. ஒரு சிலரே நாவலின் அம்சங்களைச் சிறந்த முறையில் தேர்ந்தெடுத்தும் நடைமுறையில் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் "சந்திரா"வைப் பொருத்தமட்டில் பிரமாதமான கற்பனைத்திறன் என்று சொல்ல முடியாவிடினும் ஓரளவு வெற்றி என்றே கூறலாம். அன்றாட வாழ்க்கையில் சகஜமாக நிகழக்கூடிய சம்பவங்ககள் கதையில் அளவோடு வருகின்றன. கதையின் முடிவும் படிக்கும்போதே வாசகர் எதிர்பார்க்கும் முடிவைக் கொடுக்கிறது. மொத்தத்தில் இந்நாவலாசிரியரின் முதல் நாவலான "சந்திரா" கதா பாத்திரங்களை ஜீவன் ததும்பச் செய்யும் ஒரு நாவல் எனக் கூறலாம்.

ஹிக்கின் பாதம்ஸ் வெளியீடு

'நான்காம் அம்சம்'

சுதந்திர உலகில் ஒவ்வொரு நாட்டிலும் எத்தனையோ சங்கடங்கள், எத்தனையோ சிக்கல்கள் காணப்படுகின்றன. மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டு உயர்வு பெறும் ஓர் சிறந்த திட்டமே 'நான்காம் அம்சம்' ஆகும். ஜனாதிபதி ட்ரூமனின் நான்காம் அம்சத்தின்படி அமெரிக்கத் தொழில் நுட்ப அறிவை மற்ற நாடுகளுக்குப் பகிர்ந்து கொடுத்து, அதனால் பெறும் பலனைக் கண்டு இரு நாடுகளும் ஆனந்தப்படுவதே அதன் முக்ய நோக்கமாம். இருபத்திரண்டு பக்கங்களை உடைய இச்சிறு புத்தகம் எப்படிப் பல நாடுகளில் இத்தகைய கூட்டுறவு முறைகள் நடந்து சிறப்புற்றிருக்கின்றன என்பதை விளக்குகிறது.

ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் அருளிய

"பஜ கோவிந்தம்"

(தமிழ் கருத்துகளுடன் கூடியது.)

பிரசுரகர்த்தர் :— ஆக்கூர் K. S. ஸ்ரீநிவாஸன்
விலை 0—4—0

கிடைக்குமிடம் —
சுகுணா பப்ளிஷிங் ஹவுஸ்
60, ஈசுவரன் கோவில் தெரு,
மதராஸ்-17

ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்கள் 'பஜ கோவிந்தம்' என்ற சிறிய ஸ்தோத்திரம் மூலமாக வேத உபநிஷத், புராணம் முதலிய புத்தகங்களின் கருத்தை, அதிலும் சிறப்பாக 'ஸ்ரீமத் பாகவதம்" என்னும் புராணத்தின் உட்கருத்தை மிக அழகாக வெளியிடுகிறார். அப்படி வெளியிடப்பட்ட பஜ கோவிந்தத்தை இதன் பிரசுரகர்த்தர் ஆக்கூர் K. S. ஸ்ரீநிவாஸன் அவர்கள் தமிழில் கருத்துடன் கூடியதாக எளிய நடையில் பிரசுரித்துள்ளார். யாவரும் படிக்க வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தில் இந்தப் புஸ்தகம் வியாபார தோரணையில் அல்லாமல் மிகவும் குறைந்த விலையில் வெளியிடப்படுகிறது. இம்மாதிரி புத்தகங்கள் மேலும் மேலும் வெளியிடப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

Edited & Published by N. R. Ramanujam & Printed by S. Rangaswami
at the Cauvery Colour Press, Besant Road, Kumbakonam.

ஆனந்த வாழ்க்கை

திருப்தி மிளிர்கிறது அவர் முகத்தில். அவள் கையால் ஆசையுடன் போட்டுக் கொடுத்த அந்த ஒரு டம்பிளர் 'டீ'யைக் குடித்தார். நாள் முழுவதும் ஆபீஸில் உழைத்த அவர் களைப்பு பறந்தோடி விட்டது. உற்சாகம் அடைகிறார். இனி மனைவியுடன் சரச சல்லாபம், குழந்தைகளுடன் விளையாட்டு. ஆனந்த வாழ்க்கைக்கு வேறு என்ன வேண்டும்?

தினம் கணவன் வீடு திரும்புதலை அவள் ஆவலுடன் மட்டுமல்லது முன் யோசனையுடன் ஒரு டம்பிளர் 'டீ'யுடன் எதிர்பார்க்கிறாள்.

உற்சாகமளிக்கும் 'டீ' போடுவது எவ்வளவு சுலபம்! செலவுக்கு செலவும் குறைவு; நொடிப் பொழுதிலே தயாரித்து விடலாம். நல்ல 'டீ'யை தினம் ரஸித்துக் குடியுங்கள்.

மந்திர சக்தியுள்ள
'டீ'யைக் குடியுங்கள்.

ஸென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

C.T.B. 60

The Cauveri Colour Press, Kumbakonam.